
பதிவு இலக்கம் : 105267
வார இதழ்
# தீபம்
02.06.2019 தீபம் - 184
விலை ரூபா 30.00



## “மதச்சார்பின்மை என்ற முகமூடியைப் போட்டு நாட்டை ஏமாற்ற முடியாது”

## இந்தியாவின் எதிர்காலம்?

## காங்கிரஸ்?

### ஞானசார தேரர் அரசியலுக்குள் பிரவேசிக்கமாட்டார்.
- மத்திய மாகாண ஆளுநர்

### அப்துல் ரஸீக்கைப் பிடியுங்கள் இல்லையேல் நாம் பிடிப்போம்.
- ஞானசாரர் எச்சரிக்கை.

இது தமிழ்பேசும் மக்களுக்கான தனித்துவமான பத்திரிகை


கண்ணாயிரம்
அரைக்கும்
ஆலை
நெல் குற்றுதல், அரிசி மா மற்றும்
மிளகாய்த் தூள் வகைகளை
சுத்தமாகத் திரித்துப் பெற்றுக்
கொள்ள
கண்ணாயிரம்
அரைக்கும்
ஆலை
கண்ணன் கோயிலடி, கனகபுரம், கிளிநொச்சி.
T.P: 0772844706
உரிமையாளர்: செ.சூரியகுமார் (கண்ணன்)
இல.9, கனகபுரம், கிளிநொச்சி.


வரணி சிட்டிவேரம் கண்ணகி அம்மன் ஆலயத்தின்
வருடாந்த உற்சவத்தின் தேர், தீர்த்த உற்சவம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்
கண்ணகை
சேவிஸ் நிலையம்
அனைத்து வாகனங்களையும்
உரிய முறையில் சேவிஸ் செய்து தரப்படுவதுடன்
வாகனங்களுக்கு உரிய உதிரிப்பாகங்களையும்
பெற்றுக் கொள்ளலாம்.
உரிமையாளர்: எஸ்.சந்திரமோகன்
T.P:0774378950
பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.


வரணி சிட்டிவேரம் கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த
உற்சவத்தின் தேர், தீர்த்த உற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்
KUPUTHU HOTEL
குபுது ஹோட்டல்
Chinese, indian & Sri Lankan Foods
உங்கள் அனைத்து வைபவங்களுக்கு ஏற்ற உணவுகளை
ஓடர் மூலம் பெற்றுக் கொள்ளவும் மற்றும் அனைத்து
உணவுகளையும் பெற்று மகிழ்ந்திட
We Undertake Catering Orders
Kandy Road, Kodikamam.
Tel: 021 227 1661 / 077 950 7751


பளை பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம் (வ-து)
Palai Palm Development Co - operative Society (Ltd)
பதிவு இல: P/A 52
பதிவு திகதி: 18.03.1972
கண்டி வீதி, பளை
kandy Road, Palai. T.P: 021 320 7697
வரணி சிட்டிவேரம் கண்ணகி அம்மன்
ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின்
தேர், தீர்த்த உற்சவம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்
எமது தயாரிப்புக்கள்:
❖வெல்ல உற்பத்தி
❖ போத்தலில்
கள் அடைத்தல்
❖ பனை தும்பு உற்பத்தி
❖ பனம் களி உற்பத்தி
❖ பனை சார் கைவினைப்
பொருள்கள்
எனப் பல.....


வரணி சிட்டிவேரம் கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த
உற்சவத்தின் தேர், தீர்த்த உற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்
காயத்திரி ரெக்ஸ்
இல.277, பருத்தித்துறை வீதி, கொடிகாமம்
சாறி வகைகள்,
பஞ்சாபி, சோளிகிற்,
ஸ்கேட், & பிளவுஸ்,
சிறுவர்களுக்கான ஏற்ற
ரெடிமெட் ஆடைகளின்
மகத்தான தெரிவிற்கு
GAYATHIRI TEX
No.277, Pointpedro Road, Kodikamam.

வார இதழ்
தீபம்
"யாமார்க்கும் குடியல்லோம்"
02.06.2019 இதழ் -184
gmail:- newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் TP:- 021 4927542, 0771989445

# ஒன்றுபட்டு யோசிக்க வேண்டிய தருணம்

நாடு முழுவதும் அவசரகால நிலை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதாக அரசு அறிவித்துள்ளது.

பாதுகாப்பு கட்டமைப்புக்கள் பலப்படுத்தப்பட்டு மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

பாதுகாப்பு படையினருக்கு அபரிமிதமான அதிகாரம் வழங்கப்பட்டு அன்றாடம் அவ்வப்போது சுற்றி வளைப்பு - தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேகத்திற்கிடமானவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு செயற்பாடுகள் நாட்டின் இன்றைய சூழலில் இறுக்கமாக இருப்பது தவிர்க்கமுடியாததென்று ஆட்சியாளர்கள் மட்டுமல்ல ஆன்மீக பீடத்தலைவர்களும், அதிகார வர்க்கத்தினரும் அங்கீகரித்துள்ளமை அவர்களைப் பொறுத்தவரை நியாயமானதாக இருக்கலாம்.

இந்த மேலோர் வட்டம் தம்மை எந்த விதத்திலும் எல்லாக் காலத்திலும் பாதுகாத்துக் கொள்ளும் அதிகார வல்லமை கொண்டோராக இருப்பது ஜனநாயகம் என்று சொல்லப்படும் வார்த்தையின் எழுதப்படாத சிறப்பம்சமாகும்.

இதனை இவர்களை பாதுகாக்கும், வளர்க்கும், இவர்களைத் தமது விசுவாசமான மகாஜனங்களாகக் கருதும் அயலக, சர்வதேச வல்லாதிக்க சக்திகளும் கண்களை மூடிக் கொண்டு அங்கீகரிப்பதும் ஆச்சரியமான விடயமல்ல.

காலம் காலமாக இந்த நிகழ்வுகள் எமது நாட்டின் வரலாற்றில் ஜனநாயக பாதுகாப்பு அம்சங்களாக பதிவாகியும் உள்ளது.

பெரும்பான்மையினம் சிறுபான்மை இனங்களை கட்டி ஆளவும், அதே சமயம் பெரும்பான்மையின மனித நேயர்களை வாயடைக்க வைக்கும் "மௌன" ஆயுதமாகவும் மட்டும் அல்ல பேரினவாதப் பயங்கரவாதத்திற்கு மறைமுக ஊக்க சக்தியாகவும் கூட இந்த அவசரகால நிலைமை சட்டவிதி முறைகள் பயன்பட்டு வந்துள்ளதும் கூட வரலாற்றுப் பதிவுகளைக் கொண்டதாகவே உள்ளது.

எதுவானாலும் -

புதிய பயங்கரவாதச் சட்டம், அவசரகாலச் சட்டம், என இந்த வரிசையில் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கென இன்றும் எத்தனையோ சட்டங்களை கொண்டுவரும் உரிமையை அரசுக்கு அதனை ஆட்சிப்பீடத்தில் ஏற்றியதன் மக்கள் வழங்கியுள்ளார்கள் என்பதும் கவலைக்குரிய நிஜமே.

எனவே மக்கள் தாங்கள் விதைத்ததை தாங்களே அறுவடை செய்ய வேண்டியது அவர்கள் விதிப்பயனே.

அவசரகால நிலைமை மக்களுக்கு பாதுகாப்பினை எந்தளவில் வழங்கப்போகிறது என்பது காலக் கணிப்பீட்டுக்குள் அடக்கப்போகும் விடயம்.

ஆனால் இந்த அவலங்களையும் தாங்கிக் கொண்டு அச்சமும் பேடிமையும், அடிமைச் சிறுமதியும் கொண்ட சாமானியர்களாக எத்தனை காலம் வெறுமனே சுவாசித்துக் கொண்டு வாழப்போகிறோம் - கொஞ்சமேனும் யோசிக்கலாமே!

# ஐந்து தசாப்தமாக ஆறாத கவலை




கார்த்திகை 1969 ஆம் ஆண்டில் சிரித்திரன் சுந்தர் அவர்கள் வரைந்த கருத்தோவியம் இன்றைக்கும் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பாருங்கள்




"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்
அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலையின் றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்ன உரைப்பது கேட்டிரோ!"

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கி,இவ் வையம் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்
நாணும் அச்சமும் நாட்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டிரோ!"

- மகாகவி
சுப்பிரமணிய பாரதியார்.

# ஐ.எஸ் தாக்குதலும் தமிழ் மக்களும்



கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நிகழ்ந்து ஏறக்குறைய ஒரு மாதமாகிவிட்டது. தென் இலங்கையிலும் நிலைமை வேகமாக சுமூக நிலையை எட்டியது. குறிப்பாக தென்னிலங்கை ஏனைய பிரதேசங்களைவிட அமைதியாகவும் குழப்பமின்றியும் செயல்படுகின்றது. ஆனால் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் வடக்கு மாகாணம் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதற்கான காரணம் இத்தாக்குதலையடுத்து வடக்குக் கிழக்கிலுள்ள இளைஞர்கள் மீளவும் வன்முறைப்போராட்டத்தில் ஈடுபடலாம் என்ற அச்சம் தென்னிலங்கைக்கு ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர். அதனை விட ஐ.எஸ். தமிழ் மக்கள் மீது தாக்குதல் நிகழ்த்தலாம் என்று தென்னிலங்கை கருதுவதாக தெரிகின்றது. அதுமட்டுமன்றி தமிழ் மக்களை தமது கண்காணிப்புக்குள் வைத்துக்கொள்வதுடன் தொடர்ச்சியான நெருக்கடிக்குள் வைத்துக்கொள்வதும் அவசியம் என தென்னிலங்கை கருதுகின்றது. இதிலிருந்து தமிழ் மக்களை சுமூக நிலைக்கு கொண்டுவரவேண்டிய சூழல் தவிர்க்கமுடியாதது. இக்கட்டுரையும் அத்தகைய வாய்ப்புக்களை வெளிப்படுத்துவதாக உள்ளது.

தமிழ் மக்கள் கடந்த 30 வருடங்களாக பாதிக்கப்பட்டவர்கள். மிக மோசமான நிலையை அனுபவித்தவர்கள். ஐரோப்பியரது வருகையில் இருந்து சுயாதிபத்தியத்தை தமிழர்கள் படிப்படியாக இழந்தவர்கள். சுதந்திரத்துக்குப் பின்பான காலம்முழுவதும் பாரபட்சமான அரசியல் சமூக பொருளாதார செயன்முறையான தமிழர்களின் அந்தஸ்து இரண்டாவது நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. 2009 முள்ளிவாய்க்கால் தமிழர்களின் சுயத்தை முற்றாகவே பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

ஆனால் தற்போது சிரியாவிலும் ஈராக்கிலும் வளர்ந்த ஐ.எஸ். என்னும் அமைப்பினை முதன்மைப்படுத்திக்கொண்டு இஸ்லாமிய தீவிரவாதத்தின் பெயரால் தமிழ் மக்கள் சுற்றிவளைப்புக்கும் சோதனைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். ஆலயங்களையும் பாடசாலைகளையும் இலக்குவைத்து வெளிவரும் அநாமதேய கடிதங்களுக்கு அதீதமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அத்தகைய நடவடிக்கைகளை உற்று நோக்கும்போது அநாமதேய தகவல்களுக்குப் பின்னுள்ள அரசியல் பற்றிய எண்ணம் தமிழ்மக்களுக்கு ஏற்படுகின்றது.

வடக்கு இராணுவத்தளபதி வட தேசம் சுமூகமாக உள்ளது என்றும் தமிழ் மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்றும் அறிக்கை மூலம் தெளிவுபடுத்தி வருகின்றார். அதன் சாராம்சம் வடக்கில் ஐ.எஸ். இன் அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்று கூறுகின்றார். ஆனால் சுற்றிவளைப்புக்களும் சோதனைகளும் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றது.



இதனால் நாளாந்த வாழ்க்கை முறை பாதிக்கப்படுகின்றது. கல்வி, வேலை பாதிப்பதுடன் அமைதியின்மை, அச்ச உணர்வு தமிழ் மக்களிடம் மீண்டும் ஏற்பட்டுள்ளது. இது தமிழ் மக்களுக்கு ஒன்றும் புதியதில்லை என்பது உண்மையானது. அதற்காக அவர்கள் ஏன் தொடர்ச்சியாக பாதிக்கப்படவேண்டும் என்பது நியாயமான கேள்வியாகும். அது மட்டுமன்றி தமிழ் மக்களுக்கும் ஐ.எஸ்க்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. அதன் தாக்குதலுக்கு பலியாகியுள்ளார்களேயன்றி அந்த செயற்பாட்டுக்கு எந்தவிதத்திலும் பங்கெடுக்காத மக்கள் இப்படியான நடவடிக்கையை ஏற்றுக்கொள்ளாதவர்கள். அப்படியான சூழலில் மீளவும் அவர்களைத் துன்புறுத்துவது நியாயமாக அமையாது.

அரசாங்கமும் அதன்இயந்திரமும் தமிழ் மக்கள் மீதான நடவடிக்கைகளைமேற்கொள்ளும் போது அவர்களது மனோநிலையை கருத்தில் கொள்ளவேண்டும். கடந்த 70 வருடங்களாக தமது சொந்த இருப்புக்காக அதிகமானவற்றை இழந்தவர்கள். மீண்டும் அவர்களைக் காயப்படுத்துவது ஆரோக்கியமான அரசியலுக்கு வித்திடாது. சந்தேகமும் அவநம்பிக்கையும் அதீதமாகும். தமிழ் மக்களை கெடுபிடிக்குள் வைத்துக் கொள்வதால் ஆட்சியாளர்கள் எதனையும் சாதித்துவிட முடியாது. இந்த நெருக்கடியைக் கண்டும் அமைதியாக இருக்கும் அரசியல்வாதிகள் பாராளுமன்றத்துக்கு உள்ளும் வெளியேயும் இத்தகைய நடவடிக்கைகளை தவிர்க்க போராடுவது அவசியமாகும். கெடுபிடிகளைத் தவிர்ப்பதற்கு உரிய அதிகாரிகளைச் சந்தித்து தொடர்ச்சியாக அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும். அறிக்கைகளால் மட்டும் அழுத்தம் சாத்தியமாகாது. ஜனநாயகத்தை மீட்க எடுத்த பிரயத்தனத்தில் ஒரு சதவீதத்தினையாவது தமிழ்மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிக்கு தமிழ் அரசியல்வாதிகள் முயல்தல் வேண்டும்.

அடுத்து அரசியல்வாதிகளின் பாராமுகத்தையும் அரச இயந்திரத்தின் நடவடிக்கையையும் சிவில் மற்றும் மத அமைப்புக்கள் ஒன்றிணைந்து எதிர்கொள்ள வேண்டும். போர்க்காலத்தில் சிவில் அமைப்புக்கள் செயற்பட்டது போல் தற்போதும் செயற்பட வேண்டும். மத அமைப்புக்களும் சிவில் அமைப்புக்களும் அரச இயந்திரத்துடன் உரையாடவேண்டும். தொடர்ச்சியான சந்திப்புக்களும் புரிந்துணர்வுக்கான நடவடிக்கையிலும் ஈடுபடுவது உடனடித் தேவையாகும். அரசியல்வாதிகள் விடும் தவறுகளை சரிசெய்ய வேண்டிய பொறுப்பு மத அமைப்புக்களுக்கும் சிவில் அமைப்புக்களுக்கும் உண்டு. தேவையான கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டுசென்ற அமைதியற்ற சூழலை மாற்றவேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்ச உணர்வை கையாள்வதற்கு மத அமைப்புக்கள் முன்வருவதே இலகுவானதும் சுலபமானதும் ஆகும். அத்தகைய சிவில் மற்றும் மத அமைப்புக்கள் உள்ளூர் ஆட்சி மட்டத்திலுள்ள சிவில் பங்கெடுப்பாளர்களை ஒருங்கிணைத்து சுமூகமான சூழலுக்குரிய வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டும்.

எனவே இன்றைய நெருக்கடி மிக்க சூழலை அறிவுபூர்வமாக எதிர்கொள்ளுதல் வேண்டும். உணர்வுகளைவிட அறிவு சார்ந்த நெருக்கடிக்கு முடிவு எட்டவேண்டும். சுமூகமாக ஒன்றிணைந்து செயற்பட அனைத்துத் தரப்பும் முயற்சித்தல் அவசியமானது. இத்தகைய கெடுபிடி நீடிக்க வழி ஏற்பட்டால் அதீத விளைவுகளை தமிழ்மக்கள் மீளவும் எதிர்கொள்ள வேண்டியநிலை ஏற்படும்.

**ஐ.எஸ். தமிழ் மக்கள் மீது தாக்குதல் நிகழ்த்தலாம் என்று தென்னிலங்கை கருதுவதாக தெரிகின்றது. அதுமட்டுமன்றி தமிழ் மக்களை தமது கண்காணிப்புக்குள் வைத்துக்கொள்வதுடன் தொடர்ச்சியான நெருக்கடிக்குள்வைத்துக்கொள்வதும் அவசியம் என தென்னிலங்கை கருதுகின்றது.**

## மனதிற்குள் ஒரு சவால்

இளம் வயதில் எனக்கு படிப்பில் நாட்டம் இருந்தது இல்லை. என்னை நன்கு படிக்கவைக்கும் முயற்சியில் பெற்றோருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. பத்தாவது பெயில் மறுபடி பி.ஏ.வில் பெயில்.

ஒரு முறை என் வகுப்பு ஆசிரியரும் வேறு ஒரு முறை என் உறவினரும், 'சுட்டுப்போட்டாலும் உன் மண்டையில் ஏதும் ஏறாது: இப்படியே இருக்கவேண்டியதுதான்,; என்றார்கள். அவ்வளவுதான் வந்தது வேகம். என் மண்டையிலா ஏறாது என்கிறீர்கள்? என்று மனதிற்குள் கறுவிக்கொண்டேன். சவால் ஏதும் விடவில்லை.

எனக்கு படிப்பில் சலிப்பும் சோர்வும் ஏற்படும் போதெல்லாம் இவர்கள் சொன்னது ஞாபகத்திற்கு வரும். வேகம் பெறுவேன்.

பிறகு நல்ல மதிப்பெண்களெல்லாம் பெற்று மேற்படிப்பு, சட்டப்படிப்பு என்று கல்விப் பயிருக்கு நீர் ஊற்றினேன்.

"நீ உருப்படவே மாட்டாய் என்றும் - இதற்கு இணையாகவும் இதைவிட மோசமாகவும் பிறர் பழித்தாலும் சபித்தாலும் உடனே பலரும் சோர்ந்து போகிறார்கள். அல்லது என்னையா அப்படிச் சொன்னாய்? உன்னைப் பழிவாங்குறேன் பார் என்று புறப்படுகிறார்கள். இரண்டுமே தவறான அணுகுமுறைகள்.

"நீ முன்னேறு, நன்கு உழை, உன்னைப்போல் உண்டா!" என்று சொல்வதைவிட மேற்கூறிய அக்கோபத்தை நம்மீதே காட்டி, அவர்கள் அப்படிச் சொன்ன பிறகும் இப்படியே இருக்கிறாயே! அவர்கள் சொன்னதைப் பொய்யாக்க வேண்டாமா என்று நம் மனதைப்பார்த்து நாம் கேட்கவேண்டும். உடனே நமக்குள் இருக்கிற ஆற்றல் உடைந்துவிட்ட அணைநீர் போல் வெளிப்பட ஆரம்பிக்கும்.

நிலத்தில் அமுக்கினால் மண்ணோடு மண்ணாய் புதைந்து போகக் கூடாது. விதையாய் மாறி முளைக்க வேண்டும். கடலில் அமுக்கினால் நீரைக்குடித்து மாண்டுவிடக்கூடாது. முத்துடன் வெளிக்கிளம்பவேண்டும்.

வீறுகொண்டு எழுபவர்களே, வாழ்க்கையில் முன்னேறுகிறார்கள். நீ என்ன வேண்டுமானாலும் சொல். நான் எருமை மாடுமீது பெய்த மழை மாதிரி இருப்பேன்' - என்பவர்கள் தலைதூக்கவே முடியாது.

நம்மீது வீசப்படும் கற்களை இரத்தக்காயம் பட்டு வீழ்ந்துவிடக் கூடாது. படிக்கட்டுகளாக ஆக்கிக் கொள்ளவேண்டும். பாராட்டினாலும் மனமாற்றம் இல்லை. கடுமையாக விமர்சித்தாலும் மனமாற்றம் இல்லை. என்றால் அப்புறம் எப்படித்தான் முன்னேறுவதாக உத்தேசம்?

● லேனா.தமிழ்வாணன்

- இராவின் -

# இனவெறியின் மறுபிறப்பு



நல்லாட்சி நல்லிணக்கம் போன்ற நல்ல சொற்களை பேச்சளவில் மட்டும் கொண்டுள்ள அரசாங்கம் அதிகார துஸ்பிரயோகத்திற்கும் நல்லாட்சி என்ற வரையறையைக் கொண்டுள்ளதா? எனும் கேள்வி பரவலாக எழுவதை அவதானிக்க முடிகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியலமைப்பு அதிகாரங்களை மிகப் பெரியளவில் துஸ்பிரயோகப்படுத்தி தன்னால் முடியுமான வரை பாரதூரமான படுபாதகச் செயல்களைச் செய்து வருகின்றார். இவரது அதிகார மீறல்களினால் ஏற்படப் போகும் அபாயங்களைப் பற்றி சிந்திப்பதாக இல்லை.

கடந்த ஆட்சிக் காலத்தில் பல ஆயிரக் கணக்கில் மக்கள் கொல்லப்படும் போது பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்து அதனை நன்றே வழிநடத்திய இன்றைய ஜனாதிபதிக்கு ஜனநாயக விரோதச் செயற்பாடுகளும் தனது கையாலாகாத நடவடிக்கைகளும் பெரிதாகத் தெரியவில்லை போலும்.


52 நாள் அலங்கோலத்தின் மூலம் இலங்கையை எரிநெருப்பில் தள்ளிய இவர் மீண்டும் தன் சுயரூபத்தை வெளிப்படுத்தியுள்ளார். ஒரு தலைப்பட்சமாக அரசியலமைப்பில் உள்ள அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளார்.

கடும் போக்கு மதவெறியரான ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு வழங்கியதன் மூலம் மதவாதச் செயற்பாடுகளிற்கு மட்டுமன்றி இனவாதச் செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள்.

சிறுபான்மை மக்களிற்கு எதிராக மிகப்பெரும் பிரளயங்களை தீவிரமாக முன்னெடுப்பதற்கான முன்முயற்சியாகக் கூட இப் பொது மன்னிப்பை நோக்க முடியும். ஏனென்றால் கடந்த காலங்களில் ஞானசார தேரர் மேற்கொண்ட அடாவடித்தனங்களும் அத்துமீறல்களும் ஊடகங்கள் வாயிலாக முன்னெடுத்த இனவாதப் பரப்புரைகளும் மிக நீண்டவை.

ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக 19 வருட சிறைத்தண்டனை கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் விதிக்கப்பட்டது. 19 வருட சிறைத்தண்டனையை 6 வருட கடூழியத் தண்டனையாக வழங்கி சிறை யில் அடைத்தனர் தேரரை. அவர் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவும் பின்னர் நிராகரிக்கப்பட்டது. இவற்றுடன் காணாமல்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியான சந்தியா எக்னெலிகொடவை மிரட்டிய குற்றத்திற்காக 6 மாத சிறைத்தண்டனையும் அவருக்கு விதிக்கப்பட்டிருந்தது.


பௌத்த தேசியவாத கடும் போக்காளரான கலகொட அத்தே ஞானசார தேரர் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர். நீதித்துறையை அவமதித்த குற்றத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டவர். அதே நீதித்துறையை அவமதிக்கும் வகையில் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. மத நல்லிணக்கம், சகவாழ்வு, சமாதானம் என்ற போர்வையில் இனவெறியர்களின் தீவிர செயற்பாட்டாளரான தேரரை வெளியில் விட்டதன் மூலம் சிறுபான்மை மக்களுக்கு மீண்டும் ஒரு மிகப் பெரிய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.





'இனவன்முறைச் சம்பவங்கள் அனைத்திற்கும் சூத்திரதாரியானவர் இன்று விடுதலையாகியுள்ளார். இவரின் விடுதலைக்குப் பின்னாலுள்ள செய்தி மிகப் பயங்கரமானது அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதிலும் ஐயமேதுமில்லை.'

எதிர்வரும் தேர்தலைக் கருத்தில் கொண்டு செய்யப்படுகின்ற இது போன்ற நடவடிக்கைகளால் நீதித்துறைக்குள் அரசியல் புகுந்துவிடுமோ என்று அரசியல் ஆய்வாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.



"நாம் எவருக்கும் எதையும் எப்படியும் செய்வோம் இதனை யாரும் எதிர்க்கவோ கண்டிக்கவோ கூடாது. மாறாக எமக்கு யாரும் எதனையும் சிறிதளவில் மேற்கொண்டாலோ அல்லது அதற்கு துணைபோனாலோ அவர்களை சிறை யில் அடைப்போம். கடூழியத் தண்டனை மட்டுமின்றி ஆயுள் தண்டனையும் வழங்குவோம்" என்ற நிலையின் வெளிப்பாடே தேரரின் பொதுமன்னிப்பு அமைகிறது.

தமிழ் அரசியல் கைதிகள் 10 வருடங்களிற்கு மேல் சிறைகளில் உள்ளனர். இவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு பல்வேறு போராட்டங்கள் நடாத்தப்பட்ட போதிலும் அவை எதனையும் நல்லாட்சி அரசாங்கம் கண்டுகொள்ளவில்லை. 72 மாத சிறைத்தண்டனையை 10 மாதங்களில் பொது மன்னிப்பாக்கிய பேரினவாத ஆட்சியாளர்கள் 120 மாதங்களாக சிறையில் இருப்பவர்கள் பற்றி சிந்திக்காதது ஏன்? அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்தால் மட்டுமே.


தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு பலர் பல்வேறு வகையில் போராட்டங்களை முன்னெடுத்தனர். அவரின் இரண்டு பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கொண்டு. ஆனால் ஜனாதிபதி அது தொடர்பாக பரிசீலிப்பதாக தெரிவித்து ஒரு வருடம் ஆகின்ற போதிலும் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

கடும்போக்கு மதவெறியரான இவர் கடந்தகால ஆட்சியிலும் தற்கால ஆட்சியிலும் நடாத்தப்பட்ட இனவன்முறைச் சம்பவங்கள் அனைத்திற்கும் சூத்திரதாரியானவர் இன்று விடுதலையாகியுள்ளார். இவரின் விடுதலைக்குப் பின்னாலுள்ள செய்தி மிகப் பயங்கரமானது அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதிலும் ஐயமேதுமில்லை.

சிங்கள தீவிரவாத அமைப்புகளில் ஒன்றான பொதுபலசேனாவின் பொதுச் செயலாளரும் அதிலுள்ள தேரர்கள் மற்றும் கடும்போக்காளர்கள் தாம் மேற்கொண்ட, இனிவரும் காலங்களில் மேற்கொள்ளவுள்ள இனவிரோத செயற்பாடுகளிற்கு அரச ஆசீர்வாதத்துடன் கூடிய ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவே பொதுமன்னிப்பு நிகழ்வு நோக்கப்படுகிறது.

நீதித்துறையை அவமதித்த தேரர் தான் சார்ந்த அமைப்பையும் அமைப்பிலுள்ளவர்களையும் அவமதிக்கும் வகையில் வெலிக்கடைச் சிறைச்சாலையின் பின் கதவால் வெளியே சென்றுள்ளார். முறையற்ற செயல்களிற்காக உள்ளே சென்றவர் முறையற்ற வழியால் வெளியே வந்தமை இவரது இனவெறியாட்டம் தலைதூக்கவுள்ளதையே கோடிட்டுக் காட்டுகிறது.

படுபாதக இனவெறியரை வெளியில் விட்டதன் மூலம் நல்லாட்சி அரசாங்கம் பௌத்த பெரும் தேசியவாதத்தை கொதி நிலையில் வைத்து சிறுபான்மை மக்களையும் அவர்களது அபிலாசை களையும் துவம்சம் செய்வதையே விரும்பியுள்ளது. இதுவே அரசாங்கத்தின் சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தின் குறிகாட்டிகளாகவுள்ளது.



# இலங்கைத் தமிழ் சமூகம் எப்போது கரைசேரும்?

மூன்று தசாப்தங்கள் உள்நாட்டுப் போரால் கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளான இலங்கையில் அமைதியும் வளர்ச்சியும் திரும்பப் பத்தாண்டுகள் போதுமானதல்ல என்றாலும் இந்தப் பத்தாண்டுகளில் போரால் உருக்குலைந்த தமிழ் சமூகம் எந்த அளவுக்கு மீண்டெழுந்து மேலே கரையேறி வந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது ஏமாற்றமும் வேதனையுமே எஞ்சுகிறது.

பத்தாண்டுகளாக நிலவும் அமைதியால் ஓரளவுக்கே பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தமிழ் சிறுபான்மைச் சமூகத்தினரின் பெரும்பாலான குறைகள் அப்படியே தீர்க்கப்படாமல் தொடர்கின்றன.மறுகுடியமர்த்தல்கள் மறுவாழ்வுப் பணிகள் ஓரளவுக்கு நடந்துள்ளன. ஆனால் அவை குறித்தும் மக்களிடையே புகார்கள் அனேகம் தங்களுடைய காணிகளை இராணுவம் இன்னமும் ஆக்கிரமித்து இருக்கின்றது என்கின்றனர் தமிழர்கள். தமிழர்களுடைய நிலங்கள் மட்டுமல்ல, அரசுக்குச் சொந்தமான நிலங்களும் இராணுவத்தின் வசம் உள்ளன. உறவினர்களை இழந்த ஆயிரக்கணக்கான தமிழர்கள் பத்தாண்டுகளாகியும் அவர்களைத் தேடவும் முடியாமல், இருக்கும் இடமும் தெரியாமல் தவிக்கின்றனர். காணாமல் போனவர்களைதட் தேடிக் கண்டு பிடிப்பதற்கான அலு-வலகம் நம்பிக்கையூட்டும் வகையில் செயற்படவில்லை.போரின் இறுதிக் கட்டத்தின்போது அநியாயமாகக் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இன்னமும் முழுமையான இழப்பீடும் நீதியும் வழங்கப்படவில்லை.இலங்கைத் தேசியக் கட்சியின் தலைவர்கள் இந்த விவகாரத்தில்கூட அற்பமான அரசியல் லாபம் தேடுவதுதான் தொடர்கிறது.

போராளிகளுக்கு எதிரான போர் முடிந்த காலத்தின் முற்பகுதி ஆட்சியாளர்கள் தங்களுடைய சாகசங்கள் குறித்துப் பெருமை பாராட்டிக் கொண்டதிலேயே கழிந்தது.இடுத்தபாதி போர்க் குற்றங்களுக்காகச் சர்வதேசச் சட்டங்களின்படி தங்களுடைய இராணுவத்தினர் தண்டிக்கப்படக் கூடாது என்று தடுப்பதிலேயே கழிந்துவிட்டது.2015 இல் புதிய அரசு பதவியேற்றது.ஜனந-ாயக நிர்வாகம் அரசமைப்புச் சீர்திருத்தம் ஆகிய வாக்குறுதிகள் தரப்பட்டன. ஆனால் வாக்குறுதிகள்அனைத்தும் நிறைவேற்றப்படும் பாதை நோக்கி நகர்ந்தபாடில்லை. போர் முடிந்து பத்தாண்டுகள் ஆன பி-றகும் கூட போரின்போது அத்துமீறிய செயல்களில் ஈடுபட்டவர்கள் சட்டப்படியான நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படவில்லை.காணாமல் போனவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்கிற நிலையில்,

சமூகங்களுக்கிடையேயான இணக்கம் உண்டாவது சிரமம். அதிகாரத்தைக் கைப்பற்றவதிலேயே எல்லாக் கட்சிகளும் குறியாக இருப்பதால் நல்ல நிர்வாகம், அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சி, அர்சியல் சட்டப்படியான தீர்வ ஆகியவை தொலைதூரக் கனவுகள் ஆகிக்கொண்டிருக்கின்றன.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கான அடித்தளம் சமூகங்களுக்கிடையேயான பிணைப்பின்மீதும், நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் இந்த அரசு தன்னடையது என்ற நம்பிக்கையின் மீதும்தான் கட்டப்படுகிறது. பொருளாதார வளர்ச்சி தனித்து உருவாவது அல்ல. நடந்த தவறுகளுக்கு மனதாரப் பொறுப்பேற்பதன் வாயிலாக இலங்கையில் தமிழர்கள் பிரச்சினைகட்கு அரசு தீர்வுகாணமுடியும்.

**கடந்த 21 ஆம் திகதி தி இந்து தமிழ் திசை இணைய இதழில் சிந்தனைக்களம் பகுதியில் வெளியாகிய கட்டுரையை உங்களுக்காக மறுபிரசுரம் செய்கிறோம். அண்மைக் காலத்தில் இலங்கை பற்றிய இந்தியாவின் பார்வை மாறியிருக்கிறது என்று எண்ணுவதற்கு இந்த எழுத்துக்கள் சாட்சியாகுமா? அண்மையில் நடைபெற்ற இந்திய நாடாளுமன்றத் தேர்த்தலில் பா.ஜ.க அமோக வெற்றி ஈட்டியுள்ளது. இனி ஆட்சியில் அமரப் போகும் நரேந்திர மோடி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றிய நிலையில் ஈழத் தமிழர்களுக் குப் பொருத்தமான தீர்வை அவரால் ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறோம். அவர் முயற்சிப்பாரா? ஏனெனில் இதில் இந்தியாவுக்கு ஒரு கடமையும் இருக்கிறதே!**

தமிழால் இணைவோம்

## இந்து தமிழ் திசை

# மோடியின் மீள் வருகை

## ஈழத்தமிழர்களின் தலைவிதியை மாற்றுமா?

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்து முடிவுகள் வெளியாகி இருக்கின்ற நிலையில் பிரதமர் நரேந்திர மோடியே மீண்டும் பிரதமராகின்ற வாய்ப்பைப் பெறுகிறார். நேரு மற்றும் இந்திரகாந்திக்குப் பின்பு பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றி இரண்டாவது தடவையா-கவும் பிரதமராகின்ற வாய்ப்பைப் பெறுகிறார் நரேந்திர மோடி.

"மதச்சார்பின்மை என்ற முகமூடியைப் போட்டுக் கொண்டு யாரும் இனி நாட்டை ஏமாற்ற முடியாது" என்று தொண்டர்களிடம் பேசும்போது நரேந்திர மோடி குறிப்பிட்டிருக்கிறார். இதன் மூலம் மறைமுகமாக நாட்டு மக்களுக்கு ஒரு செய்தியைச் சொல்லி இருக்கிறரா மோடி?

பண்டு தொட்டு இந்திய அரசியலும் அதில் ஏற்படுகின்ற மாற்றங்களும் இலங்கை விவகாரங்களிலும் பிரதிபலிப்பது வழமை.இலங்கையிலே காணப்படுகின்ற இன்னும் தீர்வைப் பெற்றுக் கொடுக்காத பிரச்சினையாக இருப்பது தமிழர் உரிமைப் பிரச்சினை. ஈழத்துத் தமிழர் பிரச்சினை இத்தனை சிக்கலானதுக்குக் காரணமும் பொறுப்பும் இந்திய காங்கிரஸ் கட்சியே. 1983 இல் கலவரங்கள் தொடங்கிய போதும் 2009 இல் ஈழப்போர் மௌனிக்கப்பட்ட போதும் இந்திய அரச ஆட்சிப் பீடத்தில் இருந்தவர்கள் காங்கிரஸ் கட்சியினர். இந்தத் தேர்த்தலில் அவர்கள் படு தோல்வியைச் சந்தித் திருக்கின்றனர். அதே நேரம் தேசியத் தலைவர் பிரபா-கரனின் படங்களோடு ஈழத்துத் தமிழர் பிரச்சினையை பகிரங்கமாக ஆதரித்து வரும் சீமானின் நாம் தமிழர் கட்சிக்கு அதிகப்படியாக மக்கள் வாக்களித்து அவரை தமிழகத்தின் ஒரு மூன்றாவது சக்தியாக அடயாளப்படுத்தியிருக்கின்றனர்.

எனவே ஈழ அரசியல் தொடர்பாகப் பல செய்திகளை இந்திய நாடாளுமன்றத் தேர்த்தல் மற்றும் தமிழக சட்ட மன்றத் தேர்தல் முடிவுகள் மறைமுகமாகச் சொல்லி இருக்கிறது. பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கு வர இருக்கும் பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பாகப் பல அதிரடி முடிவுகளை எடுக்கக் கூடும்.அதில் இலங்கையில் இனிவருங்காலத்தில் என்ன நடக்க வேண்டும் என்பதையும் இந்திய அரசே தீர்மானிக்கலாம்.

# முளைகளும் முள்ளிவாய்க்காலும்



பிறைவாணன்

தீபம் ஏற்றுவதற்கு ஒரு சில நிமிடங்கள் முன்னாடி சின்னஞ்சிறுசுகள் என்ன செய்கிறார்கள். அடுக்கடுக்காக வரிசைப்படி வைக்கப்பட்டிருந்த தீபக் கம்பங்களுக்கு இடையில் கிளித்தட்டு விளையாடுவது போல் அங்குமிங்கும் ஓடித்திரிகிறார்கள். சின்னஞ்சிறுசுகள் ஒவ்வொருவரது முகங்களிலும் தேடல் இருப்பது தெரிகிறது. ஒரு நிகழ்வுக்கு வந்திருக்கிறோம் என்பதும் அது இன்னும் ஆரம்பிக்கவில்லை என்பது மட்டும் அவர்களுக்கு தெரிவது தெரிகிறது.


அக்கம் பக்கம் பார்த்து தமக்குள்ளே ஏதோ நினைக்கிறார்கள். அங்கே இறந்தவர்களின் நினைவாக தீபம் ஏற்றுவதற்காக நடப்பட்டிருந்த கம்பத்தையும் அதன் கீழே வைக்கப்பட்டிருந்த கற்பூரத்தையும் பூக்களையும் தொட்டுப் பார்க்கிறார்கள். பின்னர் அங்கிருக்கும் ஒவ்வொரு கம்பங்களையும் பார்த்து தாங்கள் தீபம் ஏற்றுவதற்காக உரிமை கொண்டு நிற்கும் கம்பத்தையும் பார்த்து ஏதோ தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள்.

ஒவ்வொரு தீபக்கம்பங்களுக்கு முன்னாலும் தீபம் ஏற்றுவதற்காக தயாராக நிற்பவர்களை அவர்கள் பக்கம் சென்று பார்க்கிறார்கள். அழும் அம்மாக்களைப் பார்த்ததும் அவர்களை விட்டு விலக மனமில்லாமல் அந்த இடத்தில் சிலர் நிற்கிறார்கள். தாம் தீபம் ஏற்றும் கம்பத்துக்கு கீழே இருந்து மண்ணில் ஏதோ கிறுக்கி விளையாடுகிறார்கள்.

ஏன் விளக்கேற்றுகிறோம்? தந்தையுடனும் தாயுடனும் அக்காவுடனும் அண்ணாவுடனும் தம்பியுடனும் தங்கையுடனும் பாட்டியுடனும் தாத்தாவுடனும் என்று உறவுகளுடன் கூட நின்று ஏன் இந்த இடத்தில் விளக்கேற்றுகிறோம் என்று நினைப்பது போல் அவர்களின் பார்வையில் நன்கு தெரிகிறது. தமது உறவுகளை இந்த இடத்தில் தான் பலி கொடுத்தார்கள் என்பது இந்த சின்னஞ்சிறுசுகளுக்குத் தெரியுமா? அதனை தெரியப்படுத்தினார்களா? எப்படி தெரியப்படுத்த முடியும். அந்த சின்னஞ்சிறுசுகளின் மௌனத்தில் இருந்து தெரிகிறது தாங்கள் எதையோ இழந்து நிற்கிறோம் என்பது.

கையில் இருக்கும் குழந்தைகள் கூட சின்னஞ்சிறுசுகள் அங்குமிங்கும் ஓடித்திரிவதைப் பார்ப்பதிலே குழந்தையின் உலகம் இருந்தது. இந்த உலகம் குழந்தைகளையும் சின்னஞ்சிறுசுகளின் பின்னால் போகத் தூண்டும் இந்த இடத்தில் அனைவரையும் கொண்டு வந்த இடமாக இருந்தது.







சின்னஞ்சிறுசுகள் ஏன் வந்தார்கள் என்று சின்னஞ்சிறுசுகளுக்கு சொல்லத் தேவையில்லை என்பது அவர்களின் செயற்பாடு இருந்தது. தாம் தீபம் ஏற்றும் கம்பத்தை தெரிவு செய்துவிட்டு கம்பத்தைவிட்டு விலத்தி மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று ஒவ்வொருவராக பார்த்துக் கொண்டு போனவர்கள் சரியாக 10.30 மணிக்கு தீபம் ஏற்றும் மணி அடித்ததும் தங்கள் தங்கள் இடத்தில் வந்து நின்றதைப் பார்த்த போது "சின்னஞ்சிறுசு"களின் கைகளில் நாளை உலகம் வரும் என்ற நம்பிக்கை பிறந்தது.

தாங்கள் தான் தீபம் ஏற்றவேண்டும் என்று அந்தக் காற்றிலும் சின்னஞ்சிறுசுகளின் முயற்சியில் அந்த இடம் உயிர்பெற்றது. கனவுகளோடு அந்த கனவு பலிக்காமல் சென்றவர்கள் ஒரு கணம் தமது இடத்தில் சின்னஞ்சிறுசுகள் நிற்பதைக் கண்டு நம்பிக்கை கொண்டிருப்பார்கள்.

தீபங்களின் வெளிச்சத்தில் சின்னஞ்சிறுசுகளின் முகத்தில் அவர்கள் பிரிந்து நிற்கும் உறவுகளைப் பார்க்கிறோம். தேடலோடு தவிக்கும் இவர்கள் முக அலைகள் கரை தொடுவது மீண்டும் உள்ளீர்ப்பதுமாக அசைகிறது. வழிப்படுத்த வேண்டியதில்லை நினைவுகளை மீட்கும் போது அவர்களாக உணர்வார்கள் என்பது தெரிகிறது.

தீபம் ஏற்றிப் பார்த்துப் போக அவர்கள் வரவில்லை. அங்கு வந்தவர்களுக்கு சின்னஞ்சிறுசுகள் தங்களை அடையாளம் காட்டி எங்களுடைய காலம் வரும் மட்டும் நீங்கள் நினைவுகளை ஒரு நிகழ்வாக மட்டும் நடத்தப் போகிறீர்களா என்ற கேள்வியை விட்டுச் சென்றுள்ளனர்.

பொதுச் சுடர் ஏற்றிய இடத்துக்கு வணங்குவதற்காகச் சென்ற சின்னஞ்சிறுசுகள் அந்த சுவாலைவிட்டு எரியும் பெருநெருப்பிற்கு அருகில் சென்ற போதும் பயமேதுமில்லாமல் பொதுச் சுடரை பார்ப்பதைவிட அங்கு நின்றவர்களைத் தான் அதிகமாகப் பார்த்தார்கள்.

தமக்கான எதிர்காலம் எப்படி இருக்கும் என்பது சின்னஞ்சிறுசுகளுக்குத் தெரியாது. ஆனால் சின்னஞ்சிறுசுகளுக்கான எதிர்காலத்தை அவர்கள் ஏற்படுத்திக் கொள்வார்கள் என்பது இந்த இடத்தில் தெரிந்தது.

ஒரு தென்னம்பிள்ளையும் காட்டுத் தேக்கு மரமும் தீபம் ஏற்றிய கம்பத்துக்கு அருகில் வைக்கப்பட்டிருந்தது. தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தியதும் சின்னஞ்சிறுசுகள் தாங்கள் தான் எடுத்துவர வேண்டும் என்பது போல கையில் எடுத்துக் கொண்டு நடக்கும் போது அந்த மரங்கள் தங்களுடையது என்பது போல தூக்கிக் கொண்டு நடந்தார்கள். கண்டிப்பாக வீட்டு வளவில் வளரும் இந்த மரங்கள் நினைவுகளை உயிர் பெறச் செய்யும் என்பது உண்மை.

சின்னஞ்சிறுசுகள் இந்த மரங்கள் தாங்கள் கொண்டு வந்த மரங்கள் என்ற உரிமையில் கண்டிப்பாக தண்ணீர்விட்டு வளர்ப்பார்கள். அந்த மரங்கள் வளர வளர கடந்த கால நினைவுகளை அறிந்து கொள்வார்கள் என்பது தெரிகிறது. எதுவும் வீணாபோகவில்லை. இதில் இருந்து தெரிவதற்கான நாள்கள் வெகுதூரத்தில் இல்லை.

எந்த இடத்தில் இழந்தோமோ அந்த இடத்தில் வந்து நிற்பார்கள். இது தான் சின்னஞ்சிறுசுகளின் வாழ்க்கை. நினைவுகளில் அவர்களாகவே அறிந்து கொள்ளுவார்கள்.

சின்னஞ்சிறுசுகள் வழிதவறமாட்டார்கள் என்பது இந்த இடத்தில் அவர்களின் செயற்பாடுகள் உணர்த்தியிருக்கிறது. சின்னஞ்சிறுசுகளிடம் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ அவர்கள் இந்த இடத்தில் நின்று செய்த செயற்பாடுகள் அங்கு வந்தவர்களுக்கு நம்பிக்கையை உயிர்பெறச் செய்யும்.

எல்லோருக்கும் தெரியும் இயற்கை இழப்புகளில் இருந்து மீள்தல் என்பது ஒரு சந்ததி தாண்ட வேண்டும் என்று. ஆனால் படுகொலை செய்யப்பட்ட இழப்புகளுக்கு தீர்வு இல்லை என்றால் எத்தனை சந்ததி கடந்தாலும் மீள்தல் என்பது முடியாத காரியம் என்பதை சின்னஞ்சிறுசுகள் பார்வையில் இருந்து கூறமுடிகிறது.

## இவர்கள் எதை 'சாதி'க்கப்போராடுகிறார்கள்?

# வறணி சிமிழ் கண்ணகி அம்மனுக்கு ஒரு விண்ணப்பம்






உலகில் தமிழன் இருக்கும் ஊரெல்லாம் அம்மன் கோயில்கள். காலை மாலை உனது காலடி வராமல் எவரும் எங்கும் போகமாட்டார்கள். உனது அருளால் போர்க் காலங்களிலும் எல்லோரும் பாகுபாடின்றி வாழ்ந்தார்கள். வடமராட்சிக்காரர்களுக்கும் தென்மராட்சிக்காரர்களுக்கும் வழி விட்ட நீ உனது பிரதேசத்துக்குள்ளேயே இரு பிரிவாக்கி விட்டாயே அம்மா!. தீர்வு கிடைக்கும் என்று உன்மேல் குற்றம் சுமத்துகிறேன். ஏனெனில் நீ தான் பழி சுமந்து நிற்கிறாய்.

இன்று உனக்கு அல்ல எமக்கு ஒரு சோதனை வந்திருக்கிறது. உனக்கு திருவிழா நடத்துவதற்கு தடை போட்டிருக்கிறார்களாம். உனக்கு திருவிழா நடத்துவதற்கு ஊரே ஒன்று கூடி நிற்கும் போது இந்த ஊரில் மட்டும் திருவிழா நடத்துவதற்கு தடை போடுகிறார்களாம். தடை போடுபவர்களுக்கும் நீ அருள் பாலிப்பாய் ஏனெனில் நீ கடவுள். உனது மகிமையை அறியாதவர்களால் தான் இப்படி பிரச்சினை எழும்.

உண்மையில் நீ கடவுள் தானே. அப்படி என்றால் இரு பகுதிக்குள் பிரச்சினையை ஏன் கொண்டு வந்தாய்



என்று உன்னிடம் கேள்வி கேட்கிறார்கள். நீ பதில் சொல்ல மாட்டாய். அவர்களிடம் இருந்து பதிலை வரவைப்பாய்.

உனது காலடியில் ஒருவரையும் வரவேண்டாம் என்று நீ சொல்லவில்லை. நீ இயக்கும் உலகத்தில் உன்னை இயக்கப் பார்ப்பவர்கள் இருக்கிறார்கள் என்றால் அதிசயமாக இருக்கிறது. உன்னை இயக்கும் உலகம் என்று ஒன்றில்லாத போது இவர்களை முட்டாள்கள் என்று சொல்லவா? அல்லது உனது மகிமை அறியாதவர்கள் என்று சொல்லவா? அல்லது உன்மேல் நம்பிக்கையில்லாதவர்கள் என்று சொல்லவா. அப்படி என்றால் நாத்திகனாக இருக்க வேண்டும். நாத்திகனாக இருந்தால் இவர்கள் எப்படி உனது அருகில் நிற்க முடியும்.

கடந்த வருடம் உனது திருவிழாவில் பலர் இருந்தும் நீ ஏறி வலம் வந்த தேரினை இழுக்க ஒருவரும் இல்லையா? JCB மூலம் தேர் இழுத்தவர்களை என்னவென்று சொல்ல. இனிவரும் காலம் தேருக்கு எஞ்சின் பூட்டி ஓடவிட்டாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை. இப்படி எண்ணம் கொண்டவர்கள் எப்படி உன்னிடம் இருந்து அருளைப் பெறுவார்கள்.

இந்த வருடம் திருவிழாவை அனைத்து சமூகங்களும் இணைந்து ஒற்றுமையாக நடத்துமாறு தென்மராட்சி பிரதேச செயலகம் அறிவித்திருந்த போதும் தங்களைத் தாங்களே உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் சிந்தனையுள்ளவர்கள் உனது திருவிழாவை நிறுத்தியுள்ளனர்.

தாங்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்லி திருவிழாவை நடத்துவதற்கு தடைபோடுபவர்களின் ஊரில் நீ இருப்பாய் என்பது எனக்கு சந்தேகம் எழுகிறது.

உனது காலடி வரவேண்டும் உன் மகிமை பெற வேண்டும் என்று வருபவர்களை நீ தடுக்கவில்லை. இவர்கள் எப்படி தடுக்க முடியும் என்று தென்மராட்சி பிர தேச செயலகம் முன் அமைதியான முறையில் போராட்டம் ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த பிரதேச செயலர் இந்த ஆலய பிரச்சினையை தம்மால் தீர்க்க முடியாதுள்ளமையால் நீதிமன்றத்தை நாடுமாறு தெரிவித்துள்ளாராம்.

காலம் காலமாக 7ஆம் திருவிழாவை செய்து வருபவர்களை இனிவரும் காலங்களில் உனது காலடி வரக்கூடாது என்று தடுக்கும் உரிமை இவர்களுக்கு இல்லை.

திருவிழா செய்வதானால் சுவாமி தூக்கக்கூடாது என்று கூறினார்கள் இதற்கு அவர்கள் உடன்படவில்லை இதனால் வருடாந்த திருவிழாவையே இவர்கள் நிறுத்திவிட்டோம் என்று பெருமை கொள்கிறார்கள்.

என்ன பிரச்சினை வந்தாலும் எல்லோரும் ஒன்று சேர்ந்து திருவிழா நடக்கும் என்று நடத்திக்காட்டிய பரம்பரை உள்ள ஊரில் இன்று திருவிழாவை நிறுத்திவிட்டோம் என்று சொல்வதில் நாம் வெட்கித் தலைகுனிந்து நிற்கிறோம்.

ஊரே கூடி திருவிழா நடத்தினால் தான் அது திருவிழா. ஒரு பகுதியினரை புறக்கணித்து ஒரு பகுதியினர் திருவிழா செய்தால் அது சிறுவிழா.

உண்மையில் நீ இந்த கோயிலில் இருக்கிறாய் என்றால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவெடு. உன்னை வைத்து தம்மை உயர்ந்தவர்கள் மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்று வேறுபாடு பார்ப்பவர்களை திருத்து.

இந்த ஊர் ஒன்று கூடாமல்ப் போனால் இந்தக் கோயில் இருந்தும் இல்லாமல் இருக்கும். திட்டுகிறேன் என்று நினைக்க வேண்டாம் இந்த ஊரின் மகிமை தொன்மை எல்லாம் அழிந்து போகும் என்பது உண்மை.

**அம்மாளக்கா**



மாசிலான்







# அவலத்தை அரசியலாக்கும் ராஜதந்திரம்



பயங்கரவாதத் தாக்குதலில் முன்னூறுக்கும் அதிகமான உயிர்கள் பறிக்கப்பட்டும் ஏராளமானோர் காயப்பட்டும் உடல் உறுப்புகளை இழந்த நிலையில் அரசியல் கட்சிகள் இந்நிகழ்வை வைத்துத் தமது அரசியல் இருப்பை மேலும் வளர்த்துகொள்வதிலும் ஆட்சியக்கைப்பற்றுவதிலுமே தமது புலனைச் செலுத்துகின்றன. மக்களின் இழப்பைக் காட்டிலும் தமது அரசியல் வளர்ச்சியையே நோக்காகக் கொண்டு அவர்கள் செயற்படுகிறார்கள். தௌஹீத் ஜமாஅத் அமைப்பை வளர்த்தது ராஜபக்சா ஆட்சியே என்று அரசுப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன குற்றம் சுமத்தியுள்ளார். ராஜபக்சா ஆட்சிக்காலத்தில் இவ்வமைப்பினருக்கு மாதச் சம்பளம் கொடுக்கப்பட்டதாகவும் அவ்வமைப்பு வளர்வதற்கும் அவர்களே காரணம் என்றும் அவர் கூறியுள்ளார். அப்பொழுது அவரும் அவ்வரசின் அமைச்சராக இருந்துள்ளார் என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும். அதாவது அவ்வமைப்பிற்கு சம்பளம் கொடுத்த அரசின் அமைச்சராக அவரும் இருந்து அதற்கு உடந்தையாக செயல்பட்டுள்ளார் என்பது தெரிகிறது. இன்று அவர் வேறு கட்சி என்பதால் குற்றச்சாட்டை அவர் மற்றவர்கள் மேல் எளிதாகச் சுமத்துகிறார் என்பது தான் உண்மை. ராஜித சேனாரத்ன இத்துடன் நிற்காது மைத்திரிபால சேனநாயக்கா மீதும் குற்றம் சுமத்துகிறார் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடக்கப்போவதாக முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தும் நாட்டின் சனாதிபதி அதைக் கவனத்தில் எடுக்கவில்லை என்று குற்றம் சுமத்துகிறார் இதன் மூலம் மைத்திரியும் ராஜபக்சாக்களுமே காரணம் என்று மக்களுக்குக் கூறுகிறார் அவர்.

இவ்வாறு ராஜித சேனாரத்ன கூறினாலும் இன்றைய ஆட்சியாளர்களின் அசமந்தப் போக்கே இன்றைய நிலைக்குக் காரணம் என்று ராஜபக்சா தரப்பினர் கூறுகின்றனர். தாங்கள் ஆட்சியில் இருதிருந்தால் புலிகளை ஒடுக்கியது போல் இப்பயங்கரவாதிகளையும் ஒடுக்கிய இருப்போம் என்றும் கூறுகின்றனர் சனாதிபதி. மைத்திரியும் பிரதமர் ரணிலும் வெவ்வேறு திசைகளில் சென்றுகொண்டிருப்பதால் நாட்டின் வளர்ச்சி தடைப்பட்டதாகவும் பயங்கரவாதிகளுக்கு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டதால் அவர்கள் வளர்ச்சி பெற்று இத் தாக்குதல்கைச் செய்ததாகவும் குற்றம் சுமத்துகிறார்கள் ராஜபக்சா தரப்பினர். இதேநேரம் இவர்களுக்குச் சாதகமாக விமல் வீரவன்ச போன்றோர் சில முக்கிய இசுலாமிய அரசியல்வாதிகளின் பெயர்களைக் கூறி அவர்கள் தான் பயங்கரவாத அமைப்புகளுக்கு உதவி வருபவர்கள் என்று குற்றச்சாட்டை முன் வைக்கின்றார்கள். உண்மையில் நோக்கினால் சில அரசியல்வாதிகளின் வீடுகள். அவர்களின் நண்பர்களின் வீடுகள் தொழிற்சாலைகள் உறவினர்களின் வீடுகள் சோதனை இடப்பட்டுள்ளமை தெரிகிறது. அங்கிருந்து என்ன என்ன கைப்பற்றப்பட்டன என்பது தெரியவில்லை. ஆனால் தொழிற்சாலையில் குண்டுகள் தயாரித்ததாகச் செய்திகள் கசிந்துள்ளன.

இதேவேளையில் பிரதமரோ தன்னை தேசியப் பாதுகாப்புச் சபைக் கூட்டங்களுக்கு அழைப்பதில்லை எனவும் அதனால் புலனாய்வுத் தகவல்கள் முன்கூட்டியே தெரிவித்தது பற்றி தனக்குத் தெரியாது எனவும் கூறியுள்ளார். ஆனால் அவர் இன்னொன்றையும் கூறியுள்ளார் அதாவது. முஸ்லிம் மக்கள் எமக்குப் புலிகளை அழிப்பதற்குப் பேருதவி செய்துள்ளார்கள் அதை நாம் மறந்து விடக்கூடாது என்று அழுத்தமாகக் கூறியிருக்கிறார்.

இவை யாவற்றையும் நோக்கும் பொழுது அனைத்துக் கட்சியினரும் நடந்த தாக்குதலை வைத்து தங்களின்அரசியல் இருப்புகளை வலுப்படுத்துவதிலேயே அதிக கவனம் செலுத்துவது தெரிகிறது.

இதே நேரம் த.தே.கூ வினர் ராஜபக்சாவினரே இப்பயங்கரவாதத்தை ஊட்டி வளர்த்தவர்கள் என்று

புலனாய்வுத் தகவல்கள் முன்கூட்டியே தெரிவித்தது பற்றி தனக்குத் தெரியாது எனவும் கூறியுள்ளார் .ஆனால் அவர் இன்னொன்றையும் கூறியுள்ளார் அதாவது முஸ்லிம் மக்கள் எமக்குப் புலிகளை அழிப்பதற்குப் பேருதவி செய்துள்ளார்கள் அதை நாம் மறந்து விடக்கூடாது என்று அழுத்தமாகக் கூறியிருக்கிறார்.

கடுமையாகக் கூறுவதுடன் சனாதிபதி மைத்திரிபால எச்சரிக்கைகளையும் கண்டுகொள்ளாமல் வெளிநாட்டிற்குப் பயணம் மேற்கொண்டதாகவும் அவர் மீதும் கடுமையாகக் குற்றம் சுமத்தி உள்ளனர். ஆனால் பிரதமரர் மேல் மெதுவாகவே குற்றம் சுமத்தி உள்ளமை இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும். சுருங்கக் கூறின் அடுத்த தேர்தலில் தமிழ் மக்களை ரணிலின் பின்னால் செல்வதற்கு இப்பொழுதே தயாராக்குகிறார்கள் என்று தெரிகிறது. அது மட்டுமல்லாமல் புலிகளின் எழுச்சி என்பது பொய் என்று கூறி அவ்வாறு எதுவும் இல்லை என்றும் ஆட்சியாளர்கள் புலிப் பூதத்தைக் காட்டுவதாகவும் கூறி வருகின்றனர். அது மட்டுமல்ல நாடாளுமன்றத்தில் அவசர காலப் பிரகடனத்தை ஆதரித்துவிட்டு தாங்கள் அதன் பின்னரே அதன் விதிகள் கடுமையானவை என்பதைத் தெரிந்து கொண்டதாகவும் கூறுகின்றனர். அவசரக்காலப் பிரகடனம் வந்து ஒரு திங்கள் கடக்கும் பொழுது மீண்டும் அது நாடாளுமன்றத்திற்கு வரும் பொழுது தமிழர் தரப்பு எதிர்த்து வாக்களிக்குமா அல்லது ஆதரித்து விட்டுப் பின்னர் வெற்றுச் சாட்டுகளை மக்களுக்குக் கூறுவார்களா என்பது தெரிந்துவிடும்.

உண்மையை நோக்கினால் முதலில் இத்தீவில் எது நடந்தாலும் அதனைப் புலிகள் மீதுபோடுவதே ஒரு வழக்கமாகி விடுகிறது. வவுணதீவுப் படுகொலையை சரியான தடத்தில் புலனாய்வு செய்திருந்தால் உண்மை கண்டுபிடிக்கப்பட்டிருக்கும். அப்படியான ஒரு நிலைமையில் பாரிய அனர்த்தம்கூடத் தவிர்த்திருக்கப்பட்டிருக்கும். வவுணதீவுப் படுகொலைகளின் உண்மையைக்கண்டு பிடித்திருந்தால் கொலையாளிகளின் முழுத்திட்டங்களையும் அப்பொழுதே அறிந்திருக்க முடிந்திருக்கும். அப்படியான நிலையில் ஏற்பட்ட அந்தப் பயங்கரவாதத் தாக்குதல்களையும் தவிர்த்து பேரவலத்திலிருந்து மக்களைக் காப்பாற்றியிருக்க முடியும். இதைச் செய்யத் தவறியமைக்கு யார் பொறுப்பு.?அல்லது தெரிந்தும் தெரியாமல் விட்டனரா என்பதும் வினாவாகவே உள்ளது.

பயங்கரவாதத் தாக்குதல்கள் நடந்து ஒரு திங்கள் கடந்த நிலையிலும் மக்களின் மனங்களிலிருந்த அச்சத்தைக் கலைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்காதவர்கள் அரசியல் இலாபக் கணக்கிலேயே ஈடுபட்டுள்ளனர். அரசின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்று ஒரு பகுதியினரும் இசுலாமிய அமைச்சரின் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்துடன் இன்னொரு பகுதியினரும் தங்களின் அரசியல் இருப்பினை வளர்த்துக் கொள்வதிலேயே உள்ளனர்.

தமிழர் தரப்பினரோ மக்களை எப்படி ஏமாற்றலாம்? ரணிலை எவ்வாறு காப்பாற்றலாம்? என்று பலத்த திட்டங்களுடன் இருக்கின்றனர். இந்த ஆட்சி கவிழக் கூடாது அப்படிக் கவிழ்ந்தால் ராஜபக்சாவினர் ஆட்சிக்கு வந்து விடுவார்கள் என்று ஒரு பல்லவியைப் பாடிக்கொண்டே இருக்கின்றனர். “புலிகளை அழிக்க இஸ்லாமியர்கள் செய்த உதவிகளை மறக்க முடியாது” எனச் சொல்லும் ரணிலை, ஏற்றுக்கொள்ளும் நிலையில் த.தே.கூ இருக்கிறது. ராஜபக்சாக்கள் தாங்கள் புலிகளை ஒழித்தவர்களுக்கு இப்போதுள்ள பயங்கரவாதம் பெரிய ஒன்றல்ல என்று சிங்கள மக்களுக்குச் சொல்லுகின்றனர்.

சிங்கள மக்கள் இரண்டாயிரத்துப் பத்தில் மகிந்தவை ஆதரித்தது போன்று ஆதரித்தால் நிலைமை என்னவாகும். இதுபோன்ற எதையும் சிந்திக்காமல் தமிழினத்தின் நலனில் சிறிதுகூடக் கவலையும் அக்கறைகொள்ளாது த.தே.கூ.வினர் தமது வெற்றியிலும் ரணிலின் வெற்றியிலும் பெரிதும் ஈடுபாட்டுடன் இருப்பது தான் இன்றுள்ள நிலைமையாகும்.





மஸ்கெலியா - செ.தி.பெருமாள்

# சீரழிகின்றதா? மவுசாக்கலை நீர்த்தேக்கம்

1961ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசிய கட்சி நீர் மின்சார உற்பத்திக்காக 95000 ஆயிரம் ஹெக்டர் தேயிலை தோட்டங்கள் உள்ளடக்கிய பகுதியில் மவுசாக்கலை நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டது.

இந்த நீர்த்தேக்கத்தை அமைக்க சுமார் ஆறு ஆண்டு காலம் பணியாளர்கள் பணியாற்றினர் அத்துடன் 1969ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நீர்த்தேக்கத்தில் நீர் நிரப்பும் பணி ஆரம்பமானது.அவ்வாறு நீர் நிரப்பும் போது மூன்று நகரங்கள், பதினேழு தோட்டங்கள் மற்றும் ஏழு தொழிற்சாலைகள் மூழ்கியது.

அவ்வாறு மூழ்கடிக்கப்பட்ட மஸ்கெலியா,கங்கேவத்தை மற்றும் காட்டுவாகடை ஆகியன நகரங்களும் மறே,நூக்குவத்தை,லக்சபான,ரக்காடு,அல்வா தோட்டம்,கங்கேவத்தை,சின்ன கங்கேவத்தை,கிராப்பு தோட்டம்,வன்னியன் தோட்டம், பொடியன் தோட்டம்,தோத்தலா தோட்டம்,காட்டு மஸ்கெலியா, பெரிய நடு தோட்டம்,சீமை தோட்டம்,மொக்கா மற்றும் பெரிய மஸ்கெலியா தோட்டங்களாகும்.அத்துடன் நகரில் காணப்பட்ட கோயில், விகாரை, முஸ்லிம் பள்ளிவாசல், கிறிஸ்தவ தேவாலயம்,கடை தொகுதி மற்றும் குடியிருப்புகளும் நீரில் மூழ்கும் நிலை ஏற்பட்டது.

ஆதலால் அங்கு வாழ்ந்த மக்களில் 25 சதவீதமானவர்கள் இந்தியாவிற்கு சென்றனர் 70 வீதமானவர்கள் வேறு இடங்களுக்கு சென்றனர் 5 வீதமானோர் என்ன செய்வது என்று தெரியாமல் கையேந்தும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

ஆகையால் அப்போது ஆட்சியில் இருந்த அரசு மூழ்கடிக்கப்பட்ட நகரங்களில் இருந்த வர்த்தகர்களுக்கு புதிய நகரம் ஒன்றை அமைத்துக் கொடுத்தது.ஆனால் நீரில் மூழ்கிய மூன்று நகர வர்த்தகர்களுக்கு ஒரே நகரில் வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டன.இவ்வாறு வழங்கப்பட்ட போதிலும் ஒரு சில வர்த்தகர்களுக்கு இடம் கிடைக்காமையால் இந்தியாவிற்கு சென்றனர்.

அதுமட்டுமின்றி இவ்வாறு புதிய நகரம் அமைப்பதற்கு முன்பு சிவனொளிபாதமலைக்கு வரும் யாத்ரீகர்கள் இந்நகரில் இருந்த மத ஸ்தலங்களில் இரவு நேரங்களில் தங்கியிருந்து சென்றுள்ளனர்.அவ்வாறு வருகை தரும் யாத்ரீகர்களின் மூலம் நகர வர்த்தகர்களுக்கு சிறந்த வர்த்தக நடவடிக்கைகள் காணப்பட்டது ஆனால் புதிய நகர் அமையப்பெற்றமையால் பெரும்பாலான யாத்ரீகர்கள் நகருக்கு வருகை தராமல் செல்வதால் வர்த்தக நடவடிக்கைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

புதிய நகரம் அமைப்பதற்கு முன்பாக சிவனொளிபாதமலைக்கு செல்லும் யாத்ரீகர்கள் தமது வாகனங்களை கங்கேவத்தை வரை மட்டுமே பயணிக்க கூடியதாக இருந்தது.அதனால் கங்கேவத்தையிலிருந்து மலை அடிவாரம் வரை சிறியரக பேருந்து சேவை நடை பெற்றமை குறிப்பிடத்தக்கது.ஆனாலும் 1969ஆம் ஆண்டில் நீர் நிரம்பிய பின்னரும் பயனற்ற நிலை ஏற்பட்டது.

1972ஆம் ஆண்டு காலப்பகுதியில் கெனியன் நீர் மின்சார நிலையம் அமைத்ததன் பின்னர் இங்கு நீர் மின்சாரம் உற்பத்திக்கு பயன்படுத்திய நீரை கெனியன் நீர் மின்சார நிலையத்திற்கு கொண்டு சென்று அங்கு நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது.

தற்போது மவுசாக்கலை நீர்த்தேக்கத்தில் இருந்து பெறப்படும் நீர் கெனியன் நீர் மின் உற்பத்தி நிலையத்தில் பயன் படுத்திய பின்னர் லக்சபான நீர் மின் உற்பத்தி நிலையம்,பொல்பிட்டிய நீர் மின் உற்பத்தி நிலையம் மற்றும் புதிய லக்சபான நீர் மின் உற்பத்தி நிலையம் ஆகியவை இந்நீரை பயன்படுத்தி நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.இப்போது புதிதாக கலுகலையில் நீர் மின் உற்பத்தி நிலையம் அமைத்து வரும் பணி ஆரம்பித்திருப்பதால் அங்கும் இந்நீர் பயன்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.




அதன் பின்னர் வருடாந்தம் வரட்சி காலத்தில் 62அடி வரை நீர் வற்றி அங்கு காணப்பட்ட கோயில், புத்தர் சிலை, பள்ளி வாசல் மற்றும் காவடி பாலம் ஆகியவை காட்சி தரும். அவ்வாறு வரட்சி காலத்தில் காவடி பாலத்தில் காணப்பட்ட இரும்பு தூண்களை வெட்டி எடுத்து விற்றுவிட்டார் சில விஷமிகள்.

அத்துடன் இந்நகரில் காணப்பட்ட சிவன் கோயிலில் இருந்த சிவன் சிலையை நூக்குவத்தை தோட்ட அம்மன் கோயிலில் தற்போது வைத்திருக்கின்றனர்.இப்போது இந்நீர்தேக்கத்தில் நீர் வற்றும் போது உள்ளூர் பயணிகள் மட்டும் வருகை தராமல் வெளிநாட்டு உள்ளாச பயணிகளும் இந்நீர்தேக்கத்தை பார்வையிட்டு செல்கின்றனர்.

இங்கு காணப்பட்ட கட்டிடங்களில் தற்போதும் தனது அமைப்பில் சிறிதும் மாற்றம் ஏற்படாமல் சண்முக நாதர் கோயில் காட்சி தருகின்றது.இக்கோயிலானது சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நீரில் மூழ்கி இருந்து வருகிறது. ஆனால் ஏனைய வணக்கஸ்தலங்களில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் இக்கோயில் அப்போது இருந்த வடிவமைப்பில் இருப்பது ஒரு அதிசயமான விடயமாகும்.இப்பகுதியை தொல்பொருள் ஆராய்ச்சி மையம் பாதுகாக்கும் நோக்கில் இங்கு காணப்படும் கட்டிடங்களை மஸ்கெலியா பொலிஸ் நிலையத்துடன் இணைந்து பாதுகாத்து வருகின்றனர்.

இவ்வாறு காணப்படும் வரலாற்று சிறப்பு வாய்ந்த இடத்தில் தற்போது குப்பை குவிந்து கிடப்பதால் பார்வையிட வரும் பார்வையாளர்கள் பெரும் அசௌகரியத்திற்கு முகம்கொடுத்து வருகின்றனர்.இக்குப்பைகளால் துர்நாற்றம் வீசுவதுடன் இந்நீர்தேகத்தில் காணப்படும் மீன்பிடி மீனவர்களும் பாதிக்கும் வாய்ப்பு தோன்றியுள்ளது.ஆகவே இக்குப்பைகளை நீர் இல்லாத இச்சந்தர்ப்பத்தில் அகற்ற மஸ்கெலியா பிரதேச சபை அதிகாரிகளோ அல்லது தொண்டு நிறுவனங்களோ முன்வரவேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

---

(சென்றவாரத் தொடர்ச்சி....)




இன ரீதியாகவும், மத ரீதியாகவும் தம்மை அடையாளம் காணும் ஒவ்வொரு, வெவ்வேறு மக்கள் குழுக்களால் திடீர் திடீரென முரண்பாடுகள் அதிகமாகி வருவதை உலகம் சந்திக்கின்றது. இந்நிலை சிறுபான்மை இனங்களின் விரக்தியைத் தூண்டிக் கலவரங்களுக்கும் கொரில்லா யுத்ததிற்கும் மட்டுமல்ல, உள்நாட்டு யுத்ததிற்கும் இட்டுச் செல்லும். இம்முரண்பாடுகள் தேசிய ஒருங்கமைப்பிற்கு ஒரு தடையாக அமைவது மட்டுமன்றி அரசியல் உறுதிப்பாடின்மைக்கான ஒரு மூலமாகவும் விளங்கும்.

இலங்கையில் காணப்படும் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான இனமுரண்பாடு சமூகரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் நாட்டை கூறுபடுத்தியுள்ளதுடன், தேசத்தின் உளப்பதிவிலும் ஆழமான வடுக்களை விதைத்துள்ளது. என்றென்றும் ஆழமாகி வருகின்ற இனப்பிரிவின் விளைவாக வன்செயல் மட்டம் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. அவை இச் சிறுதீவை அதிரச்செய்து இயல்பான வாழ்வை சிதிலமடையச் செய்துள்ளன.

19ஆம் நூற்றாண்டின் அச்சுக்கலை முகிழ்ப்புடன் ஆரம்பமான இதழியல்துறை இத்தகைய சமூக நிலமைகளை வெளிப்படுத்தும் பணியை மேற்கொள்ளத்தொடங்கியது. இதழியலின் வளர்ச்சியினூடாகக் காட்டூன் எனும் விடயமும் சமூக அரசியல் வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் ஊடகமாகத் தொழிற்படத் தொடங்கியது. ஒரு கால சமூக வரலாற்றைப் படித்தல் என்பது அக்கால அனைத்து வெளிப்பாட்டுக் கலைகளினதும், அனைத்து செய்பண்டங்கள் முதலிய பண்பாட்டு உற்பத்திகள் பலவற்றையும் உள்வாங்குவதனூடாகவே சாத்தியமாகின்றது. இவற்றுள் காண்பியப் படைப்புக்கள் சமூக வரலாற்றை எடுத்துக்காட்டுவதில் முக்கிய பங்காற்றுகின்றன.

குறிப்பாக அரசியல் விவகாரங்களான ஒடுக்கப்படும் சிறுபான்மை இனத்தவருக்கு எதிரான இனத்துவேச வெளிப்பாடுகளையும், சிறுபான்மை இனத்தவர் மீதான அரசுகளின் அசமந்தப் போக்குகளையும், போலி அரசியல், தேர்தல் விவகாரங்கள், சிறுபான்மை இனத்தவர் மீதான பெரும்பான்மையினரின் சுரண்டல் நடவடிக்கைகள் போன்ற விடயங்களை நகைத்தலினூடாகச் சிந்திக்க வைத்துச் செயலாற்றும் ஊடகமா கக் காட்டூன்கள் தொழிற்படுகின்றன.


சிக்கல் வாய்ந்த சமூக வரலாற்றைச் சுவைபட விளங்கிக்கொள்வதற்கு எம்முன் உள்ள முக்கிய ஆவணங்களுள் ஒன்று நகைச்சுவைப் பிரதிகளே. அவற்றுள் காட்டூன்கள் முக்கியமான ஊடகங்களாகின்றன. விகடமும் விமர்சனமும் கலந்த வரைபுகளைக் காட்டூன் என அழைக்கின்றனர். அவை சமூக நிலவரங்களை வெளிக் கொணரும் ஒரு எளிய ஊடகமாகத் தொழிற்படுகின்றன.

காட்டூன் பற்றிய விடயங்கள் அனைத்துத் தரப்பினராலும் உள் வாங்கப்படுகின்ற ஒரு விடயமாக உள்ளதனாலும், சிறியோர் முதல் பெரியோர் வரை அனைத்து மொழி கேசுபவர்களும் விளங்கியும், விரும்பியும் நுகரும் ஒரு செய்தி ஊடகமாகக் காட்டூன்கள் தொழிற்படுகின்றன.

பல்துறைத் தொடர்புகளைக் கொண்ட ஒரு விடயமாகக் காட்டூன்கள் உள்ளதனை நாம் மறுக்க இயலாது. ஏனெனில் கலைத்துறைக்குள் கோட்டோவிய வகையாகவும், அரசியலில் நேரடியாகச் சுட்டிக்காட்ட முடியாத விடயங்களைக் கேலிசெய்து வரைதலினூடாகக் கருத்துக்களை உணர்த்துவதாகவும், சமூகவியலில் சமூக கலாசார மாற்றங்களைப் பிரதிபலிபதாகவும், நிறைவேறாத எண்ணப்பாங்குகள் குறித்த காட்டூன் படங்களைப் பார்த்தலினூடாக நிறைவேற்றிக்கொள்வதில் உளவியல் செல்வாக்குச் செலுத்துகின்றது. சமூக ஒழுக்க விழுமியங்களையும், சமய வெளிப்பாடுகளையும் சுட்டி நிற்கின்றது. இதனால் ஓர் காலத்தினது சமூக அசைவியக்கத்தைப் புரிதலில் காட்டூன்கள் வரலாற்றுத் துறையில் முக்கியம் பெறுகின்றன.

இவ்வாறு பல்துறைச் செயற்பாடுகள் காட்டூன்களில் செல்வாக்குச் செலுத்து வதனால் இலங்கையில் புரையோடிக் காணப்படும் இன முரண்பாடுகளை இக் காட்டூகளினூடாக ஆய்வதனை முக்கியத்துவமுடையதாகக் கொள்ளலாம்.

துன்னாலை செல்வன்



# தாக்குதலின் சுழியோடிகள்

இலங்கையில் உள்ளூர் பயங்கரவாதிகளால் தொடர் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக சிறிலங்கா அரசாங்கம் கூறியுள்ளபோதும் அதில் வெளிநாட்டு பயங்கரவாதிகளின் தாக்குதல் நுட்பம் தெளிவாக காணப்படுகின்றதென சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பு வல்லுநர்கள் கூறியுள்ளதாக றொய்ட்டர் செய்தி நிறுவனம் அறிக்கையிட்டுள்ளது.

தொடர் குண்டுவெடிப்புக்களின் சூத்திரதாரிகளின் பின்னால் சர்வதேச பயங்கரவாதிகளின் தொடர்பும் இருப்பதாக கூறியுள்ள சிறிலங்கா அரசாங்கம் எந்த அமைப்பு என தெரியவரவில்லை என கூறியுள்ளது.

தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள தௌஹீத் ஜமாத் என்ற அமைப்பு இந்த அமைப்புக்களுடன் இணைந்து இந்த பயங்கரவாத தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம். இதனடிப்படையில் சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பு வல்லுநர்கள், இந்த மோசமான தாக்குதல் நுட்பங்களானது உலகின் பயங்கர தீவிரவாத அமைப்புக்களின் பாணியினைப் பின்பற்றியிருப்பதாக கூறுகின்றனர்.

குறிப்பாக அல்-குவைதா மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக் கள் பின்பற்றும் நுட்பங்களே இந்த தாக்குதல்களின் போதும் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரிகின்றது என அவர்கள் கூறுவதாக றொய்ட்டர் செய்தி நிறுவனம் மேலும் கூறியுள்ளது.

எவ்வாறாயினும் தொடர்ச்சியாக இடம்பெறும் கைதுகளில் அகப்பட்டோர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுவரும் நிலையில் இதன் பின்னாலுள்ள சர்வதேச வலைப்பின்னல் எவ்வாறு வெளிச்சத்திற்கு வரப்போகின்றது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கமுடியும்.

மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் ஈடுபட்டவர்களிற்கு முக்கிய உதவிகளை வழங்கினார் என சந்தேகிக்கப்படும் இலங்கையின் மென்பொருள் பொறியியலாளரை இந்தியா மூன்று வருடங்களாக கண்காணித்து வந்தது என றொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது. ஐ.எஸ். அமைப்புடன் குறிப்பிட்ட இளைஞரிற்கு உள்ள தொடர்பு குறித்து இந்தியா கண்காணித்து வந்தது.

கிறிஸ்தவ தேவாலயங்களிலும் ஹோட்டல்களிலும் தாக்கு தல்களை மேற்கொண்ட குழுக்களிற்கு மத்தியிலான தொ்டர் பாளராக 24 வயதுடைய ஆதில் அனீஸ் செயற்பட்டு வந்தார் என சந்தேகிப்பதாக விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த மென்பொறியியலாளர் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக் கப்பட்டுள்ளார். எனினும் இது குறித்த தகவல்களை இலங்கை அதிகாரிகள் பகிரங்கப்படுத்துவதில்லை.

எனினும் இலங்கையின் பொலிஸ் பேச்சாளர் இதனை உறுதி செய்துள்ளார். ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார் எனவும் றொய்ட்டர் தெரிவித்துள்ளது. எனினும் அவர் மேலதிக தகவல்களை வழங்க மறுத்துள்ளார்.

இந்தியாவின் தேசிய புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரியொருவரும் குஜராத்தைச் சேர்ந்த அதிகாரியொருவரும் இந்த நபர் குறித்து இலங்கைக்கு தகவல்களை வழங்கி யுள்ளதாக தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்டுள்ள நபர் பிரித்தானிய பல்கலைக்கழகத்தில் அரசியல் பயின்று. பின்னர் கணணித்துறையில் பட்டமேற்படிப்பைப் பூர்த்தி செய்தவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் அவசரகால சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள நபர் சட்டத்தரணியொருவரின் உதவியை பெறமுடியாது என்பதால் அவரை தொடர்புகொள்ள முடியவில்லை. எனினும் குறிப்பிட்ட நபரின் தந்தை அனீஸ் -தன்மகனிற்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார்.

2006 முதல் இந்த நபரை கண்காணித்து வந்துள்ளோம் என தெரிவித்துள்ள இந்திய புலனாய்வுப் பிரிவினர் இவர் ஐ.எஸ். அமைப்பின் ஆதரவாளர் என இந்திய நீதிமன்றில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. எனினும் இந்த நபர் குறித்து இந்தியா இலங்கைக்கு தகவல்களை வழங்கியதா என்பதை உறுதி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்தியா குறிப்பிட்ட மென்பொறியியலாளரிற்கு எதிரான விசாரணைகள் முடிவடைந்த பின்னரும் அவரை கண்காணிப்பின் கீழ் வைத்திருந்ததா என்பதை இந்திய அதிகாரிகள் தெரிவிக்க மறுத்துள்ளனர்.

இதேவேளை ஆதில் தேசிய தவ்ஹீத் ஜமாத்திற்கும் ஜமாதி மிலாத் இப்ராஹிம் என்ற அமைப்பிற்கும் இடையிலான தொடர்புகளை ஏற்படுத்திக்கொடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது. இருதரப்பினரும் டாக்வெப்பினையும் வட்ஸ் அப்பினையும் பயன்படுத்தியுள்ளனர். எனினும் ஆதில் குண்டுத் தாக்குதல்களிற்கு உதவினாரா அல்லது தாக்குதல்களை திட்டமிட்டு வழிநடத்தியவர்களில் ஒருவரா என்பது தெரியவில்லை.

கடந்த வாரம் வேர்த்துசா அலுவலகத்தில் சோதனையிட்ட பொலிஸார் அங்கு பணியாற்றும் ஒருவரை கைது செய்துள்ளனர். அதில் 2013 இல் அங்கு பணியாற்றியவர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையர் ஒருவருக்கும் இந்தியர்கள் இருவருக்கும் இடையிலான இணைய உரையாடல்கள் 2016 இல் ஆரம்பித்து 2017 வரை நீடித்தமையை உறுதிசெய்யும் நீதிமன்ற ஆவணங்களை பார்வையிட்டுள்ளதாக தெரிவித்துள்ள றொய்ட் டர்ஸ் இந்தியர்கள் இருவரும் கைதுசெய்யப்படும் வரை இந்த உரையாடல்கள் இடம்பெற்றன எனவும் குறிப்பிட்டுள்ளது.

ஆதில் எக்ஸ் என தன்னை அழைத்துகொள்ளும் நபர் இலங்கையில் பெரும்பான்மை இனத்தவர்கள் முஸ்லிம்களிற்கு எதிராக மேற்கொள்ளும் அநீதிகள் குறித்து அறிந்துள்ளீர்களா என இந்தியர்களிடம் கேள்வி எழுப்பியுள்ளார் என றொய்ட்டர் தெரிவித்துள்ளது. அதன் பின்னர் அவர் தனது அனுபவங்கள் குறித்து தெரிவித்துள்ளார் தான் சிறையிலிருந்தது அங்கு தாக்கப்பட்டது போன்ற அனுபவங்களை விபரித்துள்ளமை நீதிமன்ற ஆவணங்கள் மூலம் தெரியவந்துள்ளது. இலங்கை இந்திய விசாரணையாளர்கள் அவர் தெரிவித்திருப்பது எதுவும் உண்மையில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை தான் பத்திரிகையாளர் எனவும் கலாநிதி பட்டம் பெற்றவர் எனவும் சில இடங்களில் அவர் குறிப்பிட்டுள்ளமை பொய் என விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர். அதில் தனது வீட்டிலிருந்து செயற்பட்டார் அவர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் முக்கிய பங்காற்றினார் தொழில்நுட்ப மற்றும் பயிற்சிகளில் முக்கிய பங்களிப்பை வழங்கினார் என விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர். அவரே தாக் குதல்களை மேற்கொண்டவர்களின் முக்கிய தொழில்நுட்பவிய லாளர் என விசாரணையில் ஈடுபட்டுள்ள சி.ஐ.டி. அதிகாரியொருவர் றொய்ட்டரிற்கு தெரிவித்துள்ளார். தெகிவளையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட அப்துல் லத்தீவ் முகமட் ஜமிலிற்கு ஆதில் உதவினார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதலிற்கு ஒரு வாரத் திற்கு முன்னர் ஆதில் சஹ்ரான் ஹாசிமையும் வேறு இரண்டு தற்கொலை குண்டு-தாரிகளையும் சந்தித்தார் என தெரிவித்துள்ள அதிகாரி கள் அவரது வீட்டை நாங்கள் சோதனையிட்டவேளை அவரது கணிணியிலிருந்த அனைத்து ஆவணங்களும் அழிக்கப்பட்டி ருந்தன என தெரிவித்துள்ளனர்.

ஆதில் தாக்குதல்களை மேற்கொண்டவர்களிற்கு தொடர்பாடல்களில் முக்கிய உதவிகளை வழங்கியுள்ளதுடன் சந்திப்புகள் மற்றும் பயிற்சிகளிற்கான உதவிகளையும் வழங்கியுள்ளார் என பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர். இலக்கில்லாத ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் தாக்குதல்களில் ஈடுபடுவர்கள் தொழில்நுட்பவியலாளர்களாகவும் பணக்காரர்களாகவும் இருக்கிறார்கள்.

இவர்கள் இந்தத் தாக்குதல் மூலம் தனிப் பட்ட நபர்களை அடையாளப்படுத்துகிறார்கள். அதாவது இதை அவர்களின் விளையாட்டு என்று தான் சொல்ல முடிந்தது. ■



# ஊடுருவி உலகநாதன்

ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு பிள்ளைகளை கொண்டு சென்று விட்டு பின்னர் பாடசாலை முடிவடைந்த நேரம் கூட்டிவரப் போகும் பெற்றோர்கள் நாளை பாடசாலை வரும் போது பிள்ளைகளிடம் என்னத்தை வாங்கிவரச் சொல்லி இருக்கினமோ? அல்லது ஏதாவது ஒன்றிற்கு பணம் கட்டச் சொல்லிச்சினமோ என்ற நினைப்பிலே ஒவ்வொரு நாளும் பாடசாலைகளில் இருந்து பிள்ளைகளை கூட்டி வருகிறார்கள்.

இதைப் பற்றி கல்வி சம்பந்தப் பட்டவர்கள் எவருமே கண்டு கொள்வதில்லை. என்னத்தை பெரிசா காசை பெற்றோரிடம் இருந்து பிடுங்கி விட்டம் என்று எனக்குத் தெரிந்த ஆசிரி யர்களுடன் கதைக்கும் போது சொல்லுகினம். ஆசிரியர்கள் கூட கருத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை. பணம் படைத்தவனுக்கு இந்த விடயம் சின்ன விடயம் தான். பண வசதி இல்லாதவனுக்கு இந்த விடயம் பெரியவிடயம். இவர்களைப் பற்றி கொஞ்சம் சிந்தியுங்கள்.

அரச பாடசாலை என்றால் இலவசக் கல்வி போதிக்கப்படும் என்றிருந்த காலம் மலையேறிவிட்டது. பணம் படைத்தவா் கள் தான் அரச பாடசாலைகளிலும் படிக்க முடியும் என்ற நிலைமை உருவாகி வருகிறது. காலப் போக்கில் அரச பாடசாலைகள் தனியார் பாடசாலைகள் போல் செயற்படுமானால் கல்வியை இழந்த சமூகமாக தமிழ்ச் சமூகம் திகழும் என்பது உண்மை.

ஏன் சொல்லுறன் என்றால் பொரு ளாதாரத்தில் பின்தங்கிய கெட்டிக்காரப் பிள்ளைகள் படிப்பதற்கு பாடசாலை இல்லாமல் போய் விடும். இதன் காரணமாக மூளை வளமுள்ள பிள்ளைகளை நாங்கள் இழக்கும் சூழலில் கல்வியை இழந்து நிற்போம்.

கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தில் பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவா் களால் பாடசாலை தேவைக்கு பணம் செலுத்த முடியவில்லை என்றால் கிராம சேவகரின் அத்தாட்சிக் கடிதம் இருந்தால் மாணவர்களிடம் பணம் வசூலிக்கக் கூடாது என்றும் உள நலம் பாதிக்காத படி மாணவர்களை சக மாணவர்கள் போல் நடத்த வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு ஏற்ப அரச பாடசாலைகள் இயங்குகின் றதா என்று பார்த்தால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். பிறகு எதற்கு இந்த சுற்றுநிருபம் என்று கேட்கக் கூடும். அதுதான் மதுபானங்களை விற்பனை செய்ய அனுமதி வழங்கிவிட்டு உடம்புக்கு கூடாது நோய் வரும் கான்ஸ்சா் வரும் என்று கூறுவது போல் தான் இருக்கிறது. கல்வி அமைச்சின் சுற்றுநிருபம்.

இந்த நடைமுறையை பின் பற்றாத காரணத்தால் தான் இன்று அரச பாடசாலைகள் எது தனியார் பாடசாலைகள் எது என்று பிரித்துப் பார்க்க முடியாமல் இருக்கிறது.

இப்பத்த பிள்ளைகளிடம் அதை வாங்கு இதை வாங்கு என்று பாடசாலை களிலே விற்பனை செய்யும் தந்திரம் பாடசாலை அதிபா் ஆசிரியர்களிடம் இருக்கிற போது இவர்களால் உருவாகும் மாணவர்கள் கல்வியில் முன்னேறுகிறார் களோ இல்லையோ வியாபாரத்தில் கொடி கட்டிப் பறப்பார்கள் என்பது உண்மை.

எதுக்கெடுத்தாலும் மாணவர்களிடம் பணம் சேகரிக்கும் மனநிலையுடைய பாடசாலைகள் இருக்கும் வரை பாடசாலையை கட்டுக்கோப்புடன் வைத்திருக்க முடியாத நிலை தோன்றும்.

ஒரு பாடசாலையில் இவ்வளவு மாணவர்கள் தான் கல்வி கற்க முடியும் என்றும் அளவுக்கு அதிகமாக பிள்ளைகளை சேர்க்க முடியாது என்றும் சுற்றுநிருபத்தில் இருக்கிறது. அதேபோல் பாடசாலையின் கட்டடத்தை அகலப்படுத்திக் கட்ட முடியாது என்றும் இருக்கிறது.

ஆனால் பாடசாலை அபிவிருத்தி என்ற பெயரில் பணத்தைச் சேகரித்து பாடசாலை இருக்கின்ற அளவைவிட பெரிதாக கட்டுகிறார் கள். இப்படியாக மாணவர்களிடம் பல வழிகளில் பணம் வசூலிக்கப் படுகிறது.

மாணவர்களிடம் இருந்து புணம் வசூலிப்பதற்கு தகுந்த காரணம் இருக்க வேண்டும் அப்படி இல்லாத போது வசூலிக்க முடியாது.

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பை அடுத்து பாடசாலைகளுக்கு இராணுவம் பொலிஸ் பாதுகாப்பு வழங்குகிறது. இந்த பாதுகாப்பு போதாது என்று சம்பளம் வழங்கி காவலாளி ஒருவரையும் நியமிப்பதற்கு மாணவர்களிடம் பணம் வசூலிக்க முடிவு செய்தது.

பின்னா் முகப் புத்தகங்களில் இந்த சம்பவம் தொடா்பில் கருத்துகள் பரிமாறப் பட்ட நிலையில் இந்த நடவடிக்கையை கைவிட்டுள்ளனா்.

வடமராட்சியில் உள்ள இந்தப் பாடசாலை இதற்கு முன்னரும் ஒரு தடவை பாட சாலை வழங்கிய சீருடை துணியை தைப்பதற்கு மாணவர்களிடம் இருந்து பணம் வசூலிக்க எடுத்த முயற்சி முடியாமல் போனமை குறிப்பிடத்தக்கது. எந்த வழி என்றாலும் மாணவர்களி டம் இருந்து பணத்தை வசூலிக்க தயாராக இருக்கும் பாடசாலைகளை என்னவென்று சொல்ல. ■




# தலித் இலக்கியத்தின் பிதாமகர் - கே.டானியல்

காவலூர் இ.விஜேந்திரன்

யாழ்ப்பாண பண்பாட்டு வாழ்வியலை, கலாசார செயல்நிலையை சமூக நிலையில் நின்று மிக தீவிரமாக இலக்கியம் படைத்தவர் கே.டானியல். தலித் எழுத்தாளர்களில் முதன்மை நிலை-லயில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இவரது படைப்புக்களில் உண்மை, நேர்மை போன்ற பண்புகளுடன் ஒரு கொதி நிலையான பிரச்சினைகள் எடுத்தாளப்பட்டிருக்கும். மனதில்பட்ட விடயங்களை துணிவாகவும் தெளிவா கவும் பாமர மக்களும் படித்தறியும் வகையில் எழுதியவர். இவரது ஆளுமை யில் வறுமையும் சமூக கட்டமைப்புமே செல்வாக்குச் செலுத்தியுள்ளதை கே.டானி யலின் குறு நாவல்கள், நாவல்கள், சிறுகதைகள் மூலமாக அறியலாம்.

மக்களிடம் படிப்பதை மக்களிடமே திருப்பிக்கொடுக்கும் வகையில் யாழ்ப்பாணத்தின் அனைத்துக் கிராமங்களுக்கும் சென்று நிகழ்வுகள் சம்பவங்களைக் கேட்டறிந்து கொள்வார். நிலவுடமை காரணமாக உருவான சாதியும் தனிச்சொத்துரிமையால் தோற்றம் பெற்ற வறுமையும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்ற நிலையிலே அன்றைய யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் வாழ்வியல் அமைந்திருந்தது. தான் சார்ந்த சமூகங்களின் காவலனாக வாழ்ந்தவர். தன் எழுத்துக்களை வாழ்வாகவும் வாழ்வை எழுத்தாகவும் கொண்ட கே.டானியல் ஈழத்தவர்களின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை உலகறியச் செய்தவர்.

இரண்டு தலைமுறைகளின் இரண்டு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள கே.டானியல் நினைவு மண்டபத்தில் இடம்பெற்றது. கண்போன்ற இந்நிகழ்வு பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றதுடன் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் சிவலிங்கராஜா, பேராசிரி யர் நிர்மலவாசன் ஆகியோர் நிகழ்வை சிறப்பித்தனர்.

கண்போன்ற நிகழ்வு என்னவென்றால் எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என ஆத்திசூடியில் அழகாகக் கூறப்பட்டுள் ளது. கணக்கியல் சார்ந்து நவீன நிதிக்கணக்கீட்டு கோட்பாடுகள் என்ற நூலும் இதனை எண் எனவும் சிறுகதை களும் குறுநாவல்களும் எனும் கே.டானி யலின் படைப்புக்கள் தொகுதி இரண்டு என்பதனை எழுத்தெனவும் நோக்கின் நிகழ்வு கண்போன்றே அமையும்.

உரிய நேரத்தில் உயர்வாகவும் உணர் வாகவும் இடம்பெற்ற இந்நிகழ்வில் கே.டானியல் படைப்புக்கள் என்ற நூலின் முதற்பிரதியை நாடறிந்த எழுத்தாளர் கே.ஆர். டேவிற்றிடம் கொடுத்தமை நிகழ்வுக்கு அழகையும் துறைசார்ந்தவர்களுக்கு ஆனந்தத்தையும் ஏற்படுத்தியது.

அடையாளம் நிறுவனத்தின் வெளியீ டாக டானியல் வசந்தனின் (சாம் மாஸ்ரர்) தொகுப்பாக ஐந்து குறுநாவல்களும் 14 சிறுகதைகளையும் தாங்கியதாக கே.டானியலின் படைப்புக்கள் தொகுதி 2 உள்ளது. இந்நூலின் தொகுதி ஒன்று 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாவலர் கலாசார மண்டபத்தில் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 5 குறு நாவல்களில் போராளிகள் காத்திருக்கிறார்கள், பூ மரங்கள் இவை இரண்டும் ஏற்கனவே நூலுருப் பெற்றவை. முருங்கையிலைக் கஞ்சி, மையக்குறி, இருளின் கதிர்கள் ஆகிய





குறுநாவல்கள் இத்தொகுப்பில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. 14 சிறுகதைகளில் ஒரு சில கதைகளே பழைய தொகுப்புக்களில் இடம்பெற்றன.

ஏனையவை தொகுதி இரண்டில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளன.

தொகுதி இரண்டில் இடம்பெற்ற குறுநாவல்களும் சிறுகதைகளும் கடந்தகால யாழ்ப்பாணத்தை கச்சிதமாக படம் பிடித்துள்ளன. யாழ்ப்பாணத்தில் இவ்வாறான பேரவலம் உயர்வு தாழ்வு என்ற மனோநிலையை மட்டும் கொண்டு இடம்பெற்றதா? இவற்றையெல்லாம் தாண்டியா தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் தலை யெடுத்தனர் என்ற வினாத்தொகுதி களை வாசித்தவர்களை நிச்சயம் யோசிக்க வைக்கும். பெரும் கொடும் கோண்மை நமது கிராமங்களில் நமது தெருக்களில் நம்மவர்களால் முன்னெடுக்கப்பட்டதா? என்ற ஏக்கம் இளையவர்களிடையே எழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இந் நிகழ்வின் இன்னோர் அம்சமாக டானியல் வசந்தனின் (சாம் மாஸ்ரர்) நவீன நிதிக் கணக்கீட்டுக் கோட்பாடுகள் என்ற நூலும் வெளியிடப்பட்டது. இந் நூலில் உள்ள இரகசிய இலக்கத்தைக் கொண்டு இணையத்தளம் மூலமாக வும் கற்க முடியும் இதேவேளை கே.டானியலின் படைப்புக்களையும் இணையத்தளத்தில் வாசிக்ககுகூடிய ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

15.04.1926 இல் ஆனைக்கோட்டை யில் கிறகொரி - மரியாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த டானியல் உயரப்புலம் றோமன் கத்தோலிக்க ஆரம்பப் பாடசாலை யில் தரம் 5 வரை கல்வி கற்றவர். இதன் பின்னர் பாடசாலைக் கல்வியை தொடரவில்லை. எவரிடமும் தங்கிவாழ விரும்பாத கே.டானியல் சிறுவயது முதலே பல்வேறு தொழில்களை செய்தபோதிலும் அவற்றில் அவருக்கு அதிகமான நாட்டம் வரவில்லை.

சிறில் என்ற தனது தம்பியாரின் துணையுடன் வெலிங்டன் சந்தியில் (கே.டானியல் ஞாபகார்த்த மண்டபம்) வெல்டிங் அன்ட் லேத் சிஸ்ரத்தை முதன் முதலாக யாழ்ப்பாணத்துக்கு அறி முகம் செய்து மிகப்பெரிய அளவில் அத் தொழிலை முன்னெடுத்தவர். எதிலும் புதிய நுட்பத்தை கையாளும் இவர் லேத் துறையில் மிகப்பெரிய மாறுதல்களைச் செய்து குறிப்பிடும் படியான தொழிலதிபராக தன்னை மாற்றிக்கொண்டார்.

தனது இறுதிக்காலம் வரை இத்தொழி லையே மேற்கொண்டு வந்தார். பின் னர் மகன்களால் இத்தொழில் முன்னெ டுக்கப்பட்ட போதும் போர்ச்சூழல் அதற்கு சரியான சந்தர்ப்பத்தை வழங்கவில்லை. (2 லேத் மிஸின்கள் கே.டானியல் வாழ்ந்த கோவில் வீதியில் உள்ள அவரது காணி யில் இப்பவும் இருக்கின்றது.)

ஆங்கில மொழியிலும் ஜப்பானிய மொழியிலும் இவரது இரண்டு நாவல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவரது படைப்பிலக்கியங்களைப் பயன்படுத்தி பலர் தமது உயர் கல்வி ஆய்வுகளை மேற்கொண்டனர். கலாநிதிப்பட்ட ஆய்வுக்குக் கூட இவரது ஆக்கங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நாவல், குறு நாவல், சிறுகதை, கட்டுரைகள் மற்றும் நாடகங்கள், கடிதங்கள் என நீண்டு செல்லும் இவரின் எழுத்து முயற்சிகளுக்கு சுதந்திரன், ஈழகேசரி, தேசாபிமானி, தினகரன், வீரகேசரி இவற்றுடன் ஈழமுரசு, முரசொலி, உதயன் சஞ்சீவி போன்ற பத்திரிகைகளும் சில சஞ்சிகைகளும் களம் அமைத்துக் கொடுத்தன.

இந்தியாவில் வைத்தே தனது நூல்க ளின் பதிப்பு வேலைகளை செய்துவந்த இவர் இந்திய இலக்கியவாதிகளுடன் மிகநெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்தவர்.

இறுதியாக 23.03.1986 இல் தஞ்சாவூரில் இயற்கையெய்திய போதும் நண்பர்கள் மற்றும் படைப்பாளிகளால் அஞ்சலிக்கூட்டம் நடாத்தப்பட்டதுடன் செங்கொடி போர்த்தப்பட்டு இறுதி மரி யாதை செலுத்தப்பட்டு தஞ்சாவூரில் அடக்கம் செய்யப்பட்டமையும் குறிப் பிடத்தக்கது. தான் படிக்கவில்லை என்ற காரணத்தால் தனது பிள்ளைகளை நன்றாகக் கல்விகற்பதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தவர்.

இவரது எழுத்துப்பணி நல்லிரவில் ஆரம்பித்து அனேக நாட்களில் அதிகாலை 3 மணிவரை தொடர்வதாகவும் ஒரு கதையை எழுதும்போது ஒவ்வொரு பாத்திரம் / காட்சிக்கு தனித்தனி பேப்பர்ளைப் பாவித்து கதையின் தொடர்ச்சியை அந்ததந்தப் பேப்பரில் எழுதி இறுதியாக கதையை நிறைவு செய்வதாகவும் (திரைப்படம் எடுத்து எடிற்றிங் செய்வது போல) அவரது மகன் சாம் மாஸ்ரர் குறிப்பிடுகிறார். இவரது எழுத்துக்களை நல்ல கையெழுத்தில் பிரதி செய்வது குமார் தனபாலு என்ற நாடக நடிகர். அதன் பின்னர் தட்டெழுத்துச் செய்து தனது நண்பர்களைக் கொண்டு ஒப்புநோக்கி இந்தியா சென்று பதிப்பித்து வருவதே இவரின் வெற்றியின் இரகசியமா கவும் இருக்கலாம்.


சுந்தர மரியாள் செய்த
சூதை நான் அறியேனோ
கஞ்சிக்காக வல்லவோ
சோற்றைக் குழையவிட்டார்.

மது மயக்கத்தில் வீட்டுத்திண்ணையில் இருந்து டானியலின் தந்தை பாடியதே மேலே எழுதியவரிகள். டானியலின் தாய் மரியாள் பிள்ளைகளுக்கு கஞ்சியைக் கொடுப்பதற்காக சில வேளைகளில் சோற் றைக் குழையவிடுவதால் தந்தை இவ்வாறு பாடியதாக கே.டானியல் நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

புகழ் பூத்த தலித் எழுத்தாளர்களின் பிதாமகர் என்ற பெரு மகுடத்துக்குச் சொந்தக்காரன் கே.டானியல். தன் எழுத்துக்களால் சமூக விடுதலையை வலியுறுத்தி அதனை ஆவணமாக்கியவர். தான் சார்ந்த சமூக விடுதலைக்காக தான் வரித்துக்கொண்ட துறையை இறுதி-வரை உறுதியாக பின்பற்றியவர். அதில் மாபெரும் வெற்றியும் கண்டவர். சமூக மாற்றத்துக்காக பல வழிகளிலும் பல்வேறு போராட்டங்களிலும் பங்குகொண்ட மாபெரும் படைப்பிலக்கிய வாதி யான கே.டானியலை இன்றைய சமூகம் கண்டுகொள்ளவில்லை. அவரது எழுத்தை அங்கீகரித்து ஆய்வுக்கு உட்படுத்தியவர்கள் அவரை அங்கீகரிக்கவில்லை. அவருக்கு மிக உயர்வான கௌரவம் கொடுக்கவில்லை. நடிகமணி வி.வி வைரமுத்து, நாதஸ்வர மேதை என்.கே.பத்மநாதன் போன்ற பல ருக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதி பட்டத்தை வழங்கியுள் ளது. ஆனால் இவருக்கு இவ்வாறான முயற்சிகளை யாரும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இறந்தவர் மீண்டு வந்து தன் எழுத்துக்களால் போராடித்தான் கௌர வம் பெறவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கிறார்களோ தெரியவில்லை. எழுத்து லக மாமேதை மட்டுமன்றி புரட்சிகர போராளியே கே.டானியல்.



சிறுகதை



# எல்லோரும் மனிதர்களே

**ச.முருகானந்தன்**

காளிமுத்து... வரேங் எலியட்ட...காளிமுத்து வாடா வெளியில...'

லயத்தின் முன்னாள் நின்று சத்தமிட்டான் சந்திர சேகர. மலையடிவாரக் கிராமத்துச் சண்டியனான அவனது கூப்பாட்டில் லயத்தி லிருந்தவர்களுக்கு லயத்தைக் கலக்கியது.

'ஏய் காளிமுத்து...'

'ஐயா! பின்பக்கத்தால ஓடுங்க..' நாங்க சமாளிக்கிறோம்.. ஓடுங்க ஐயா...

காளிமுத்துவின் பெண் பிள்ளைகள் அவனை விரட்டினர். வாசலில் கூச்சலிட்டுக்கொண்டிருந்த சந்திர சேகர இப்போது கதவைப் படபட வென்று தட்டினான்.

'ஏய் ... காளிமுத்து ... வாடா வெளியே..' இப்போது காளிமுத்துவின் மகள் அன்னலட்சுமி மெதுவாகக் கதவைத் திறந்தாள். கடுப்புடன் நின்ற சந்திரசேகரவின் சிவந்த கண் களைப் பர்ரத்ததும் அன்னலட்சுமிக்குப் பயமாக இருந்தது. அவளோடு ஒட்டிக்கொண்டு பின்னே நின்ற பாப்பாத்திக்கு 'ஜில்; என்ற கூதல் பொழுதுகூட, சுடுவது போல இருந்தது. எனினும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, 'என்ன மாத்தையா, இங்கிட்டு வந்திருக்கிறிங்க? எடியே சரஸ்வதி... நாற்காலிய எடுத்துப் போடடி.. மாத்தையா ஒக்கார...' என உள்ளே திரும்பிக் குரல் கொடுத்தாள்.

'நான் இங்கிட்டு ஒக்கார வரல்ல... எங்கே காளி முத்து? நான் கள்ளச்சாராயம் விக்கிறதாக பொலீஸ்'க்கிட்ட முறையிட்டானாமே... அவ்வளவு துணிச்சலா அவனுக்கு...?' காட்டமாகக் கேட்ட அவனைப் பார்க்க பாப்பாத்திக்குப் பயம் பயமாக வந்தது.

'இவர் சொல்லியிருக்க மாட்டாரு...' என்று இழுத்த பாப்பாத்தியை முறைத்துப்பார்த்தான் சந்திரசேகர.

'றாலாமிய எங்கிட்ட சொன்னாரு... நான் கள்ளச்சாராயம் விக்கிறதுதான் விரும்பினவன் குடிச்சிட்டுப்போறான். விருப்ப மில்லாட்டி வாய மூடிக்கினு கம்மன்னு இருக்க வேண்டியது தானே?... தேயிலைத்தோட்டத்துல மழை வெய்யிலென்று பாராம உழைக்கிறவங்களுக்கு இது ஒரு றொனிக் மாதிரி. அசதிக்கு மருந்துமாதிரி.. ஒருஜினல் சாராயம் விக்கிற விலை யில யாராவது வாங்கிக் குடிக்கமுடியுமா? என்னுடைய கசிப்பு சுத்தமானவடி... யாருக்கும் கெடுதல் இல்லை... அப்புறம் ஏன் பொலிஸில முறைப்பாடு செய்யனும்?'

அவனுக்கு சுடச்சுட 4 வார்த்தை பதில் சொல்லவேண்டு மென்று அன்னலட்சுமிக்குத் தோன்றியது. எனினும் முரடனோடு மோதுவது முட்டாள்தனம் என்பதால் மௌனம் கத்தாள்.

சந்திரசேகர தோட்டத்துக்குள்ளே கசிப்பைக் கொண்டு வந்து விப்பான். லகுவாக கிடைப்பதால் பலரும் குடித்து சீரளிகின்றனர். இல்லாவிட்டால் மலையிறங்கி நகரத்துக்குப் போகவேண்டும். அவ்வளவு தூரம் சென்று வாங்குவதற்கு நேரமின்மையாலும், சிரமமென்பதாலும் பலரும் குடிக்கமாட்டார்கள்.

இப்போது நித்தக்குடி.

காளிமுது இதனாலேயே முறையிட்டான்.

இப்போது பாலிஸ்காரனே இவனைக் காட்டிக்கொடுத்து விட்டான்.

இதோ சந்திரசேகரவும் சண்டித்தனத்துக்கு வந்து சத்தம் போடுகிறான்.

லயத்திலிருந்த இளைஞர்களுக்கு கோபமாக வந்தாலும் அவர்கள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டார்கள். நினைத்தால் ந்த சந்திரசேகரவை அடித்து ஓடஓட விரட்டமுடியும். ஆனால் அதன் பின்விளைவுதான் பாரதூரமாக இருக்கும்.

சந்திரசேகரவின் மலையடிவாரக் கிராமத்தில் இருக்கும் ஆட்கள் எல்லாம் கத்தி, பொல்லுடன் வந்து இவர்கள் எல்லோரையும் மிதித்துவிட்டுப் போவார்கள். கேட்க யாரும் இல்லை. பொலிஸ்'ம் அவர்கள் பக்கம்.

இப்போதெல்லாம் அவர்கள் இங்குவந்து தாக்கவேண்டு மென்றுகூட இல்லை. புலிப்படையினர் இங்கு தோட்ட லயத்துக்குள் இருக்கிறார்கள் என்று ஒரு பொய்த்துப்புக் கொடுத்தால் போதும். அவர்கள் வரத்தேவையில்லை. அடுத்த கணமே பொலிஸ்'ம் இராணுவமும் வந்துவிடும். தமிழரின் தலைவி தியை நினைக்க அன்னலட்சுமிக்கு விரக்தியாக இருந்தது.

இல்லாவிட்டால் வடக்கிலோ கிழக்கிலே வெடியோசை கேட்டால் இங்கு மலையகத்தில் இருக்கிற அப்பாவி இளைஞர் களை அள்ளிக்கொண்டு போவார்களா என்ன? - இவர்கள் தமிழராக இருக்கும் ஒரேயொரு காரணத்தைத் தவிர, இவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்?

இதனால் இன்று எத்தனையோ மலையகத் தோட்டத் தொழிலாள இளைஞர்கள் சிறையில் சிறையில் வாடுகிறார்கள். சிலருக்குப் பிறப்பு சாட்சிப் பத்திரம் கூட இல்லை. இதனால் அடையாள அட்டை கூட இல்லை. இந்த நிலையில் இவர்களின் அட்டூழியம் என நினைத்த அன்னலட்சுமிக்கு இனம் தெரியாத வெறுப்பு ஏற்பட்டது. தனது சமூகத்துக்கு மட்டும் ஏன் இந்த சாபக்கேடு என்று நினைத்துக்கொண்டாள். ஊரைவிட்டு ஊர் வந்து எமது தோட்டத்தி லேயே வந்து சண்டித்தனம் காட்டுகிறாங்களே!

77 இலும் 83 இலும் கண்ட ருசியும், வெறியும் இவர்களுக்கு இன்னமுமே அடங்கல.. எண்ணிய அன்னலட்சுமி, இப்போது இவனை எப்படியும் எத்தித் தத்தி அனுப்பி வைக்கவேண்டுமே என எண்ணி பிரயத்தனப் பட்டாள்.

'நீங்க போக மாத்தையா.... அப்பா ஏதும் தப்பு செய்திருந்தா மன்னிச்சிடுங்க.. அப்பா வந்ததும் உங்கக்கிட்ட வந்து மன்னிப்புக் கேட்கச்சொல்லுறேன்.;

இதைச்சொல்லிய போதும் அவளது மனது கறுவிக் கொண்டது. இவனின்ட கசிப்பு விற்பனையால் எத்தனை குடும்பம் சீரளியுது.. குடும்பத்தில் சண்டை.. வீண்செலவு... இதால பசிபட்டினி.. அக்கம்பக்கத்தோட சண்டை.. கிடைக்கிற சம்பளமே செலவுக்குக் கானாது.. இந்த லச்சணத்தில குடிக்குஞ் செலவளிச்சி, நோயாளியுமாகிறாங்க.. ம்..ம்... இவனுக்கெல்லாம் அழிவுவராதா? மனதில் சாபமிட்டாள் அன்னலட்சுமி.

'உங்க அப்பன் பொலிஸ்'க்குப் போனான் அவனுக்கு இரண்டு சாத்துச் சாத்தாட்டி எனக்கு அடங்காது.; என்று மறுபடியும் சந்திரசேகர ஆக்ரோசமாகக் கூறவே பாப்பாத்தி பரிதவித்தாள்.

'ஐயோ... அந்த மனுசன் வருத்தக்காரன் மாத்தையா.. ஒன்னும் செய்திடாதீங்க...;

'வருஷம் வருஷம் பிள்ள பெறுறான்.. அப்புறம் என்ன வருத்தக்காரன்...?; கிண்டலாகக் கூறியபடி அவளது வாளிப்பான உடலை மேய்ந்தான் சந்திரசேகர." வயது ஏறினாலும் கறுப்பி மெருகாத்தானிருக்கிறாள்:.

'அம்மாவ அப்படிப் பேசாதிங்க மாத்தையா... இது ஓங்களுக்கு நல்லா இல்ல..;" இதுவரை மௌனமாக லயத்தினுள்ளே இருந்து பார்த்துக் கொண்டிருந்த லட்சுமணன் வெளியே வந்தான்.

'ஓ!... நீங்கேதான் இருக்கியா? பொலிசுல ஓங்கப்பன் என்னப்பத்தி போட்டுவெச்சது மட்டும் நல்லா இருக்கா? நான் ஏதாவது சோலிக்கு வந்தனா?... என்பாட்டுல வடியை வித்தா ஓங்கப்பனுக்கு ஏன் வயிதெரிச்சல்? நான் நாலு காசு சம்பாதிக்கக் கூடாதா?;

'அப்பா வேணுமுன்னு சொல்லல்லல.. பொலிஸ்காரர் வெருட்டிக் கேட்டதாலதான் சொன்னார்...அப்பா சொல்லா விட்டால் றாலமிகளுக்குத் தெரியாதா என்ன?... அவங்க மாத்தையாக்கிட்ட கையூட்டு வாங்கிறதுக்காக இப்படியெல்லாம் சொல்லியிருப்பாங்க...;

லட்சுமணன் தம் பக்கத்துக்கு நியாயத்தைச் சொல்லியும் சந்திரசேகர அடங்கவில்லை. அவன் நிறைய குடித்திருப்பது தெரிந்தது. தொடர்ந்து கத்திக்கொண்ருந்தான்.

சங்கத்தலைவரும் அவனருகே வந்து சமாதானம் செய்து பார்த்தார். அவன் அடங்குவதாக இல்லை. இனத்தையும் இழுத்து அவதூறாகப் பேசினான். இதைக்கண்டும் கேட்டும் பொறுக்காத சங்கத் தலைவர் இப்போது இப்போது கடுப்பானார். இதுவரை சொன்ன மாத்தயாவுக்கு விடை கொடுத்து விட்டு, 'சந்திரசேகர... இதில நின்னு சத்தம் போட வேணாம்.. போயிடு..;என்று உரக்கக் கூறினார்.

'ஓ.. அவ்வளவுக்கு வந்திட்டியா?... என்னைப் பேர் சொல்லிக் கூப்பிடறளவுக்கு வந்திட்டியா?..; என்று தொடர்ந்து இனத்தையும் இழுத்துப் பேசினான்.

'இப்ப போப்போறியா, இல்லை பொலிசைக் கூப்பிடவா பொலிசு வராது... வந்தாலும் உன்னைத்தான் ஸ்டேசனுக்கு கொண்டு போகும்.. ம்... என்னை மானம் மரியாதை இல்லாத பேசினே...;

'நீயும்தான் பொம்பளைங்க கூட மானம் மரியாதை இல்லாம ஊத்தைப் பேச்சுப் பேசினே.. போடா வெளியே..;

சந்திரசேகர இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை.ஆத்திரத்தில் அவன் முகத்தசைகள் துடித்தன. தலைவரை நோக்கிப் பாயப்போன வனை இடமறித்து சேட் காலரைப் பிடித்து.; வயசானவர்பிட்ட ஏன் உன் வீரத்தைக் காட்டுறே.. வா... என் கூட வா..; என்று கர்ச்சித்தான். லட்சுமணன். சந்திரசேகர 'பளார்; என்று லட்சுமணன் கன்னத்தில் தாக்கினான் அடுத்த கணமே லட்சுமணன் ஆக்ரோசமானான்.

சந்திரசேகர தரையில் விழுந்து கிடந்தான். லட்சுமணன் அவன்மீது காலைப்பதித்தபடி, 'ஏடே..நான் இப்ப சொல்லுறன். இனி நீ இந்தத் தோட்டத்தில் கசிப்பு விற்கக்கூடாது. இனி விற்றால் போத்தல் எல்லாம் அடித்து நொறுக்குவேன்; என கட்டளையிடுவது போலக் கூறினான்.

இதற்கிடையில் சிலர் ஓடிவந்து லட்சுமணனை இழுத்து சந்திரசேகரவை விடுவித்தார்கள். சந்திரசேகர எழுந்து நொண்டியடித்தபடி தலைகுனிவோடு நடந்தான்.

'என்னை அடிச்சிட்டாயில்ல.. பாரு.. பட்டாளமாக வாறம்...; என்று கறுவிக்கொண்டே போனான்.

எடே லட்சுமணா... அவசரப்பட்டுட்டியேடா..; சில பெரியவர்கள் வந்து கூறினர். அம்மா ஒப்பாரியே வைக்க ஆரம்பித்துவிட்டார்.

'என்ர ராசா.. எல்லாத்தையும் கெடுத்திட்டியே... அவங்க கூட்டமாக வரப்போறாங்க..ம்.. இங்க நிற்கதீங்க... ஓடுங்க.. எங்காவது ஓடிப்போய் ஒளிஞ்சிடுங்க..;

யாருமே எங்குமே ஓடத் தேவையில்லை. அவங்களைப் போலத்தான் எங்களுக்கும் கை, கால் இருக்கு... வீண் சண்டைக்குப் போறது தப்பு... சண்டித்தனம் காட்ட வருகிறவர்களை விடப்படாது.. லட்சுமணன் உறுதியாகக் கூறவே சுற்றிவர நின்ற இளைஞர்களும், 'ஆமா... நாம ஏன் பயந்து ஓடணும்?... குட்டக் குட்டக் குனியறதும் தப்பு.. இப்படியே பயந்து கொண்டிருந்தா காலம் காலமாக நாம அடிமைகளாக இருக்க வேண்டியதுதான்..; பலரும் ஆதரித்துக் கூறினர்.

இளைஞர்களின் எழுச்சியைக் கண்டு பெரியவர்கள் அதிசயித்தனர். 'அவங்க சொல்றதும் நியாயம்தான்'.

இதே நேரம் மலையடிவாரத்துக்குச் சென்ற சந்திரசேகர மற்றவர்களைக் கூப்பிட்டான்.. 'பற பற தமிழ் பல்லா என்மீது கையை வெச்சிட்டான்.. புறப்படுங்க.. கத்தியை, கோடரியை எடுத்துக் கொண்டு புறப்படுங்க..;

சுமணதாசா அவனை இடைமறித்தார்.. 'நீ என்ன செய்தே? சும்மா அவுங்க அடிக்க மாட்டாங்களே..!; அவர் இப்படிக் கேட்டதும் சந்திரசேகர ஆத்திரத்துடன் கத்தினான்.

இனப்பற்றில்லாம பேசுறீங்க..;

தனிப்பட்ட சண்டைகளை எல்லாம் இனச் சண்டையாக மாற்றினதாலதான் இன்னிக்கு இந்த நாடே குட்டிச்சுவரா போயிருக்கு.. அதுமட்டுமல்ல, அவங்க இப்போ முன்ன மாதிரியில்ல.. தட்டிக்கேட்க ஆளிருக்கு;

'ஏன் கோழையாகப் பேசுறீங்க? துட்டகமுனு மாதிரி வீரப்பரம்பரையில நீங்க வரலியா?;

'எல்லாப் பிரச்சினைகளுக்கும் எல்லாளனையும், துட்டகமுனுவையும் காட்டி இனத்துவேசத்தை வளர்த்ததுதான் மிச்சம். பாடப் புத்தகங்களிலிருந்து இந்த மாதிரிக் கதைகளை எல்லாம் முதல்ல நீக்கணும்;

இன்னிக்கு இவருக்கு என்ன நடந்தது; என்று முணுமுணுத்தபடி இளைஞர்களை அழைத்தான் சந்திரசேகர. அவர்களும் அவனுக்கு ஆதரவாக வரவில்லை.

'அண்ணே. உங்க தனிப்பட்ட பிரச்சினைகளை தனிப்பட்ட முறையில தீர்த்துக்கொள்ளுங்க. இனமோதல்களினால் இந்த நாடு அழிந்தது போதும்.. எங்க தரப்பில கூட முப்பதியையாயிரம் இளைஞர்களைப் பலி கொடுத்துத்தான் வெற்றி பெற்றிருக்கிறோம்.. அவங்களிலை அதைவிடக் கூடுதல் இழப்பு... நாட்டினுடைய பொருளாதாரமே சீர்குலைஞ்சிருக்கு. இனியும் மோதல் வேண்டாம்... எல்லோரும் மனுசர் தான். இலங்கை மாதாவின்ர பிள்ளைங்கதான... அரசியல்வாதிங்க தான் இனவாதத்தையும், மதவாதத்தையும் வளர்த்தாங்க... இப்பவும் வளர்க்கிறாங்க... நாங்கள் இனிமேல் இந்த மாயவலையில் வீழ்ந்திடக்கூடாது...; பியசிறீ என்ற இளைஞன் அறிவு பூர்வமாக எடுத்துச்சொன்னான்.

சந்திரசேகரவுக்கு சப்பென்று போய்விட்டது.

'பயந்தாங்கொள்ளிப் பசங்களா?; காறித்துப்பிய சந்திரசேக ரவை நோக்கி பியசிறீ மறுபடியும் கூறினான்.

'அண்ணே... நாங்க சிங்களவர்...அவங்க தமிழர்... ஆனால் எல்லோரும் மனிதர்...'

'அவங்க இந்தியாக்காரங்க பியசிறீ...;

'இவங்க இந்தியாக்காரர்ன்னா நாமும் தான் இந்தியாக் காரர். விஜயன் கூட இந்தியாவிலிருந்து தான் வந்து எமது சிங்கள இனம் உருவாகிச்சு.. மனிசன மனிசனாப் பாருங்க.. விலங்குகளிடடே ஜீவகாருண்யம் காட்டுற புத்தபெருமானைப் பின்பற்றுகிற நாங்கள் மனிசரோட மனிதாபிமானமற்று நடக்கலாமா?... துவேசம் காட்டலாமா?;

இனி எதுவும் பலிக்காது என சந்திரசேகரவுக்குப் புரிந்தது. அமைதியாவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

இதேநேரம் சிங்களக் கிராமவாசிகள் தாக்குதல் நடத்த வருவார்கள் என்று காத்திருந்த தோட்டத்தொழிலாளர்கள், வெகுநேரமாகியும் அவர்கள் வராமல் போகவே வியப்படைந்தார்கள். அண்மைக்காலமாக மாற்றங்கள் மனத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தியது. இந்த நாட்டில் தேசிய ஒற்றுமை மெல்ல மெல்ல மேலோங்கி வருவது லட்சுமணனுக்கும் புரிந்தது. அரசியல்வாதிகள் பதவிக்காக இனங்களுக்கிடையே ஒற்றுமையை சீர்குலைத்துவிடக்கூடாது எனப் பிரார்த்தித்தான்.

# எழுதப்படும் பெண்களும் எழுதும் பெண்களும்



இலக்கியம் என்றால் இலக்கியம்தான். அதில் ஆண் இலக்கியம் பெண் இலக்கியம் என்று வகைப்பாடு செய்வதில் எனக்கு உடன்பாடு இல்லை என்று சொல்லும் பெண்களின் குரல்களைக் கேட்டிருக்கக் கூடும். இப்படிப் பேசும் ஆண்களையும் பார்த்திருக்கக் கூடும்.

விருதுபெற்ற இந்தக் கதைகள் போன்ற கதைகளை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே ஆண்கள் எழுதிவிட்டார்கள். அவர் பெண் என்பதால் இந்த விருதைப் பெற்றிருக்கிறார். பொதுவாகவே பெண்கள் தாங்கள் எழுதும் எழுத்துக்க ளால் மட்டுமே கவனிக்கப்படுகிறார்கள் என்பது உண்மை யல்ல. பெண்கள் என்பதால்தான் வாய்ப்புகளை அடைகிறார்கள். விருதுகளைப் பெறுகிறார்கள். வெளிநாடுகளுக்குப் போய் வருகிறார்கள் என்பன போன்ற குரல்களைக் குற்றச்சாட்டுகளாகவே ஆண்களில் சிலர் முன்வைக்கிறார்கள்.

பெண்களில் சிலரும்கூடத் தங்கள் எழுத்து பெண் ணெழுத்து என்ற வகைப்பாட்டிற்குள் பிரித்துப் பேசுவதை விரும்புவதில்லை. நான் கவிதை எழுதுகிறேன். நான் கதை எழுதுகிறேன் நான் நாடகங்களை இயக்குகிறேன் நான் சினிமா எடுக்கிறேன். பொதுவான சொற்களான கவி எனவும் புனைகதை ஆசிரியர் எனவும் நாடகக்காரர் எனவும் சினிமா இயக்குநர் எனவும் சொல்வதில். என்ன சிக்கல் இருக்கிறது. ஏன் பெண் என்னும் அடைமொழியோடு அழைக்கிறீர்கள்? அப்படி அழைப்பதின் மூலம் பெண் ஆண் அளவுக்குச் சிறப்பாக எழுத முடியாது. இயங்கமுடியாது. வேலை செய்ய முடியாது என்பதை நிறுவ முயல்கிறீர்கள் என அவர்கள் வாதிடுகிறார்கள்.

இப்படிக் கேட்பது நியாயம்தானே? என்று தோன்றலாம். இதே மாதிரியான குரல்களைத் தலித் இலக்கியம் என வகைப்பாடு செய்யும்போதும் கேட்கிறோம். நாங்கள் எழுதுவதை மட்டும் தலித் எழுத்து என்று சொல்வது ஏன்? இதன் மூலம் தீண்டாமையையும் ஒதுக்கிவைத்தலையும் நீடிக்கிறீர்கள். இப்படிச் சொல்லும் குரல்களைக் கேட்டிருக்கக்கூடும். அந்தக் குரல்களில் நியாயம் இருப்பதுபோலப் படலாம். அதே நேரத்தில் இப்படிச் சொல்கிறவர்கள் யாரெல்லாம் கேட்கிறார்கள்? எப்போது இப்படிச் சொல்கிறார்கள் என்று யோசித்துப் பாருங்கள். தொடக்கநிலையிலேயே சொல்கிறார்களா? வகைப்பாட்டின் வழியாக அறியப்பட்ட பின் இப்படிக் கேட்கிறார்களா? என்று யோசித்துப் பாருங்கள்.

இவ்விரண்டையும் யோசித்துக் கொண்டிருக்கும் போதே "தலித் எழுத்து இருக்கலாம் என்றால் வன்னியர் எழுத்து இருக்கக்கூடாதா? கவுண்டர் எழுத்துக்கு இடமில்லையா? நாடார்களுக்கு இலக்கியம் அந்நியமானதா? நாயக்கர்கள் எழுதமாட்டார்களா? பிள்ளைமார்களும் முதலியார்களும் எழுதியவைகளை விட்டுவிடுவீர்களா? பிராமணர்கள் எழுதாத எழுத்தா?... இப்படியான குரல்களையும் கேட்கிறோம். திடுக்கிட்டு நிற்கிறோம். கடந்து செல்கிறோம்

"அடித்தால் திருப்பி அடி அடங்க மறு அத்துமீறு" என்று வசனம் பேசும் படங்கள் வரும்போது 'வெட்டுவோம் குத்துவோம் - இவை எங்கள் அடையாளம்' என்று வசனம் பேசும் சினிமாவை எடுக்கக் கூடாதா? இந்தக் கேள்விகளும் பொதுத்தளத்தில் கேட்கப்படும் கேள்விகள்தான்.

கேள்விகளாகவும் பதில்களாகவும் முன்வைக்கப்படும் வேறுபட்ட குரல்களை மறுதலித்து எல்லாமே இலக்கியம்தான் என்று ஒன்றில் அடக்கிவிடலாம்தான். வேறுபாடுகளும் கலகங்களும் யாருக்கு வேண்டும்? இணக்கமும் சமரசங்களும்தான் உலகிற்குத் தேவை இவற்றிலிருந்தே சமாதானம் பிறக்கிறது எனச் சொல்லலாம். அதற்காக ஒற்றுமை - வேற்றுமை என்ற எதிர்வுச் சொற்களின் மூலத்தைத் தேடிப் போகலாம். வேற்றுமைகள் நிலவியதால் ஒற்றுமை உருவாக்கப்படுவதற்காக அந்தச் சொல் கண்டுபிடிக்கப்பட்டது. செயல்தான் முந்தியது சொல் பிந்தியது எனச் சொல்லலாம். கருத்தில்லாமல் காரியமில்லை என வாதிடலாம். கருத்துமுதல் வாதத்தை ஏற்க முடியாது. பொருள்தான் முந்தியது் பொருள்தான் கருத்தை உருவாக்குகிறது என்று இயக்கவியல் தர்க்கத்தை முன்வைக்கலாம்.

இந்த வாதங்களும் விவாதங்களும் அர்த்தமற்றவை. நிகழ்காலத்தின் தேவை ஒற்றுமை. அதனால் வேறுபாடு களையும் வித்தியாசங்களையும் அதிகாரப்படி நிலைகளையும் ஆதிக்கத்தை ஏற்கும் - நிறுவும் போக்கை விட்டொழிக்க வேண்டும் எனவும் வாதிடலாம். ஒற்றுமைப்படுவதற்கான புள்ளிகளாகத் தேசம், மொழி, இனம், மதம் எனச் சிலப் பொதுச்சொற்களை முன்வைக்கக்கூடும். முன்வைப்பவர்கள் பொதுச் சொற்களிலிருந்து கிளர்ந்து நிற்கும் சிறப்புச் சொற்களை யும் அவற்றின் அடையாளங்களையும் ஒதுக்கிவிட்டுப் பொதுச்சொற்களின் மேன்மையைப் பேசுவதைக் கேட்கிறோம். அதன் அடுத்தக்கட்டமாகச் சிறப்புச் சொற்கள் உணர்த்தும் உரிமைகளை, உணர்வுகளைத் தடுத்துவிடும் நோக்கத்தையும் வெளிப்படுத்தக் கூடும். ஆனால் அந்தச் சொற்களைத் தடைசெய்துவிட முடியுமா? என்பதை நிதானமாக யோசித்துப் பார்க்கவேண்டும்.

உலகம் என்பது ஒரு பொதுச் சொல்தான் கடவுள் என்னும் பொதுச் சொல்லைப்போல. மனிதர் என்னும் இன்னுமொரு பொதுச் சொல்லைப்போல. இன்னும் அற்புதமான பொதுச் சொற்கள் இருக்கின்றன. மொழி, கலை, இலக்கியம், சொற்கள் என்பன எல்லாமே பொதுச் சொற்கள்தான். ஆனால் இந்தப் பொதுச் சொற்கள் மட்டுமே போதும் என்று நினைத்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? ஒவ்வொரு பொதுச் சொற்களுக்குள்ளும் என்னென்ன சொற்களை உருவாக்கியிருக்கிறோம் என்பதை நினைத்துப் பாருங்கள். சொற்களை மொழிகள் பெயர்ச் சொல், வினைச் சொல் எனப் பிரித்துப் பேசாமல் இருந்தால் மொழி யேது? பெயர்களைப் பொதுப்பெயர் சிறப்புப் பெயர் எனவும் இடுகுறிப்பெயர், காரணப் பெயர் எனவும் வகைப்படுத்தாமல் விட்டிருந்தால் மொழி குறித்த அறிவு ஏது? பொது, சிறப்பு, இடுகுறி, காரணம் என்ற நான்கையும் கலைத்தும் சேர்த்தும் வினைச் சொற்களையும் இவ்விரண்டையும் தொடர்ந்து நிற்கும் இடைச் சொற்களையும் உரிச்சொற்களையும் கலந்து கட்டி உருவாக்கும் சொற்றொடர்களின் வழித்தானே இலக்கியம் உருவாகிறது. இலக்கிய உருவாக்கத்திற்குள் இவ்வளவு வேறுபாடுகளும் வினைப்பாடுகளும் இருக்கும்போது இலக்கியத்திற்குள் வேறுபாடுகளும் வேற்றுமைகளும் இருக்கக்கூடாது என்று வாதிடுவது எவ்வகையில் சரியாக இருக்கும்?

பொதுச் சொல் உணர்த்த நினைப்பது கடந்த காலத்தை. கடந்த காலம் என்பதைவிடவும் எல்லாக் காலத்துக்கும் பொருந்தக்கூடிய பேருண்மை. ஆனால் சிறப்புச் சொற்கள் உணர்த்துவது அறிதலின் தொடக்கம். வேற்றுமையைக் கண்டறிவது மூலமே சிறப்புச் சொற்கள் உருவாகின்றன. வேறுபாடுகளை விளக்குவது அறிதலின் நீட்சியான கண்டுபிடிப்பு. அந்தக் கண்டுபிடிப்புதான் அறிவு. அறிவு ஒவ்வொருவருக்கும் வேறுவேறாய் இருக்கிறது. வேறுவேறு அளவுகள்தானே வந்ததில்லை. இருப்பாலும் சூழலாலும் உருவாவது. இருப்பு என்பதும் உருவாக்கம் என்பதும் நிகழ்கால இருப்பு மட்டுமல்ல. கடந்த கால வாய்ப்புகளும் பயன்படுத்திக்கொண்டு வளர்ந்ததும் பற்றி.


அ. ராமசாமி

மொழியைக் கண்டுபிடித்ததே மனித குலத்தின் முதன்மையான அறிவு. குறிப்பிட்ட வெளி சார்ந்து பயன்படுத்துவதற்காக அதன் கிளைகளையும் விரிவாக்கங்களையும் தொடர்ச்சியாக உற்பத்தி செய்துகொண்டே இருந்தது அறிவின் வளர்ச்சி. நீண்ட நெடுங்காலமாகப் பயன்பாட்டில் இருக்கும் தமிழ்மொழியான - செவ்வியல் மொழியான தமிழில் மட்டுமல்ல. எல்லா மொழிகளிலும் எல்லாக் காலத்திற்கும் பொதுவான ஒன்று இருந்தது என்ற வாதமும், அப்படியொன்று இருப்பதாகச் சொல்வது கட்டுக்கதை என்ற வாதமும் இருந்துகொண்டே இருக்கிறது. அதே நேரத்தில் வேறுபாடுகளும் விடுபடல்களும் இருக்கின்றன என உணர்ந்தநிலையில் சிறப்புகளை உருவாக்கவும் முயற்சிகள் நடந்துகொண்டே இருந்தன. சிறப்புகளைக் கண்டுபிடிப்பதும் உருவாக்குவதும் நிலைப்படுத்துவதும் அறிவு வளர்ச்சி. அப்படி உருவாக்கும்போது வேறுபாடுகள், வேற்றுமைகள் உருவாகும் என்று நினைத்திருந்தால் மனித அறிவு என்னவாகியிருக்கும்?

473 கவிகளின் தொகுதியான செவ்வியல் பிரதிகளில் - எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமான சங்கக் கவிதைகளில் பத்தில் ஒரு பங்கினராகப் பெண்கள் இருந்துள்ளார்கள். பெண் கவிகளின் எண்ணிக்கை குறித்து மாறுபட்ட கருத்துகள் இருந்தபோதிலும் பத்தில் ஒருபங்கு என்பதை மறுப்பார் இல்லை. பெருங்கவிகளின் முதன் ஐந்து இடங்களுக்குள் எண்ணிக்கை அடிப்படையிலேயே ஔவை இடம்பெறுகிறாள். அவளது கவிதைகள் அவளைப் பெண்ணாகவும் காட்டுகின்றன. உலக அறிவும் வாழ்வியல் கோட்பாடுகளும் விருப்பங்களும் அறிந்த அறிவாளியாகவும் காட்டுகின்றன.

49 பேர்கள் என அறியப்பெற்ற பெண்கவிகள் அல்லாமல் பெயர் மறைத்துப் பாடிய பெண்களும் இருந்திருக்கிறார்கள். உவமையாலும் சிறப்புச் சொற்களாலும் பெயரிடப்பெற்ற 23 கவிதைகளில் 15 பேர் பெண்களாக இருக்கவே வாய்ப்புண்டு என ஒரு ஆய்வு சொல்கிறது. ஆண்களிலும் பெண் உறவு சார்ந்த காமத்தைப் பேசியவர்களே பெயரைச் சொல்லாமல் நழுவியிருக்கிறார்கள் என்கிறது அந்த ஆய்வு. மொத்தச் செவ்வியல் தமிழ்க் கவிதைகளிலும் பெண்களும் ஆண்களும் மனிதர்களாக முன்னிறுத்தப்பட்டுள்ளனர் பொதுவான உணர்வுகள் பேசப்பட்டுள்ளன பொதுவாக கடமைகளும் உரிமைகளும் வலியுறுத்தப்பட்டுள்ளன என்றாலும் தனித்த உணர்வுகளும் கடமைகளும் பேசப்படாமல் இல்லை. அதே நேரத்தில் பெண்களின் கவிதைகளில் பொதுவில் கலந்துவிடுவதை விடவும் நாங்கள் பெண்கள் எங்கள் உணர்வுகளும் இருப்பும் நகர்வும் வேறானவை என்று சொல்வதில் கூடுதல் விருப்பங்களும் ஆர்வங்களும் வெளிப்பட்டுள்ளன. பெண்கள் ஆண்களால் எழுதப்படும் அதே நேரத்தில் பெண்களைப் பெண்கள் எழுதிக்காட்டவேண்டும் என்ற விருப்பத்தையும் பார்க்கிறோம். ஔவை, வெள்ளிவீதி, காக்கைப்பாடினி நச்செள்ளை, அள்ளூர் நன்முல்லை, கழார்க் கீரனெயிற்றி, கச்சிப்பேட்டு நன்னாகை , ஒக்கூர் மாசாத்தி, மாறோக்கத்து நப்பசலை, வெறி பாடிய காமக்கண்ணி, பெருங்கோழி நாயகன் மகள் நக்கண்ணை, வெண்பூதி, நக்கண்ணை, பொன்முடி, பூங்கண் உத்திரை,நெடும்பல்லியத்தை, மாற்பித்தி, நன்னாகை, மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளை, தாயக்கண்ணி, நல்வெள்ளி போன்றோர் ஒன்றுக்கு மேற்பட்ட கவிதைகளை எழுதிய 20 பேர் இருக்கிறார்கள். ஒற்றைக் கவிதைகளை எழுதிய பெண்களாக 20 -க்கும் மேற்பட்டோர் இருக்கிறார்கள். அவர்கள் தங்களைப் பெண்ணாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பது கவனிக்க வேண்டிய ஒன்று. கண்ணகி, மாதவி, மணி மேகலை எனப் பெண்களை மையமிட்டுத் தொடர்நிலைச் செய்யுள்களை எழுதிய மரபு தமிழ் மரபு. ஆண்களால் எழுதப்பெற்ற இப்பெண்களுக்கீடாகப் பெண்களால் எழுதப்பெற்ற பெண்கள் வாசிக்க கிடைக்கவில்லை. அதே நேரத்தில் பக்தி இலக்கியக்காலத்தில் பக்தர்களாக ஆண்களும் பெண்களும் எழுதப்பெற்றார்கள் என்றாலும் ஆண்டாளும் காரைக்கால் அம்மையும் தாங்கள் பெண்களாக இருந்து செலுத்திய பக்தியின் சிறப்பை - வேற்றுமையை எழுதியது இன்றளவும் கவனிக்கத்தக்கனவாக இருக்கின்றன. மொத்தத்தில் காணா- மல் போக விரும்பாமல் தங்களை வெளிப்படுத்த நினைப்பது உணர்தலின் - அறிதலின் ஆவல்.


பாரதி தொடங்கி வைத்த நவீனத்தமிழ் இலக்கியம் பெண்களை எழுதுவதின் வழியாகவே நவீனமடைந்தது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. புனைகதைகளில் மாயூரம் வேதநாயகம் பிள்ளையும் மாதவையாவும் ராஜம் அய்யரும் பெண்களை மையமிட்டு எழுதியே நவீனத் தமிழ் இலக்கிய வகைமைகளை முன்வைத்தார்கள். அவர்கள் தொடங்கிய நவீனத்தமிழ் இலக்கியப் பரப்பிற்குள் 1936 இல் மூவலூர் ராமாம்ருதம் எழுதிய வெளியிட்ட தாசிகளின் மோசவலை அல்லது மதிகெட்ட மைனருக்கு வேறுபட்ட இடம் இருக்கிறது.

கவிதையிலும் புனைகதைகளிலும் ஆண்களால் பெண்கள் பற்பல விதமாய் எழுதப்படுகிறார்கள் என்றாலும் நாங்கள் வேறுவிதமாய்த் தங்களை எழுதிக்காட்டுவோம் எனப் பெண்களும் எழுதுகிறார்கள். இந்தத் தன்முனைப்பின் தேவை என்னவாக இருக்கும்? எழுதும் பெண்களின் கதைகளுக்குள் நுழைந்து பார்க்கலாம்.

(தொடரும்)

# சிறுவர்கள் வழிதவறிச் செல்வதற்கு பெற்றோரே காரணம்

லக்ஷாயினி



சிறுவர்கள் வழி தவறிச்செல்வதற்கு முதற் காரணம் பெற்றோரே. அடுத்தபடியாக சமூகமும் அரசும் காரணமாக அமைகின்றன என்று கூறுகின்றார் உளவியல் சிகிச்சையாளரும், அகவொளி இயக்குனருமான எஸ்.ஜே. அருட்பணியாளர் இராசநாயகம்.

தற்போது அதிகரித்துவரும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் சிறுவர்களுக்கான உளவள ஆலோச்னையை நீங்கள் எவ்வாறு வழங்குகிறீர்கள் என வினவியதற்கு நாங்கள் இப்போது பாடசாலை மட்டங்களிலும், கிராம மட்டங்களிலும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடாத்திக் கொண்டிருக்கின்றோம். எப்படி நவீனத்துவம், நுகர்வுக் கலாச்சாரம், இவற்றினூடாக மக்கள் அனைத்திலும் உள்வாங்கப்படுவதுடன், அவற்றிற்குப் பல விலை கொடுத்தும் பெற்றுக்கொள்கின்றனர். இதனால் எது நல்லது எது கெட்டது என்று சிறுவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றோம். இவ்வாறு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்படுவதனால் சிறுவர்கள் முன்னரை விட தற்போது அதிகம் விழிப்புணர்வடைந்துள்ளதுடன் தம்மைச் சுற்றியுள்ளவர்களின் ஆலோசனைகளாலும், ஊடகங்களில் வெளியாகும் செய்திகளாலும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுமளவுக்கு விழிப்படைந்து வருகின்றனர்.

தற்போது பாடசாலைகளில் கற்பிக்கப்படும் பாடங்கள் மற்றும் பாட விதான செயற்பாடுகளும் சிறுவர்களை கட்டுப்பாட்டுக்குள் வளர்வதற்கு வழிவகுக்கின்றது. முக்கியமாக ஒருவரைக் கட்டுப்படுத்தக்கூடிய வழி கல்விதான். அதனைப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் கற்பித்து வருகின்றனர். ஆனால் மாணவர்கள் பாடசாலைகளை விட வீடுகளிலேயே அதிக நேரத்தைச் செலவிடுவதாலும் சகநண்பர்களின் தூண்டுதல்களுக்கும், அழுத்தங்களுக்கும் அதிகமாக முகங்கொடுத்து வருவதுடன் சக நண்பர்களின் பழக்க வழங்கங்களின் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். மேலும் சிறுவர்கள் பெற்றோரின் அறிவுரைகளை விட சகநண்பர்களின் அழுத்தங்களுக்கு இசைந்து செயற்படுவதே அதிகமாக காணப்படுகின்றது. இதனாலே-யே இவ்வாறான செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் வந்தால் விழிப்புணர்வுடன் ஆற்றுப்படுத்தலையும் வழங்குகின்றோம் என்றார்.

**மாணவர்கள் பாடசாலைகளை விட வீடுகளிலேயே அதிக நேரத்தைச் செலவிடுவதாலும் சக நண்பர்களின் தூண்டுதல்களுக்கும், அழுத்தங்களுக்கும் அதிகமாக முகங்கொடுத்து வருவதுடன் சக நண்பர்களின் பழக்க வழங்கங்களின் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர்.**

சிறுவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் பெற்றோருக்கு என்ன ஆலோசனையை வழங்க விரும்புகிறீர்கள் எனக் கேட்டபோது: ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைகளுடன் நல்ல தொடர்பை வைத்திருக்க வேண்டும். ஆனால் சில பெற்றோர் பிள்ளைகளை அரவணைப்பதில்லை. குறிப்பாக 12 வயதுக்குப் பின்னர் தந்தையர்கள் ஆண் பிள்ளையாக இருந்தாலும் சரி, பெண் பிள்ளையாக இருந்தாலும் சரி அவர்களை கண்டிப்பதோ, அரவணைப்பதோ இல்லை. இதனால் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான தொடர்பு துண்டிக்கப்படுகின்றது. ஆனால் அவ்வாறு பிள்ளைகளை விடாது அவர்களுக்கான சுதந்திரம் கொடுக்கப்பட்டாலும் கண்காணிப்புடன் தொடர்பை வைத்திருக்க வேண்டும். அப்போதே பிள்ளைகள் கட்டுப்பாடடனும் கண்டிப்புடனும் வாழ்வார்கள்.

அதுமட்டுமன்றி பிள்ளைகளுக்கு எல்லாவற்றுக்கும் ஆம் என்று சொல்வதைக் கற்றுக்கொடுப்பதை விடுத்து ஆம், இல்லை என்ற இரண்டையும் கற்றுக்கொள்ளப் பழக்க வேண்டும். அப்போது தான் பிள்ளை நல்லவற்றுக்கு ஆம் என்றும் கெட்டவற்றுக்கு இல்லை என்றும் தெரிவுசெய்யப் பழகிக்கொள்ளும் என்றார்.

இன்றைய நவீன காலத்தில் பாடசாலை முடிந்த பின்னர் மிகுதி நேரத்தில் சிறுவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கின்றனர். அங்கு அவர்களுக்கான பாதுகாப்பு தொடர்பில் என்ன கூறுகிறீர்கள் என வினவியபோது:

தனியார் கல்வி நிலையங்களில் கூடுதலாக பாதுகாப்பு வழங்கப்படுவதாக கூறமுடியாது. ஏனெனில் அவர்கள் வருமானத்தை நோக்கமாகக் கொண்டே இயங்கி வருகின்றனர். ஆனால் பாதுகாப்பு கட்டுப்பாடுகளை வைத்து அசம்பாவிதங்கள் நடைபெறா வண்ணம் பாதுகாப்பு வழங்க தனியார் கல்வி நிறுவனங்கள் முன்வர வேண்டும். அதுமட்டுமன்றி தனியார் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களை அனுப்பும் போது முழுமையான பொறுப்பு பெற்றோரிடமே உள்ளது. அவர்கள் பிள்ளைகள் மத்தியில் கண்காணிப்புடன் இருந்து மதிப்பீடு செய்து தன்னம்பிக்கையை வளர்க்க கற்றுக் கொடுக்க வேண்டும்.: மேலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் மாணவர்களிற்கு சக நண்பர்களின் அழுத்தங்கள் அதிகமாகவே இருக்கின்றது. எனவே மாணவர்கள் தம்மை மனதால் இறுகப்பிடித்து அழுத்தங்களுக்கு உட்படாது தலை நிமிர்ந்து ஆம், இல்லை என்ற தெரிவில் தைரியமாக இருந்தால் தம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும். ■

**தனியார் கல்வி நிலையங்ளில் கூடுதலாக பாதுகாப்பு வழங்கப்படுவதாக கூறமுடியாது. ஏனெனில் அவர்கள் வருமானத்தை நோக்கமாகக் கொண்டே இயங்கி வருகின்றனர். ஆனால் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை வைத்து அசம்பாவிதங்கள் நடைபெறா வண்ணம் பாதுகாப்பு வழங்கத் தனியார் கல்வி நிறுவனங்கள் முன்வர வேண்டும். அதுமட்டுமன்றி தனியார் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களை அனுப்பும் போது முழுமையான பொறுப்பு பெற்றோரிடமே உள்ளது. அவர்கள் பிள்ளைகள் மத்தியில் கண்காணிப்புடன் இருந்து மதிப்பீடு செய்து தன்னம்பிக்கையை வளர்க்க கற்றுக் கொடுக்க வேண்டும்.**



## ஜென் கதை –01

அந்த மல்யுத்த வீரனுக்கு ஒரு பிரச்சினை.

பயிற்சிகளின் போது ஆசிரிய ரையே தோற்கடிக்கிற அவனுக்கு, போட்டிகளில் மாணவர்களைக் கூட ஜெயிக்க முடியவில்லை.

ஜென் குரு ஒருவரை நாடி தன் பிரச்சினையைக் கூறினான்.

'உன் பெயர் என்ன?;

'பேரலை;

'நல்லது. நீ ஒரு மல்யுத்த வீரன் என்பதை மறந்து விடு. நீ ஒரு பேரலை. இரவு முழுவதும் உட்கார்ந்து தியானம் செய்;

வீரன் தியானம் செய்தான்.

தான் பெரிய அலையாகவும் எதிரிலிருக்கிற எல்லாவற்றையும் அலசி வாரிக் கொண்டு போவது போலவும் முதலில தெரிந்த அவனுக்கு நேரமாக ஆக மெல்ல மெல்ல அந்த வட்டாரமே கடலாக மாற ஆரம்பித்தது. காலையில் கோயிலிலிருந்த புத்தர் சிலைகூட காணவில்லை.

குரு அவனைத் தோளில் தட்டி எழுப்பினார். 'இனி உன்னை யாராலும் ஜெயிக்க முடியாது;' என்று சொல்லி அனுப்பினார். நிஜமே.

அதற்குப் பிறகு அவனை யாரும் ஜெயிக்க வில்லை!

ஒருமுகப்படுத்துதல், தன்னம்பிக்கை, மனோசக்தி என்று பலவிதமாகவும் இந்தக் கதைக்கு நீதி போதனை செய்யலாம்.

ஆனால், ஒரு மல்யுத்த வீரன் ஜெயிப்பதற்காக சண்டையிடுகிறான். அப்படிச் செய்கின்ற போது அவன் இரண்ட இலக்குகளைக் குறிவைக்கிறான். ஒன்று மல்யுத்தத்தைச் சரியாகச் செய்வது. இன்னொன்று ஜெயிப்பது. இரண்டு இலக்குகளைக் குறிவைக்கிறவன் இரண்டையுமே அடைய மாட்டான். ஒன்றைக் குறிவைக்கிறவன் அதை அடைவதற்கான சாத்தியங்கள் அதிகம்.

'நீ ஒரு மல்யுத்த வீரனில்லை; என்று குரு சொன்னபோது ஒரு இலக்கு அடிபட்டுப் போய் விட்டது. நீ ஒரு அலை என்று சொன்னபோது எதிராளி ஆசிரியரா, மாணவனா, ஆணா, பெண்ணா, என்பதெல்லாம் அடிபட்டுப்போய்விட்டது. ஜெயித்தாக வேண்டும் என்கிற கட்டாயமும் இல்லாமற் போய்விட்டது. (ஜெயித்தாக வேண்டும் என்கிற கட்டாயம் என்ன செய்யும் என்று கிருஷ்ண மாச்சாரி ஸ்ரீக்காந்த்தைக் கேட்கவும். அந்தக் கவலையே இல்லாமல் விளையாடுகிறபோது எத்தனை சிக்சர் அடிக்கலாம் என்றும் அவரையே கேட்கலாம்.) அலை என்றால் அடிப்பது, சாய்ப்பது அவ்வளவே! ■



# வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்

ஐயகோ! என்ன வெயிலின் கொடுமை இது? தாங்க முடியவில்லையே. காற்று வீசுவதும் சற்று குறைவாக இருக்கிறது. புழுக்கம் அதிகம். மனப் புழுக்கத்தையுந்தான் சொல்லுகிறேன். நடக்கின்ற காரியங்களெல்லாவற்றிலும் சுய நலமும் ஒரு வித கெட்ட நோக்கங் கொண்ட அரசியலுமாகத்தானிருக்கிறது. ஏன் ? எமது கட்சி என்று நாம் போற்றுகின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் விலை போய்விட்டனர் போலத்தான் தெரிகிறது. இந்தத் தள்ளாத வயதிலும் ஐயா சம்பந்தன் கூட. அப்பப்பா..! சொல்ல வாய் கூசுகிறதே. இப்படியா மக்களை ஏமாற்றுவது?

இந்த ஜே.வி.பி யினரின் அரசியல் போக்குத்தான் மிகவும் விசித்திரமானது. 1969 களில் அது ஆரம்பிக்கப்பட்டது. யாருக்கும் தெரியாது இரகசியமாகவே பாதுகாக்கப்பட்டு வந்தது. அவர்களிடையே காணப்பட்ட பிளவுகளால்தான் அவர்கள் தவறாக முன்னெடுத்த தாக்குதல்களினால் அவர்கள் படு தோல்வியைத் தழுவிக் கொண்டனர். ஆனால் இன்று அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசும் சித்தாந்தத்தைப் பார்த்தால் ஏதோ போர் புரிந்து வெற்றி சூடியவர்கள் போலல்லவா காணப்படுகின்றனர்.

அவர்கள் புரட்சியைக் கையிலெடுத்துத் தோல்வி கண்டபோது, அவர்கள் தலைவரைக் காப்பாற்றிய பெருமை தமிழர்களையே சாரும். அவர்களுக்குத் தமிழர்கள் அவ்வளவு துணையாக இருந்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் தமிழர்களுக்கு இழைத்த துரோகமோ பெரியதொன்று. இணைந்த வடக்குக் கிழக்கென்றதைப் பிரிப்பதற்காக வழக்கைத் தொடுத்து அன்றைய ஆட்சியாளர்களுக்கு வலுச்சேர்க்க உதவியவர்கள். அவர்கள் போக்கைக் கூர்ந்து கவனியுங்கள். எப்பவும் அவர்கள் எந்தவித சித்தாந்தத்தைப் பேசினாலும் அவர்கள் எந்தவொரு சாராருக்கும் நன்மை பயக்கும்படி எதுவும் செய்ய மாட்டார்கள். பொதுவாக ஒரு பேச்சு வழக்கு இருக்கிறது. சித்தாந்தம் பேசுபவன் ஊருக்கு உதவான் என்று. அப்படித்தான்?

எல்லாம் முடிந்து இப்போது அரசுக்கெதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணையை கொண்டு வருகிறார்கள். அதைவிட இப்போது மிகவும் முக்கியமான விடயம் என்னவெனில் அண்மையில் நடைபெற்றிருக்கின்ற பயங்கரவாதக் குண்டுத் தாக்குதல்கள். அமைதியாக நடைபெற்ற பிரார்த்தனையில் நடுவே சென்று குண்டை வெடிக்கச் செய்திருக்கிறார்கள் கயவர்கள். அப்பாவி மக்களைக் கொன்று குவித்திருக்கிறார்கள் அவர்கள். அவ்வகையான சம்பவமானது நாட்டையே உலுக்கிப் போட்டிருக்கிறதை இந்த ஜே.வி.பி யினர் கருத்திற் கொள்ளவில்லையா? மிகவும் மோசமான செயற்பாடு ஏன் நடைபெற்றது இதை அடுத்து இந்த நாட்டு மக்களாகிய நாம் என்ன செய்ய வேண்டும் என்று ஏதாவது பேசுகிறார்களா? என்றால் இல்லை. உடனடியாக யாரோ ஒருவருக்காகச் செய்வது போல அரசாங்கத்தைக் கவிட்டுவிட எண்ணுவது. இது ஒரு சரியான போக்காக எனக்குப் படவில்லை. இந்த அரசாங்கத்தை நம்பிக்கை இல்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து கவிட்டுவிட்டால் அடுத்து என்ன நல்லவரா வந்து ஆட்சி பீடம் ஏறப்போகிறார்? அடுத்ததாக ஆட்சி பீடத்தைக் கைப்பற்ற ஒரு கயவர் கூட்டமே ஆட்டம் போட்டுக் கொண்டு நிற்பது அவர்களுக்குத் தெரியவில்லையா? அவர்களுக்குத் துணை போகத்தான் ஜே.வி.பி யினர் முயற்சிப்பதாக எனக்கப்படுகிறது. சில வேளைகளில் நான் நினைப்பது கூடப் பிழையாக இருக்கலாம். அதனால் இவர்களுடன் இருந்து சித்தாந்தத்தைப் பேசியவரும் ஜே.வி.பி யினருக்கு நம்பிக்கை நட்சத்திரமாக இருந்தவர்தான் விமல் வீரவன்ச. அவர் என்ன செய்தார்? லௌகீக வாழ்க்கைக்காகக் கொமினீசுவத் தத்துவத்தை எல்லாம் மூட்டை கட்டிவிட்டு , தாம் எதற்காகப் போராடினார்களோ அதையும் மறந்து அந்தப் போராட்டம் ஏற்படுத்திய வடுக்களையும் மறந்து, எமது கட்சிக்காரர் கருணா அம்மான் செய்தது போலப் போய் அரச ஆட்சியாளருடன் சேர்ந்து கொண்டார். தற்போது இருவரும் சுகத்தை அனுபவிப்பாளர்களாக உள்ளனர். அதைப் பார்த்துவிட்டுத்தான் தற்போதைய ஜே.வி.பி ஆட்சியாளர்கள் பொறாமைப்பட்டுத் துள்ளுகிறார்களோ தெரியவில்லை. எது எதுவாகவும் இருக்கட்டும்? எமக்கு எல்லாம் ஒன்றுதான். அவன் வந்தால் என்ன ? இவன் போனால் என்ன? எல்லாம் அரசியல் சாக்கடைகள் தானே? பேச அருவெறுப்பாக இருக்கிறது.!

தற்போது நாம் பேச வேண்டியவிடயங்கள் உண்டு. ஐ.எஸ் பயங்கர வாதிகளுக்கு உதவியவர்கள் என்று பலர் புலனாய்வாளர்களால் அடையாளங் காணப்பட்டுள்ளனர். , அவர்களோடு சேர்ந்து பலர் பணியாற்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. விசாரணைகள் மூலம் பல அதிர்ச்சியான சம்பவங்கள் தெரிய வந்திருப்பதாக அனைத்துப் பத்திரிகைகளும் அறிவிக்கின்றன. பல கோடி ரூபாய்கள் நாட்டுக்குள் வந்திருக்கின்றன. அது வந்த வழி எது என்று தெரியவில்லை! கொழும்பு நகருக்குள் பல வீடுகளைக் கட்டியதில் சட்ட மீறல் நடந்திருப்பதாக அதன் உரிமையாளர்களுக்கு இன்னும் அனுமதி வழங்கப்படாது இருக்கிறதாக எனது நண்பர் சொன்னார். அப்போது மட்டக்களப்பில் அந்தப் பெரிய பல்கலைக் கழகத்தைக் கட்டி முடித்திருக்கிறார்கள். அதுவும் அது சார்ந்த விடயங்களும் ஒரு தனி மனிதனது பெயரிலேயே பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஊடகங்களும் அந்த விடயத்தை வெட்டிக் கொத்திக் கீறிக் கிழித்துச் சத்திர சிகிச்சை செய்து தொடர்ந்தும் செய்திகளை வெளியிட்ட வண்ணம் இருக்கின்றன. இவை எல்லாவற்றையும் விட்டு விட்டு ஜே.வி.பி கட்சியினர் அரசைக் கவிழ்க்க வேண்டும் எனப் புறப்பட்டிருப்பது எதற்காக என்று தெரியவில்லை. ஆனால் ஜே.வி.பி யினருக்கு நன்கு தெரியும். அந்த முயற்சியும் ரணிலால் தோற்கடிக்கப்படும் என்று ஏனெனில் அவருக்கு முண்டு கொடுக்கச் சுமந்திரன் போன்றோர் இருக்கிறார்கள். அதற்கு மேலாக ரணிலைத் தாங்கிப் பிடிக்க முஸ்லிம் கட்சிகள் தயாராக இருக்கின்றன. ஏனெனில் அவர்களுக்குத்தான் தங்களை ரணில் காப்பாற்றியிருப்பதற்கான நன்றிக் கடனிருக்கிறதே!

நாட்டில் என்ன புதுமை எல்லாம் நடக்கிறது, பார்த்தீர்களா? ஆலமரங்கள் அரச மரங்களெல்லாம் காக்காய் கூடு கட்டத் தொடங்கியிருக்கிறது. இதுவரை அந்த மரங்கள்தான் எமக்கு நிழல் என்று இருந்தோம். இனிமேல் அதற்குக் கீழ் இருந்து ஆறவும் முடியாது. படுத்து உறங்கவும் முடியாது. எச்சமிட்டு அவை எம்மை அசிங்கப்படுத்திவிடும். கலியுகத்தில் எல்லாம் நடக்கும் என்று பெரியவர்கள் சொல்லிச் சென்றிருக்கிறார்கள்.அதுதான் உண்மை. ■

லேனா.தமிழ்வாணன்



# நோ கமெண்ட்ஸ் ப்ளீஸ்

மற்றவர்களைப் பற்றிக் குறிப்பிடுவதில் மூன்று வகை உண்டு. முதலாவது அவர்கள் இயல்புகளை உள்ளபடி சொல்வது. இரண்டாவது பாராட்டுவது. மூன்றாவது மோசமாக விமரிப்பது.

இவையல்லாமல் நான்காவது ஒரு வழியும் உண்டு. அது, வாயைத் திறக்காமல் இருப்பது நம்மில் பலர் மூன்றாவது வாயைத்தான் அதிகம் பின்பற்றுகிறோம்.

நான் சிலரைச் சந்தித்திருக்கிறேன். இவர்களிடம் பிறரைப்பற்றிப்பேச்சு எடுத்தாலே சிரித்துக்கொள்வார்கள். வாயைத்திறந்து ஒரு கருத்தையும் சொல்லமாட்டார்கள். ஏண்டா இவர்களிடம் இந்தப் பேச்சை எடுத்தோம் என்று நாம் எண்ணுமளவிற்கு நம்மைக் கொண்டுபோய் நிறுத்தி விடுவார்கள்.

ஒரு வகையில் சிந்தித்துப் பார்த்தால், ஒருவரைப் பற்றி நாம் மட்டும் பெரிய பிரசங்கமே செய்கிறபோது எப்படி இவர்களால் மட்டும் வாயைத் திறக்காமல் இருக்கமுடிகிறது என்று நான் வியப்பது உண்டு. இவர்கள் சர்வ ஜாக்கிரதையான ஆசாமிகள். இவர்கள் எந்த வம்பிலும் சிக்குவது இல்லை. எல்லோருக்கும் நல்லவர்களாக வாழ்ந்துவிடுகிறார்கள். நமக்கு மிகமிக வெண்டியவர்களைப் பற்றிக்கூட ஒரு மூன்றாவது மனிதர் கருத்துக் கேட்கிறார் என்பதற்காகக் குறைகளைப் பற்றியே அதிகம் விவாதிக்கின்றோம்.

(போயும் போயும்) இவர்களை சந்தோசப்படுத்த வேண்டும் என்பதற்காக நம் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருப்பவர்களைக்கூட மட்டம் தட்டிப் பேச ஆரம்பித்து விடுகிறோம்.

எல்லா மனிதர்களிடமும் சில இழிவான கண்ணோட்டங்கள் உண்டு. இவை மனத்தில் தோன்றும் போதெல்லாம் சேர்த்து வைத்துக்கொண்டு எப்போது வெளியே விடுவோம் என்று காத்திருக்கும் வேளையில் ஒரு சக இரயில் பயணியிடம் போய் விமர்சிக்க ஆரம்பிக்கின்றோம். வருகிறது வினை!.

இதிலிருந்து நாம் விடுபட முடியும். முதலில் யாரிடமாவது சொல்லித் தீர்க்கவேண்டும் என்கிற நினைப்பு வேரோடு பிடுங்கி எறியப்பட வேண்டும். இரண்டாவதாக, காலமெல்லாம் கஸ்ரப்பட்டுப் பெற்றநல்ல பெயரையும், நல்ல வாய்ப்புக்களையும் இப்படிப்பட்ட வாய் ஓட்டைகளின் மூலம் வடியவிட்டு நாம் வற்றிப் போய்விடக்கூடாது என்கிற நினைப்பு நமக்குள் அழுத்தமாக இருக்கவேண்டும். மற்றவர்களைப் பற்றிய சிறுசிறு குறைபாடுகளை நம்மிடம் சொல்லி, நம் வாயைக் கிளறி அவற்றை உடையவர்களிடம் போய்ச் சொல்லி, நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொள்ளும் சதிக் கும்பலின் பிடிகளிலிருந்து நாம் விடுபட்டாக வேண்டும். நம் விரல்களைக் கொண்டே நம் கண்களைக் குத்தும் இவர்களின் வலைக்கு நாம் இனியும் இரையாவதாவது? ■

# காசி ஆனந்தன் கதைகள்

## படம்

காட்டில் இருந்த மூங்கில் ஒருநாள் கத்தியால் வெட்டப்பட்டது. நெருப்புக்கம்பி தன்னைத் துளைத்த போது 'ஐயோ உடல் புண்ணாகிறதே' என்று கதறி அழுதது.

'கொஞ்சம் பொறுமையாக இரு' என்று மூங்கில்களைப் பார்த்து ஆறுதல் சொன்னது காற்று.


மூங்கில் புல்லாங்குழல் ஆனது.

மேடையில் -

உலகமே மயங்கும் இசையை அள்ளிப் பொழிந்து கொண்டிருந்த புல்லாங்குழலைப் பார்த்து மேனி சிலிர்த்தது காற்று.

அது சொன்னது-

'புண்பட்டவன்
பண்பட்டவன்.'



## தேவை



புல் மேய்ந்து கொண்டிருந்தது மாடு. மரத்தில் இருந்த குருவிக்குஞ்சு தாயைக் கேட்டது:-

'ஏனம்மா மாட்டுக்கு நம்மைப்போல் சிறகு இல்லை?


தாய்க்குருவி சிரித்தது. மாட்டுக்கு நம்மைப்போல் சிறகு தேவையில்லை' என்றது தாய்.

தாய்க்குருவி சொன்னது:-

'வானத்தில் புல் முளைத்தால்

# அந்த ஒரு நிமிடம்...

எஸ்.கணபதி



வீட்டுக்குச் சற்றுத் தொலைவில்தான் சுடுகலன்களின் சத்தம் கேட்டது. அது ஆமியாகவும் இருக்கலாம். இல்லாவிடில் அவர்களோடு சேர்ந்து இயங்கும் துணைப்படைகளாகவும் இருக்கலாம். யாராக இருந்தாலும் அப்பாவிகள்தான் பாதிக்கப்பட்டிருப்பார்கள். ஒரு செய்தியாளர் என்ற முறையில் நிமலன் அதனை நன்கு அறிந்திருந்தான். தொடர்ந்தும் குண்டுச் சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. "என்னவாக இருக்கும்?"
நிமலன் ஒரு கணம் யோசித்தான். அதை விட முக்கியமான விடயம் கையில் சேகரித்து வைத்திருக்கும் செய்திகளை இரவு ஏழு மணிக்குள் பத்திரிகைக்கும், தொலைக்காட்சிக்கும் அனுப்பிவிட வேண்டும். அந்தச் செய்திகள் அன்றிரவோ அல்லது மறுநாள் காலையிலோ ஊடகங்களில் வெளிவந்துவிட வேண்டும். வந்தால்தான் அவன் பட்ட கஷ்டத்திற்குப் பெறுமதி இருக்கும்.

தேடுதல் என்ற போர்வையில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதோடு சில கைதுகள் பற்றிய செய்திகளையும் அவன் சேகரித்திருந்தான். செய்தியைச் சேகரிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் காலையிலிருந்து அவன் எதையும் உட்கொள்ளவில்லை என்றதும் அவனுக்குப் பெரிதாகப்பட வில்லை. சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் செல்வதற்குள் அவன் பல தடைகளை எதிர்கொண்டாலும் அவன் தேடிய செய்திகள் கிடைத்ததையிட்டு அவன் திருப்திப்பட்டான். இன்னும் அவன் மனம் அந்தச் சம்பவத்தோடேயே நிலை கொண்டிருந்தது.

பாதிக்கப்பட்டவர்களை அணுகிய போதும், அவர்களை அவன் நேர்முகங் கண்டபோதும் அவன் ஒரு சமூகப் பொறுப்புள்ளவனாக நடந்து கொண்டான். அவர்களிடம் செய்திளைச் சேகரிக்க முன்னர் அவர்கள் அவனுடன் மனந்திறக்க வேண்டும். அவர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும். தான் யார் என்று அவர்கள் அறிந்தால்தான் அவர்கள் தன்னோடு முழுமையாகப் பேசுவார்கள். அப்போதுதான் அவர்கள் உண்மை நிலை என்ன வென்று தெரியவரும். அதற்கமையத்தான் செய்திகளை அவன் வடிவமைக்க முடியும். செய்திகளைச் சேகரித்துக் கொண்டு அவன் சைக்கிளிலேதான் போக முடியும். வழமையாக அவன் கொண்டு செல்லும் மோட்டார் சைக்கிளைக் கொண்டு செல்ல முடியாது. மண்ணெண்ணெயிலும் பெற்றோலிலும் கலந்து இயக்கும் அவன் மோட்டார் சைக்கிள் ஒருவித ஒலியெழுப்பி அவனைக் காட்டிக் கொடுத்துவிடும். அதோடு மோட்டார் சைக்கிளில் சந்து பொந்தென்று புகுந்து ஓட முடியாது. சைக்கிள்தான் அதற்குச் சௌகரியமானதொன்று. அவனின் அனுபவம் இது.

அவன் சிந்தித்தபடி அவனது தூரத்து உறவினரான வேலுப்பிள்ளையின் வீட்டுக்கு அருகே வந்துவிட்டான். வேலுப்பிள்ளையோடு போவதுதான் சரி என்று அவனுக்குப்பட்டது. ஏனெனில் வேலுப்பிள்ளை அந்த ஊரில் தரகு வேலை செய்பவர். எல்லோரலும் அறியப்பட்ட மனிதன். அவரோடு சென்றால்தான் பாதிக்கப்பபட்ட அந்தக் குடும்ப உறவுகள் வாய் திறந்து ஏதாவது பேசுவார்கள்.

அவர்களைச் சந்திக்க வந்தாயிற்று. அவர்கள் படித்தவர்கள் போல் காணப்பட்டனர். வழமைபோலல்லாது அவனுக்கேற்றவாறு அவர்கள் பல விடயங்களைச் சொன்னார்கள். எந்தவிதத்திலும் அவர்கள் சொன்னதாக இச் செய்திகள் வெளிவரக்கூடாது என்று அவர்கள் கேட்டுக் கொண்டனர். வேலுப்பிள்ளை அண்ணர் வந்ததால்தான் தாங்கள் நிமலனோடு மனம்விட்டுப் பேசக் கூடியதாக இருந்தது என ஒருவர் சொன்னார். சம்பவத்தால் அவர் நன்றாகக் குழம்பிப் போயிருக்கிறார் என்பது. அவர் அணிந்திருந்த உடை, வாராத தலைமுடி, மழிக்காத தாடி என்பனவற்றின் மூலம் தெரிந்தது.

அவர்கள் கொடுத்த தேநீரை மிகவும் அமைதியாகக் குடித்துக் கொண்டிருந்தார் வேலுப்பிள்ளை. நிமலன் அவசர அவசரமாக தேநீரைப் பருகிக் கொண்டே புறப்படத் தயாரானான். விடைபெற்றுக் கொண்டு வேகமாகத் தனது சைக்கிளை மிதித்தபடி அவன் வழமையாக மறைந்திருந்து செய்திகளை எழுதும் தனது நண்பனின் வீட்டுக்குச் சென்றான்.

**மாலை 5மணி 30 நிமி. 23 செக்.**


புகையிலைக் கொட்டிலுக்குள் இருந்த அந்தப் பழைய வாங்கிலிருந்தபடி செய்திகளை ஒழுங்குபடுத்தினான். வியர்வைத் துளிகளால் அந்த வெள்ளைத் தாள்கள் நனைந்து போயிருந்தன. சம்பவத்தைப் பதிவிட அவன் கைவிரல்கள் மறுத்தன. உடனடியாக செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தால்தான் கைது செய்யப்பட்டவர்களைக் காப்பாற்றி விட லாம். இல்லையேல் என்னவாகும் என்றும் நிமலனுக்குத் தெரியும்.

தான் எழுதிய செய்திகளின் பிரதிகளை எடுத்துக் கொண்டு மனித உரிமைக் குழுக் காரியாலயத்துக்குச் சென்றான். நேரம் மாலை 5.30மணி. அங்கு அவர்கள் எவரும் இல்லை. காரியாலயம் பூட்டப்பட்டிருந்தது. அதற்குப் பொறுப்பாகவுள்ளஅதிகாரியின் வீட்டுக்குச் சென்று அவர்களிடம் அந்தப் பிரதிகளைக் கொடுத்ததுந்தான் அவன் மனம் ஒரு நிலைப்பட்டது.

**மாலை 5 மணி 45 நிமி. 54 செக்.**

வீட்டு மதிலின்மேல் சைக்கிளைச் சாத்திக்கொண்டான். வீட்டுக்குள் யார் இருக்கிறார்கள் என்று ஒருமுறை நோட்ட மிட்டுக் கொண்டான். மனைவி மட்டும் மடியில் குழந்தையை வைத்துத் தாலாட்டிக் கொண்டிருந்தாள்.

அவள் இவனைக் கண்டதும் படபடப் போடு எழுந்து வந்தாள். யாரோ இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து இவனைத் தேடிக் கொண்டு சென்றதாக அவள் சொன்னாள். புலனாய்வுப் பிரிவினராக இருக்கலாம் என்று தனது சந்தேகத்தை வெளிப்படுத்தினாள். அவர்கள் வருவதும் போவதும் ஒரு சாதாரண விடயமாக இருந்தாலும் அன்று அவனை இராணுவ மும் தேடி வந்ததாக அவன் மனைவி சொன்னாள்.



**மாலை 5 மணி 50 நிமி. 32 செக்.**

சைக்கிளை எடுத்துக் கொண்டு அவன் அவனோடு சேர்ந்து பணியாற்றும் ஊடக நண்பரான மூர்த்தி வீட்டுக்கு வந்து சேர்ந்தான். மூர்த்தி வாசலிலேயே நின்றான். நிலைமை மோசமாக இருக்கிறது நடவடிக்கைகளைக் கவனமாக எடுக்க வேண்டும் என மூர்த்தி அவனுக்கு அறிவுறுத்தினான். நிமலன் அன்று நடந்த சம்பவத்தை எடுத்துச் சொல்லி இராணுவம் தன்னைக் கைது செய்யக் கூடிய சாத்தியக் கூறுகள் உண் டென்றும், அப்படி அவர்கள் தன்னைக் கைது செய்தால் மீண்டும் தன்னை வெளியில் விடுவதற்கு மூன்று நான்கு மாதங்கள் ஆகும் என்றும். அதுவரை தனது குடும்பச் செலவுக்காக மாதம் ஐயாயிரத்தை தனது மனைவிக்குக் கொடுத்துதவுமாறும் கேட்டுக் கொண்டான்.

**மாலை 5 மணி 50 நிமி. 22 செக்.**

அன்று நிமலன் எழுதிக் கொடுத்த செய்தி ஊடகங்களில் வெளிவருமானால் அது இராணுவத்தினரைப் பின்னடையச் செய்யலாம் என்று மூர்த்தி நம்பினான். அதனால் அவன் நிமலனை எச்சரித்து விட்டு அன்று அவனைத் தன்னோடு தங்கிவிட்டு மறுநாள் காலை வீட்டிற்குச் செல்லுமாறு கேட்டுக்கொண்டான். நிமலன் அதற்குச் சம்மதிக்கவில்லை. புறப்பட்டுவிட்டான்.

**மாலை 6 மணி**

தொலைக் காட்சியில் செய்தி நேரம் அது. செய்தியை வாசிக்கின்ற பெண்மணி பரபரப்பானாள். தலைப்புச் செய்தியே நிமலனுடையது. தொலைக்காட்சிக்கு முன்னால் செய்தியைப் பார்த்தபடி நிமலன் அமர்ந்திருந்தான். நிமலின் மனைவி சமையலறையில் நின்றாள்.
நிமலனின் பிள்ளை கட்டிலில் கிடந்தபடி அழுது கொண்டிருந்தது.

திடீரேன வெடிச் சத்தம் நிமலன் வீட்டு ஜன்னலுக்கூடாகக் கேட்டது. "ஐயோ... அத்தான்" நிமலனின் மனைவியின் அழுகுரலைத் தொடர்ந்து....

**மாலை 7 மணி**

பிரபல வெளிநாட்டுச் செய்திச் சேவையின் முகவரும் ஊடகவியலாள ருமான நிமலன் அவரது வீட்டில் தொலைக் காட்சி பார்த்துக் கொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானார் என்ற செய்தி முக்கிய செய்தியாக தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. ■

> **வீட்டுக்குச் சற்றுத் தொலைவில்தான் சுடுகலன்களின் சத்தம் கேட்டது. அது ஆமியாகவும் இருக்கலாம். இல்லாவிழல் அவர்களோடு சேர்ந்து இயங்கும் துணைப்படைகளாகவும் இருக்கலாம். யாராக இருந்தாலும் அப்பாவிகள்தான் பாதிக்கப்பட்டிருப்பார்கள். ஒரு செய்தியாளர் என்ற முறையில் நிமலன் அதனை நன்கு அறிந்திருந்தான்.**

# வாயு பிரச்சனையா?



புர்ர்ர்ர்ர்...... புர்ர்ர்ர்.............

வாய்வு ! இது மூக்கைப் பிடித்துக் கொள்ள வேண்டியதொரு பிரச்சனைதான்.

இதை மணந்தால் சிலருக்குக் குமட்டலே வந்துவிடும். ஆனாலும், எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியமானதொரு பிரச்சனை இது. சமீபகாலமாக பல திரைப்படங்களில் 'வாயு விடுவதை' கொமெடிக் காட்சியாக்கி சிரிக்க வைக்க முயற்சிக்கிறார்கள். இது ஒரு சிரிக்கக் கூடிய பிரச்சனையா? பலருக்கு இது ஒரு சீரியஸான பிரச்னையாக மாறி இருக்கிறது. கடந்த தலைமுறை வரை டாக்டரிடம் வந்து மருந்து கேட்காத அளவுக்கு வீடுகளிலே காணப்பட்ட உணவுப் பழக்கத்தினால் சரி செய்யப்பட்டுக் காணப்பட்டுச் சாதாரணமாக இருந்த 'வாயு' பிரச்சனை, 'நாகரீக உணவுப் பழக்கம்' என்ற பெயரில் இரசாயனம் கலந்த துரித உணவு களையும் பாக்கெற் உணவுகளையும் சாப்பிட ஆரம்பித்ததால், பலரையும் வருத்தி எடுக்கும் பிரச்சனையாக வளர்ந்துவிட்டது.

உலகில் 'வாயு' விடாத மனிதர் இல்லை. நம்மை அறியாமல் கண்ணை இமைப்பது போல், இந்த 'வாயு விடுதலும்' இயல்பாக நிகழ்கிற உடலியல் விஷயமே! சுருக்கமாகச் சொன்னால், குடலில் உணவு செரிமானம் ஆகிறபோது விளையும் ஒரு கழிவுப் பொருள்தான் 'வாயு'. சின்ன வித்தியாசம்... மற்ற கழிவுகளை அடக்கிக் கொள்ளலாம். இதை அடக்க முடியாது.'வாயு' பற்றி நமக்கு இருக்கும் புரிதல் ரொம்பவும் குறைச்சல். தவறான நம்பிக்கைகள்தான் அதிகம். அதனால்தான் முதுகுவலி, முழங்கால் வலி, இடுப்புவலி எனப் பல்வேறு வலிகளுக்கும் வாயுதான் காரணம் என்று முடிவு கட்டுகிறோம். என்னிடம் சிகிச்சை பெற கிராமத்து மூதாட்டி ஒருவர் வந்தார். "உடம்பெல்லாம் வாயு குத்துது, டாக்டர். வலி தாங்க முடியலே!" என்றார். "அப்படியெல்லாம் வாயு குத்த வாய்ப்பு இல்லையே!" என்றேன். "நீங்க டிகிரி (ஸ்டெதாஸ்கோப்) வைச்சுப் பாருங்க. அப்போதான் தெரியும்!" என்று சவால் விட்டார்.

நான் ஸ்டெதாஸ்கோப்பை அவர் நெஞ்சில் வைத்தேன். உடனே 'ஆவ்வ்' என்று பெரிய ஏப்பம் விட்டார். வயிற்றில் வைத்தேன். அப்போதும் ஏப்பம் விட்டார். முதுகைப் பரிசோதித்தேன். மீண்டும் ஒரு ஏப்பம்! அடுத்து அவரது கால்களைப் பரிசோதித்தேன். இப்போதும் ஏப்பம் வந்தது."பார்த்தீங்களா டாக்டர்? நீங்க தொடற இடமெல்லாம் வாயுதான். அதனால்தான் இப்படி ஏப்பம் ஏப்பமா வெளியேறுது!" என்றார் அவர். "ஏப்பம் விட்டால் வாயு வெளியேறும். வாயு வெளியேறி விட்டால் வலி குறையும்" என்று அவர் நம்புவதால், மனரீதியாக அவராகவே ஏப்பத்தை வரவழைத்துக்கொள்கிறாரே ஒழிய, உண்மையில் அவருக்கு ஏப்பம் ஏற்படுவதில்லை. அதிலும் முதுகிலிருந்தும் முழங்காலில் இருந்தும் வாயு வெளியேறுவதில்லை!

நமது உடல் அமைப்பின்படி, மூச்சுப் பாதை, உணவுப் பாதை இந்த இரண்டு இடங்களில் மட்டுமே வாயு இருக்க முடியும். மூதாட்டி போல் பலரும் நம்புகிற மாதிரி முடி முதல் அடி வரை வாயு சுற்றுவதில்லை. அப்படிச் சுற்றினால், அது உயிருக்கே ஆபத்து! எப்படி என்பதைச் சொல்கிறேன்...மூச்சுப் பாதை மற்றும் உணவுப் பாதையைத் தாண்டி வாயு கசிந்தால், உடலை விட்டு வெளியில் போக அதற்கு வழி கிடையாது. அப்போது அருகில் உள்ள உறுப்புகளைத்தான் அது அழுத்தும். அப்படி இதயத்தையோ, நுரையீரலையோ அழுத்துகிறது என்றால், அது மரணத்தில்தான் முடியும்! நெஞ்சில்/ வயிற்றில் குண்டு துளைத்தவர்கள் இறப்பதற்கு இது ஒரு காரணம்.



சரி, வாயு என்பது என்ன?

அஜீரணம், அடிக்கடி ஏப்பம் வருதல், வாயு பிரிதல், வயிற்று இரைச்சல், வயிற்று உப்புசம் ஆகிய அறிகுறிகளுடன் காணப்படும் உணவுப் பாதைப் பிரச்சனையை 'வாயுத் தொல்லை' (Flatulence) என்கிறோம். நாம் அவசர அவசரமாகச் சாப்பிடும்போது, பேசிக்கொண்டே சாப்பிடும்போது, காபி, டீ மற்றும் பாட்டில் பானங்களை உறிஞ்சிக் குடிக்கும்போது நம்மை அறியாமலேயே காற்றையும் சேர்த்து விழுங்கி விடுகிறோம். இந்தக் காற்றில் 80 சதவீதம் இரைப்பையில் இருந்து ஏப்பமாக வெளியேறுகிறது. மீதி சிறுகுடல், பெருங்குடலைத் தாண்டிச் சென்று ஆசனவாய் வழியாக வெளியேறுகிறது.

அடுத்து, இரைப்பைக்கு வரும் உணவை அமிலம் சிதைக்கும்போதும், குடலில் உணவு செரிக்கப்படும்போதும் அங்கு சாதாரணமாகவே குடியிருக்கின்ற நன்மை செய்யும் பாக்டீரியாக்கள் நொதித்தல் எனும் செயல்முறை மூலம் பல ரசாயன மாற்றங்களை நிகழ்த்துகின்றன. அப்போது ஹைட்ரஜன், கார்பனீர் ஒட்சைட்டு , நைட்ரஜன், ஒக்சிஜன், மீத்தேன் எனப் பலதரப்பட்ட வாயுக்கள் உற்பத்தியாகின்றன. உதாரணமாக, உணவில் உள்ள மாவுச்சத்தும், புரதச்சத்தும் நொதிவடையும்போது ஹைட்ரஜன் உருவாகிறது. இரைப்பையில் அமிலம் சமநிலைப்படும்போது காபனீர் ஒட்சைட்டு உற்பத்தியாகிறது. சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். இப்படித் தினமும் சுமார் 2 லிட்டர் வாயு நம் உடலில் உற்பத்தியாகிறது. இது வயிற்றில் தங்கினால் வயிறு உப்பிவிடும். அப்படியே வெளியேறினால் சுற்றுச்சூழல் கெட்டுவிடும். இதைத் தவிர்க்க உடல் செய்துகொண்ட ஏற்பாடுதான் 'வாயு பிரிதல்'! குடலில் உருவாகும் வாயுவில் அதிகபட்ச அளவு ரத்தத்தில் உறிஞ்சப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, சுவாசப் பாதை வழியாக வெளியேறுகிறது. மீதிதான் ஆசன வாய் வழியாக வெளியேறுகிறது.

சாதாரணமாக நமது குடலில் சுமார் 200 மி.லி. வாயுதான் இருக்க முடியும். இது வெளியேறுவது உடலுக்கு நல்லதுதான். ஆனால், கெட்ட வாடை கொண்ட வாயு வெளியேறினால், உடலுக்குள் கோளாறு இருப்பதாகவே அர்த்தம். எப்படி? சாதாரணமாக மேலே சொன்ன வாயுக்கள் உருவாகும்போது துர்நாற்றம் இருக்காது. ஆனால், குடலில் சில என்சைம்கள் பற்றாக்குறை ஏற்படும்போது, புரத உணவு சரியாக செரிக்கப்படுவதில்லை. அப்போது அம்மோனியா, ஹைட்ரஜன் சல்ஃபைடு, மெர்க்காப்டான் என புதிய வாயுக்கள் உருவாகும்.

இவைதான் கெட்ட வாடைக்குக் காரணகர்த்தாக்கள். இவர்கள் வெளியேறும்போதுதான் அக்கம்பக்கம் இருப்பவர்கள் மூக்கைப் பிடிக்கும் நிலைமை உருவாகிறது. பலருக்கு சத்தமில்லாமல் வாயு வெளியேறுகிறது சிலருக்கு சத்தம் வருகிறது. என்ன காரணம்? பொதுவாக ஹைட்ரஜனும் மீத்தேனும் குறைந்த அளவில் ஆக்சிஜனுடன் கலந்தால் 'புஸ்வாணம்' மாதிரி சத்தம் கேட்கும். இந்தக் கலவையின் அளவு அதிகமாகிவிட்டால் 'அணுகுண்டு வெடி'யைப் போன்ற சத்தமும் கேட்கலாம்.

வாயு அதிகமாகப் பிரிவது ஏன்?

இது எல்லோரும் எதிர்பார்க்கிற கேள்வி. நாளொன்றுக்கு சராசரியாக 15 முறை வாயு வெளியேறினால் கவலைப்படத் தேவையில்லை. இந்த அளவு அதிகரித்தால் அல்லது வயிற்றில் வலி, கடுமையான இரைச்சல், உப்புசம், புளித்த ஏப்பம் போன்றவை சேர்ந்துகொண்டால் என்ன காரணம் என்று அறிய வேண்டும். புரதம் மிகுந்த பயறுகளையும் ஸ்டார்ச் நிறைந்த கிழங்குகளையும் அதிகமாகச் சாப்பிடுவது முதல் காரணம். அஜீரணம் அடுத்த காரணம். குடல் நோய்கள் மூன்றாவது காரணம். பொதுவாக, உணவுமுறையை சரி செய்தாலே பலருக்கும் இது சரியாகி விடும். உணவுச் செரிமானத்துக்குத் தேவையான என்சைம்கள் குறைந்து, அஜீரணம் ஆகி, வாயுத் தொல்லை கொடுத்தால் என்சைம் கலந்த டானிக்குகள் உதவும். சில பேர் டாக்டரிடம் வரும்போது, "பால் குடிச்சாலே வயித்துக்கு ஆகலே டாக்டர். வயிறு 'கடாபுடா'ன்னு இரையுது. அடிக்கடி வாயு பிரியுது" என்று கவலைப்படுவார்கள். இதற்குக் காரணம், இவர்களுக்கு 'லேக்டேஸ்' எனும் என்சைம் குறைவாகச் சுரக்கும். பாலில் உள்ள 'லேக்டோஸ்' எனும் சர்க்கரை செரிக்காமலேயே பெருங்குடலுக்குச் சென்றுவிடும். இதனால் வாயு நிறைய உற்பத்தியாகும். இவர்கள் சோயா பாலைக் குடித்து வாயுவை அரெஸ்ட் செய்யலாம். வாயுவை அதிகப்படுத்தும் நோய்கள் என்று ஒரு லிஸ்ட் இருக்கிறது. அதில் மலச்சிக்கல், குடல்முடக்கம், அமீபியாசிஸ், குடல் காசநோய், புற்றுநோய், குடலடைப்பு, குடல் எரிச்சல் நோய் (Irritable Bowel Syndrome), கணைய நோய், கல்லீரல் நோய், பித்தப்பை நோய் ஆகியவை வி.ஐ.பி.க்கள். சிலருக்கு ஆன்டிபயாடிக்குகள், பேதி மாத்திரைகள் போன்றவற்றாலும் வாயுத் தொல்லை அதிகரிப்பது வழக்கம். தொப்பை இருப்பவர்களுக்கு, ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்கிறவர்களுக்கு, டென்ஷன் பேர்வழிகளுக்கு மற்றவர்களைவிட வாயு உற்பத்தி அதிகமாகவே இருக்கும். வயதானவர்களுக்கு உடற்பயிற்சி இல்லை, உடலியக்கம் குறைவு, போதுமான தண்ணீர் குடிக்கவில்லை போன்ற காரணங்களால் வாயுத் தொல்லை ரொம்பவே படுத்தி எடுக்கிறது.

வாயுவுக்குக் காரணம் உணவா, நோயா என்று டாக்டரிடம் பரிசோதித்துக்கொண்டால் இதற்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும். காரணம் உணவென்றால், டாக்டர் யோசனைப்படி உணவுமுறையை மாற்றிக்கொண்டாலே பிரச்சனை கட்டுக்குள் வந்துவிடும். நோய்தான் காரணம் என்றால், அது சரியாகும் வரை சிகிச்சை பெற வேண்டும். அடிக்கடி கெட்ட வாடையுடன் வாயு பிரிந்தால் வயிற்றை அல்ட்ரா சவுண்ட் மற்றும் கொலனோஸ்கோப்பி டெஸ்ட் செய்துகொள்வது நல்லது. வாயு பிரச்சனைக்கு இப்போது நல்ல மருந்துகள் உள்ளன சீக்கிரத்தில் குணப்படுத்திவிடலாம்.

சிலர் "எனக்கு வாயுவே பிரியாது" என்று பெருமைப்படுவார்கள். அதுதான் ஆரோக்கியம் என்று நினைத்துக்கொள்வார்கள். உண்மையில் அது ஆபத்தானது. காரணம் தெரியுமா? காசநோய், புற்றுநோய், சொருகல் நோய் போன்றவை குடலைத் தாக்கினால், அங்கு வீக்கம் ஏற்பட்டு அடைப்பு உண்டாகும். வாயு வெளியேற முடியாமல் அங்கு மாட்டிக்கொள்ளும். இது ரொம்பவும் சீரியஸான பிரச்னை! உடனே கவனிக்க வேண்டும்.

## வாயுவைக் கட்டுப்படுத்த வழி!

கிழங்குகளையும் பயறுகளையும் குறைத்துக்கொள்ளுங்கள்., ஆவியில் அவித்த உணவுகளை உண்ணுங்கள், வறுத்து, பொரித்து, ஃபாஸ்ட்ஃபுட், பாக்கெட் ஃபுட், ஸ்னாக்ஸ், அடிக்கடி உண்ண வேண்டாம், பொட்டில் பானங்களை' மறந்துவிடுங்கள், உடற்பயிற்சி செய்ய மறக்காதீர்கள், தினமும் 3 லிட்டர் தண்ணீர் குடியுங்கள்., வெற்றிலை-பாக்கு, பான் பராக், மது, புகை போன்றவற்றைத் தவிர்க்கவும். டொக்டர் அனுமதியும் வழிகாட்டலும் இல்லாமல் அல்சருக்கும், பேதிக்கும் மாத்திரை, மருந்து சாப்பிடாதீர்கள்.

## வாயுவை வரவேற்கும் உணவுகள்!

மொச்சை, பட்டாணி, பயறு, பீன்ஸ், சோயாபீன்ஸ், முட்டைகோஸ், வெங்காயம், காலிஃபிளவர், முந்திரி, வாழைக்காய், உருளைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு சர்க்கரைவள்ளிக் கிழங்கு, சாக்லெட், கேக், பிஸ்கட், பொப்கோர்ன், சிப்ஸ், நூடில்ஸ், செயற்கைப் பழச்சாறுகள், மென்பானங்கள், மசாலா மிகுந்த உணவுகள், முட்டை, பால் மற்றும் பாலில் தயாரிக்கப்பட்ட உணவுகள், வினிகர், பியர்... இவற்றுள் எந்த உணவைச் சாப்பிட்டால் உங்களுக்கு வாயு அதிகரிப்பதாகத் தோன்றுகிறதோ, அதையும் குறைத்துக்கொள்ளுங்கள்.



நன்றி : டாக்டர் கு.கணேசன் - தினகரன் (தமிழ்நாடு)



சொர்ணவேல்

(மிச்சிகன் மாநில பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக ஆங்கிலம் மற்றும் ஊடகத்துறைகளில் பணியாற்றுகிறார்.)

# விம்பம்

# குறும்பட வெளியும் உளவூறும் ஆழ்மன பிம்பங்களும்!




கடந்த ஏழு வருடங்களாக தமிழீழக் குறும்படங்களை முக்கியமான திரைப்பட வெளிகளில் நண்பர்கள் கிருஷ்ணராஜா மற்றும் ரதன் வாயிலாகக் கண்டுவருகிறேன். எனக்குக் காணக் கிடைத்த படங்களில் சில படங்களை இங்கு ஆராய்கிறேன். முதலில் மதி சுதாவின் முக்கியமான குறும்படத்துடன் தொடங்குவது சரியாக இருக்குமென எண்ணுகிறேன்.

மதி சுதாவின் 'வெடிமணியமும் இடியன் துவக்கும்' ஆழமான அனுபவத்தை அளித்து நினைவில் நிற்கும் படமாக உருக்கொண்டுள்ளது. பொதுவாகக் குறும்படங்களுக்கு ஏற்றவாறு உள்ளடக்கத்தைத் தேர்ந்தெடுக்காமல் ஒரு முழுநீளப் படத்துக்கான உள்ளடக்கத்தைக் குறும்பட உருவில் அடைக்க நினைப்பதிலுள்ள சிக்கல்களைப் பற்றி முன்னர் விரிவாக எழுதியிருக்கிறேன். என்னுடைய அனுபவத்தில் அத்தகைய முயற்சிகள் சீராக ஆரம்பித்து அவசர கதியில் முடியும். அல்லது நேர்க்கோட்டில் சென்ற கதையாடல் தனது லயமிழந்து துரித கதியில் வெட்டுண்டு சடாரென்று முடியும். துண்டு துண்டான அதன் அமைப்பு கோர்வையழகியலைக் கேள்விக்குள்ளாக்கும் நோக்கமோ அரசியலோ அன்றி அமைந்திருக்கும்.

மதிசுதா என்னுடைய அத்தகைய (முன்) முடிவுகளைக் கேள்விக்குள்ளாக்குகிறார். மூன்று தலைமுறைகளை முன்வைத்து நகரும் கதையாடலைத் தேர்ந்த கதைசொல்லியாகச் செதுக்கி, அற்புதமான குறும்படத்தின் மூலம் போரின் பின்னணியில் தமிழருக்கு இருந்த உறுதியையும் போராட்டத்திலிருந்த பெருமையையும் விரித்தெடுக்கிறார்.

மதி சுதாவின் இயக்கத்தில் முல்லை ஜேசுதாசன், கமலாராணி, சங்கர், ஜசிதரன், கேசவராஜன், தர்சன் போன்றோரின் நடிப்பு இலங்கையில் அன்றிலிருந்து இன்றுவரை இருக்கும் கலைஞர்களின் இயல்பான ஆற்றலுக்குச் சான்றாக இருப்பதுடன் குறும்படம் எனும் சட்டகம் அத்தகைய அரிய கலைஞர்களின் திறமையை ஆவணப்படுத்தும் வெளியாக இருப்பதின் மகத்துவத்தையும் சொல்கிறது. ஜேசுதாசன், கமலாராணி ஆகியோரின் நடிப்பு படத்திற்கு மகுடம். ஜேசுதாசன் தனது பேரனுடன் பழகும் பாங்கு தீவுகளில் வாழும் மக்களுக்கு இயற்கையுடன் இருக்கும் இயல்பான உறவைத் திரையில் கவிதையாக வடிக்க உதவுகிறது.

வெடிமணியமாகத் தமிழ்ச் சமூகத்தின் அன்பையும் ஆணாதிக்கத்தையும் ஒருசேர உருவகித்திருப்பதில் மதி சுதாவின் எழுத்தும் இயக்கமும் மிளிர்கின்றன. எசுத்தரம்மாவாக கமலாராணி வெடிமணியத்தின் சாதித்திமிருக்கு நறுக்கென்று தனது சொல்லால் வெடிவைப்பதும், கணவனாகக் கைப்பிடித்தவனின் வயோதிகத்தில் அவனுக்கு உறுதுணையாக இருப்பதும் தேர்ந்த இயக்குநராக மதி சுதா நடிகர்களைக் கையாள்வதிலுள்ள முக்கியத்துவத்தை அறிவுறுத்தும் காட்சிகளாகப் பார்வையாளர்களை ஈர்க்கின்றன.

தனது கடைசி காலகட்டத்தில் உடம்புக்கு முடியாமல் படுக்கையில் கிடக்கும் ஒரு தாத்தாவை மையப்படுத்தித் தொடங்கும் கதையாடல் அவரருகிலிருந்து முன்னர் அவரிடமிருந்து விலகிச் சென்ற மகன் வந்து பராமரிப்பது மற்றும் அவரது மனைவியும் மருமகளும் காலமாகிவிட்டதை அவரது கட்டிலின் மேல் சுவரில் பெரிய சட்டத்தில் மாட்டப்பட்டிருக்கும் நிழற்படங்கள் மூலம் சொல்லும் மதி சுதா அந்த மருமகள் போரின் குண்டுவீச்சினால் இறந்துவிட்டதையும் நமக்குச் சொல்கிறார். படத்தின் ஆரம்பத்திலேயே வெடிமணியத்தின் குழந்தையைப் பாதுகாக்க எசுத்தரம்மா இரண்டாம் தாரமாக அவ்வீட்டில் வந்து குடிபுகுந்தது நமக்கு விவரிக்கப்படுகிறது.

அக்காட்சியின் தனித்துவம் என்னவென்றால் அது வெடிமணியத்தின் உயர் சாதிவெறியை அடிக்கோடிடுகிறது. அத்தகைய வன்முறை நிறைந்த இருண்மையான காலகட்டங்களில்கூடத் தமிழனது ரத்தத்தில் ஓடும் சாதியெனும் விஷம் ஃ புற்றுநோயை மதி சுதா இயல்பாக ஆயினும் ஆழமாகச் சுட்டிச் செல்கிறார். கதாநாயகன் தமிழ்ச் சூழலிலுள்ள சாதிய, ஆணாதிக்கத் திமிருக்கு அடிமையாகத்தான் இருக்கிறான். அதற்கு எதிர்வினையாக எசுத்தரம்மா தனக்குக் குழந்தையைப் பராமரிக்க ஆள் வேண்டிய தருணத்தில் சாதி பற்றிய திமிர் வெடிமணியத்திற்கு எங்கு போச்சென்று வினவி வெடிமணியத்தின் கையாலாகாத்தனத்தையும் சூழ்நிலைக்கேற்ற சூழ்ச்சியையும் தாக்கி தான் கொண்டுவந்த சூடான தேநீரைத் தூக்கி எறிந்துவிட்டுச் செல்கிறார். மதி சுதா காட்சிப்படுத்தியிருக்கும் விதம் அவரது தேர்ந்த இயக்கத்தைப் படத்தின் தொடக்கக் காட்சிகளிலேயே நமக்குச் சொல்லிவிடுகிறது.

வயோதிக காலத்தில் வெடிமணியம், எசுத்தரம்மாவின் உறவின் இயல்பான நெருக்கம், வெடிமணியம் இவ்வுலகை விட்டுப் பிரியக் காத்திருக்கும் காலகட்டத்துடன் அருமையாக இணைக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய இணைவிற்கும் பிரிவிற்கும் ஊடாக வெடிமணியத்திற்குத் தனது பேரனின் மீதான அன்பும் வேட்டையாடுவதிலிருக்கும் ஈடுபாடும் கவிதைபோல ஓடுகின்றன. துப்பாக்கியைப் பராமரிப்பதிலிருந்து வேட்டையாடக் "குறி" பார்ப்பது, இலக்கைத் தப்பவிட்டால் மீண்டும் தன் கண்களை மூடி விரித்து ஆயத்தப்படுத்திக்கொள்வது போன்ற தாத்தாவிற்கும் பேரனுக்குமான வெளிப்புறங்களிலேயே சட்டகப்படுத்தப்பட்டிற்கும் இயல்பான இணக்கமான உறவு தமிழ் சினிமாவிற்குப் புதிது.



மதிசுதா



அத்தகைய வேட்டையாடுவதில் வெடிமணியத்திற்கு இருந்த தேர்ச்சியைப் பெறுவது அவரது பேரனின் காலகட்டத்தில் (2007இல்) தன்னை அரசு எனும் இன அழிப்பு இயந்திரத்துடைய வன்முறையிலிருந்து தற்காத்துக்கொள்ளவும் துணிந்து எதிர்க்கவும் மட்டுமல்லாது, தனது தாத்தாவின் அல்லாடிக்கொண்டிருந்த உயிர் இவ்வுலகை விட்டு இனிதே பிரியவும் வகை செய்கிறது.

நல்லதொரு சிறுகதையைப் போல மதி சுதாவின் படத்தின் முடிவும் கச்சிதமாக அமைந்துள்ளது. சிறுகதையின் இறுதித் தருணம் முக்கியமானது. முடிவு என்பது எதிர்பார்க்காத திருப்பமாக இருக்கலாம் அல்லது கவித்துவ அல்லது தத்துவ உச்சமாக இருக்கலாம். அல்லது மதி சுதாவின் இப்படத்தைப் போல அலகுகளின் நுண்ணிய ஒத்திசைவாக இருக்கலாம். போரின் ஈரமற்ற பேரிரைச்சலின் பின்னணியில் அன்பின் ஏக்கத்திற்கான ஆன்மாவின் பெருமூச்சாகவும் இருக்கலாம்!

நடிப்பு மட்டுமல்லாமல் திரைக்கதையமைப்பு, இயக்கம், ஒளிப்பதிவு, தொகுப்பு, இசையமைப்பு எல்லாம் காத்திரமாக இணைந்து மதி சுதாவின் 'வெடிமணியமும் இடியன் துவக்கும்' என்ற இக்காண்பியல் மொழிக் கவிதையைத் தமிழ்க் குறும்பட வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாக்குகின்றன. திரைக்கதையில் கவனம் செலுத்தினால் விரிந்த ஒரு காலகட்டத்தில் மூன்று தலைமுறையினரை வைத்துப் பின்னப்பட்ட கதையை லாவகமாகத் தேவையான காட்சிகளின் கோர்வையாகச் சிக்கன சுருக்க அழகியலின் ஆற்றலைக் கொண்டு ஒரு அருமையான குறும்படமாக உருவாக்க முடியும் என்று நமக்கு நம்பிக்கையை அளித்திருக்கும் மதி சுதா குழுவினருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்!






# ஜெருசலேம் யாத்திரை-13
# பயண அனுபவங்கள்

**ஏ.ஜே.ஞானேந்திரன்**



# சிலுவைப்பாதை

இயேசு மரணதண்டனை பெற்ற பின்னர், அங்கிருந்து சிலுவையைத் தோளில் சுமந்து கொண்டு கல்வாரி மலைவரை சென்ற சிலுவைப் பாதை நிகழ்வுகள் ஓவியங்களாக அல்லது மர வேலைப்பாடுகளாக அல்லது கற்களால் செதுக்கப்பட்ட வடிவங்களாக எந்தக் கிறிஸ்தவ ஆலயத்திலும் உள் பக்க இரு சுவர்களிலும் இருப்பது வழமை. இதைப் பதினான்கு நிலைகளாகப் பிரித்துள்ளார்கள். இந்த நிலைகளை (Stations) எமக்கு இங்கு நேரில் பார்க்கும் அரிய வாய்ப்பு கிடைத்தது. இயேசு தன்னுடைய கடைசி யாத்திரையை



நோக்கி நடந்த பாதையை Via Dolorosa (துயரங்களின் பாதை)என்று இலத்தீன் மொழியில் அழைக்கிறார்கள். (அதன் முன்பாக எடுத்த போட்டோ இணைக்கப்பட்டுள்ளது. இது இயேசு சிலுவையில் அறையப்பட, சிலுவை யினை சுமந்து சென்ற,ஜெருசலேம் பழைய நகரிலுள்ள ஓர் இருபக்க வீதியாகும். இப்போதுள்ள பாதை முன்பிருந்த பாதைகளை விலக்கி, 18ம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டதாகும். இது இன்று ஒன்பது சிலுவைப் பாதைகள் கொண்டு காணப்படுகின்றது. 15ம் நூற்றாண்டிலிருந்து பதினான்கு சிலுவைப் பாதைகள் கொண்டு காணப்பட்டது . மீதி ஐந்தும் திருக்கல்லறைத் தேவாலயத்திற்குள் காணப்படுகின்றன. பாதையின் ஆரம்பத்தில் இயேசுவைக் குற்றவாளி என்று குற்றம் சாட்டிய இடம், பின் அவர் சிலுவையைத் தூக்கி வருமாறு ஆணையிட்ட இடம், அவர் சிலுவையின் சுமையால் விழுந்த இடம், பின் அவர் தன் தாயைக் கூட்டத்தில் சந்தித்த இடம், அவர் தன் ஆதரவாளர்களோடு பேசிய இடம், ஜெருசலேம் பெண்களைச் சந்தித்த இடம் என்று கூறப்படும் இடங்கள் முஸ்லீம் பிரிவில் இருக்கின்றன. இயேசு சிலுவையின் சுமையால் மறுபடி விழுந்த இடம், உரோமர் சிப்பாய்கள் அவருடைய ஆடைகளைக் களைந்த இடம், அவரைச் சிலுவையில் அறைந்த இடம், அவ ருடைய உடலைக் கீழே இறக்கி வைத்த இடம், அவருடைய கல்லறை ஆகியவை பின்னால் கட்டப்பட்ட Church of the Holy Sepulcher-குள்ளே இருக்கின்றன. திருக்கல்லறைத் தேவாலயம் அல்லது திருக்கல்லறை பேராலயம் என்று அழைக்கப்படும் இது மதிலாலான பழைய நகரின் கிறிஸ்தவப் பகுதியினுள் உள்ள ஓர் தேவாலய மாகும். சுவருள்ள ஜெருசலேம் பழைய நகரிலுள்ள நான்கு புராதன பகுதி களில் ஒன்று இதுவாகும். யூதப் பகுதி, இஸ்லாமியப் பகுதி, ஆர்மேனியப் பகுதி என்பன ஏனைய மூன்று பகுதிகளாகும். கிறிஸ்தவப் பகுதி பழைய நகர் வடமேல் மூலையில் அமைந்துள்ளது. கிறிஸ்தவப் பகுதி கிட்டத்தட்ட 40 கிறிஸ்தவ புனித இடங்களைக் கொண்டுள்ளது. அவற்றில் கிறிஸ்தவத்தின் அதி புனித இடங்களில் ஒன்றாகிய திருக்கல்லறைத் தேவாலயம் அங்கு காணப்படுகின்றது. இப்பகுதி கொல்கொத்தா (கல்வாரி மலை) மதிப்புக்குரியதாக விளங்குகின்றது. ஏனென்றால் இங்கேதான் இயேசு சிலுவையிலறையப்பட்டு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார். பல கிறிஸ்தவர்க ளுக்கு, குறிப்பாக நான்காம் நூற் றாண்டிலிருந்து யாத்திரிகர்களுக்கு, இயேசு இந்த இடத்தில் உயிர்த்தெழுந்த காரணத்தினால் இத்தேவாலயம் மிக முதன்மையான இடமாகும்.

பெருந்திரளாக அங்கு தினமும் வந்து குவியும் யாத்திரீகர்களில் நாமும் ஒருவராகக் கலந்து, சிலுவையிலிருந்து இறக்கிய கிறிஸ்துவின் உடலைக் கிடத்தியதாகச் சொல்லப்படும் கல்மேடைப் பகுதியையும் நேரில் பார்க்க முடிந்தது. ஈஸ்டர் பண்டிகைக்கு முந்தைய 40 நாட்களை கிறிஸ்தவர்கள் தவக்காலமாக அனுசரிப்பது வழக்கம். தவக்காலத்தில் கிறிஸ்தவர்கள் நோன்பிருந்து, ஏழை - எளியவர்களுக்கு தான தர்மம் உள்ளிட்ட உதவிகளை செய்வார்கள். மேலும் இயேசுக்கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளை தியானிக்கும் விதமாக தவக்காலம் கடைபிடிக்கப்படும். கத்தோலிக்க கிறிஸ்தவ ஆலயங்களில் தவக்காலத்தில் இயேசு வின் சிலுவைப்பாடுகளை நினைவுகூரும் வகையில் சிலுவைப்பாதை நிகழ்ச்சிகளும் நடைபெறும். உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படும் முக்கிய பண்டிகைகளில் ஈஸ்டர் பண்டிகை என்ற இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவும் ஒன்றாகும்.(இந்த உயிர்ப்பு ஞாயிறு என்பது நமது மண்ணில் மனிதம் மரித்த ஞாயிறாக வெடித்தது இன்னொரு தனிக் கதை )

**மெனோரா விளக்கு**

தமிழர்களுக்கு விளக்கேற்றுவது புதினமான விடயமல்ல. பொதுவாக மாலை 6.30க்கு ஏற்றுவதே நமது மரபு. இதை கருக்கல் நேரம் என்பர். சூரியன் மறைந்ததும் சில விஷ சக்திகள் சுற்றுச்சூழலில் பரவி வீட்டிற்குள்ளும் வர வாய்ப்பிருக்கிறது. ஒளியின் முன் அந்த விஷ சக்திகள் அடிபட்டு போகும். எனவே அந்நேரத்தில் விளக்கேற்றுகிறோம் என்பது அறிவியல் உண்மை.விளக்கு எரிந்த வீடு வீணாகிப் போகாது என்று ஒரு பழமொழி. திருவிளக்கு வழிபாடு என்பது இந்து மதத்தில் இடம்பெறும் ஒரு வழிபாட்டு முறையாகும். இறைவனை ஒளிவடிவாக உருவகித்து நலன்களை வேண்டி நடத்தப்படும் வழிபாடு திருவிளக்கு வழிபாடாகும். குத்துவிளக்கை ஏற்ற பசுநெய், நல்லெண்ணெய், ஆமணக்கு எண்ணெய் ஆகியவற்றைப் பயன்படுத்துவர். ஒரு முகம் முதல் ஐந்து முகம் வரை ஏற்றினால் அதற்குரிய நற்பலன்கள் உண்டாகும் என்பது நம்பிக்கையாகும். இதை நான் சொல்ல வந்ததன் காரணம், யூதர்களும் விளக்கேற்றி வழிபடுகிறார்கள் என்பதை உங்களுக்கு அறியத்தர வேண்டும் என்பதற்காகத்தான்!






யூதர்கள் பகுதியில் உள்ள ஒரு சதுக்கத்தில் மெனோரா (menorah) என்னும் யூதர்களின் ஏழு தீப விளக்கு ஒன்று இருக்கிறது. இது யூதர்களுக்கு மிக முக்கியமான விளக்கு. இதில் எரிவதற்கு மிகச் சுத்தமான ஒலிவ் எண்ணெய்தான் உபயோகிக்க வேண்டுமாம். மிகப் பழங்காலத்தில் ஒரு முறை ஒரு நாளைக்கு மட்டுமே போதுமான ஒலிவ் எண்ணெய்தான் இருந்துள்ளது. ஆனால் அதிர்ஷ்டவசமாக அந்த எண்ணெயிலேயே ஏழு நாளைக்கு தீபம் எரிந்திருக்கின்றது... அதிலிருந்து இந்த விளக்கை ஏழு முகம் கொண்டதாகவே அமைத்திருககிறார்கள். யூதர்கள் பகுதியில் இருக்கும் மெனோராவின் அடியில் 'மூன்றாவது கோவிலை நாம் காலத்திற்குள் கட்டிவிடுவோம்' என்று எழுதப்பட்டிருக்கிறது. மெனோரா, ஒரு அடிப்பாகத்தையும் ஆறு கிளைகள் கொண்ட ஒரு தண்டையும் கொண்டு கெட்டியான தங்கத்தினால் உருவாக்கப்பட்டது. ஆறு கிளைக ளும் நடுத் தண்டின் உயரத்திற்கேற்ப வளைந்து காணப்படும். ஆகவே, ஏழு விளக்குகளின் உச்சிகளும் சம ஒழுங்கில் காணப்படும். இது பொதுவாக இளம் நீலம் மற்றும் வெள்ளை நிறத்தில் காணப்படும். இஸ்ரேலிய சின்னம் அதன் பாவனைக்கு ஏற்ப வேறுபட்ட நிறங்களிலும் காணப்படும். புதிய தொரு டிரம்ப்-கோயில் நாணயம் இஸ்ரேலின் 70 ஆண்டு விழாவை முன்னிலைப்படுத்தி, சென்ற ஆண்டு இஸ்ரவேல் அறிமுகப்படுத்தியிருந்தது. இந்த நாணயத்தில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மற்றும் பாரசீக மன்னரான சைரஸ் ஆகியோரின் படங்கள் இடம்பெறுகின்றன. அத்துடன் மெனோரா விளக்கும் நாணயத்தில் அச்சிடப்பட்டுள்ளது...

*பயணிப்போம்.*







## இதனைச் சற்றுப் படியுங்கள்! பிறரையும் காப்பாற்றலாம்...

எட்வின்

குறிப்பாகக் கண்ணியம் குறைந்த தொழில் களில் மக்களை அதுவும் இளைஞர்களை ஈடுபடுத்துகின்ற கம்பெனிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியது யார் பொறுப்பு?

தரமற்ற பொருட்களை அல்லது தரமான பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்கி ஏமாற்றப்படும் நுகர்வோரைப் பாதுகாப்பது யார்?

எல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். தொழில் ஒன்றைத் தேடிச் சென்று

# நீங்களும் ஏமாற்றப்பட்டவரா?

பின் புறமாக முதுகில் ஒரு பொதிப்பை.

கழுத்திலே ரை. வாயிலே பொய்.

விற்பனைப் பிரதிநிதிகளைப் பற்றி இப்படியாக ஒரு வேடிக்கை வாசகம் உண்டு. அதனால்தானோ என்னவோ இப்போது யாரேனும் ஒரு விற்பனைப் பிரதிநிதி எம் கண் முன்னே வந்து நின்று பேசத் தொடங்கினால் அவர் சொல்வதை நம்புவதற்கு மனம் வருவதில்லை.

இப்படியான சேல்ஸ் துறையில் உள்ளவர்கள் தங்கள் தயாரிப்புகளைச் சுலபமாக விற்பதற்காக ஒன்றிரண்டு புளுடாக்களை அவிழ்த்துவிடுவது வழக் கம். ஆனால் அப்படித்தான் பொய் சொல லிப் பொருட்களை விற்க முடியுமா? அப் படிப் பொய் சொல்லித்தான் விற்கவும் வேண்டுமா? பொய் சொல்லாமல் விற்பதற்கு வேறு வழியே இல்லையா? இது என்ன? தமது சொந்தச் சுயநலனுக்காக அடுத்தவரை ஏமாற்றுவது. வெட்கப்பட வேண்டிய விடயம்.

மீண்டும் அந்தக் காட்சியை உங்கள் முன் கொண்டு வருகிறோம். ஒரு இளவயதுப் பையனோ, பெண் பிள்ளையோ. மொன்றுசோரிக்குப் போகின்ற பையனைப்போல முதுகில் ஒரு தோள் பை. கழுத்திலே வர்ணமயமான ரை ஒன்று கட்டிக்கொண்டு வந்து நிற்கி றான். கையிலே ஒரு பொருளை வைத்தி ருக்கிறான். பார்ப்பதற்கு அதன் புறத்தோற் றம் விலைமதிப்புள்ள பொருளைப் போலக் காட்சி தருகிறது. அவன் தான் ஒரு உயர் கல்வி மாணவன் என்றும் இப்படியான பொருட்களை விற்றே படிக்கிறேன் என்றும் சொல்லுகிறான். எல்லாவற்றிற்கும் மேலாக அவன் உங்கள் வீட்டு வாயிற் படி அருகே வந்து நிற்கிறான். என்ன செய்வீர்கள்?

அவனது புறத் தோற்றமும், அவனது வயதும் படிக்கிறவனைப் போலத் தெரிகிறது. உங்கள் பிள்ளையைப் போன்ற ஒருவனைப் பார்க்கும்போது என்ன எண்ணத்தோன்றும். படிப்பதற் காகப் பணம் சேர்ப்பதாக வேறு சொல்லு கிறான். பொருளும் பெறுமதிமிக்க தாகத் தோன்றுகிறது. அழகாக வர்ண அட்டைப் பெட்டி ஒன்றில் பொதி செய்யப் பட்டிருக்கிறது. திரும்பத் திரும்பப் படிக்கப் பணம் வேண்டும் என்ற பாராயணத்தையே அவன் பாடுகிறான். அவனின் நல்ல நேரம் அடுத்த நாள் தோட்டத்தில் நடைபெற வேண்டிய ஒரு முக்கியமான வேலைக்காக உங்கள் கணவன் வைத்துவிட்டுச் சென்ற பணம் வேறு அலுமாரியில் இருக்கிறது. அதில் எடுத்தால் அவர் ஒன்றும் சொல்லவும் மாட்டார் என்றும் உங்களுக்குத் தெரியும்.

அத்துடன் அந்த விற்பனைப் பிரதிநிதியாக வந்து நிற்பவன். "இப்போது வாங்காது விட்டால் நிச்சயம் வருத்தப்படுவீர்கள். கடையில் இதன் விலை அதிகம். அவர்கள் கடை வாடகை, மின்சாரச் செலவு, ஏசி, வேலைகாரர் சம்பளம், வருமான வரி, மாநகரசபை வரி எல்லாவற்றையும் பொருட்களில் மீது வைத்து விற்பதனால் அங்கு விலை அதிகம். எமக்கு அத்தகைய செலவுகள் ஒன்றும் இல்லாதபடியால் தான் குறைவாக விற்கிறோம். என்று கூடச் சொல்கிறான். நம்புவீர்களா? மாட்டீர்களா?

ஒட்டு மொத்தமாக இவை அனைத்தையும் மனக்கண் நிறுத்தி எண்ணி எல்லாவற்றையும் ஒரு தராசில் இட்டுப் பார்த்துவிட்டு ஒரு முடிவுக்கு வந்திவிடுவீர்கள். ஆகக்குறைந்தது "அவன் பாவம். படிக்கத்தானே கேக்கிறான்" என்றாவது உங்களுக்கு எண்ணத் தோன்றும். வாங்குவிடுவீர்கள்.

வாங்கிய பொருள் உடனடியாக உங்கள் பாவனைக்குத் தேவையற்ற ஆடம்பரப் பொருளாக இருக்கும். அடுத்த தடவை ஏதாவது ஒரு பண்டிகையையிட்டு பொருட்கள் வாங்குவதற்காக நகரத்துக்குக் கடைத் தெருவுக்குப் போகும்போது நீங்கள் வாங்கிய அதே பொருள் அங்கும் உண்டு. பார்த்த வாக்கில் சும்மா ஒரு தகவலுக்காக "இது என்ன விலை?" என்று கேட்கிறீர்கள். கடைச் சிப்பந்தி அதற்குரிய விலையைச் சொல்லும்போது நிச்சயமாக உங்கள் கண்களை நீங்கள் அகல விரிப்பீர்கள்? ஏனென்றால் அவன் சொல்லுகின்ற பெறுமதி நீங்கள் வாங்கிய விலையின் பாதிக்குக் குறைவாகத் தானிருக்கும் என்று நிச்சயம் நம்பலாம். அப்போது ஒரு வேளை நீங்கள் கடைச் சிப்பந்தியிடம் திரும்பத் திரும்ப விலையைக் கேட்டு நீங்கள் ஏமாந்து போனதை உறுதி செய்யக்கூடும்.

இது போன்று வீடுகளுக்கு நேரடியாக வந்து விற்பனை செய்பவர்கள் உங்களை ஏமாற்றுகிறார்களா? இல்லையா? என்றதைப் பார்க்க வேண்டுமாயின் நீங்கள் ஒரு நாள் யாழ். மத்திய பேருந்து நிலையத்துக்குக் காலை 10-11 மணியளவில் வாருங்கள். வந்து குறிப்பாகப் பருத்தித்துறை வீதி வழியாக அல்லது பலாலி வீதி வழியாகச் செல்லும் பஸ் வண்டிகள் தரித்து நிற்கும் நிலையத்தில் வந்து நின்று பாருங்கள். ஏறத்தாழ 50 க்கு மேற்பட்ட இளம் வயதுப் பையன்களும், பெண்களும் தோளில் பைகளைப் போட்டுக் கொண்டு கைகளிலும் விற்பனைப் பொருட்களை ஏந்திக் கொண்டு வேம்படிச் சந்திக்கருகே இருந்து ஆஸ்பத்திரி வீதி வழியாக சாரி சாரியாக வருவார்கள். எல்லோரும் வந்து சேர்ந்தவுடன் ஒரு குட்டி மீற்றிங் நடக்கும். பின்னர் அவர்கள் குழுக்களாகப் பிரிந்து சென்று தத்தமது ரூட்டுக்குப் பயணமாவார்கள். கிராமங்களைக் குறி வைத்தே அவர்கள் பயணம் தொடருவதை நீங்கள் காணலாம்.

தொடங்கும்போது சாதாரண விற்பனையாளராகத்தான் சேருவார்கள். பின்னர் அவரவர் விற்பனைத் திறமையைப் பார்த்து அவர்களுக்குத் தொழில் ரீதியான பதவி உயர்வு வேறு கொடுக்கப்படுகிறது. குழுத்தலைவர் என்றும் விற்பனை முகாமையாளர் என்றும் பல்வேறு பதவிகள் வழங்கப்படும்.. குழுத் தலைவர்களை மற்றவர்கள் "சேர்" என்று அழைப்பர். விற்பனைக் கமிஸனும் அவர்களிடையே பகிர்ந்து அளிக்கப்படுகிறது. பலவிதமான ஊக்குவிப்புகளும் நடைபெறும்.

இதிலே உள்ள சமூகப் பின்னடைவுகள் என்னவென்றால். ஒன்று இவர்கள் நடவடிக்கைகளால் அப்பாவிக் கிராம மக்கள் ஏமாற்றப் படுகிறார்கள். இரண்டாவதாக இவர்கள் தாம் தொழில் சார்ந்த முயற்சிகளிலே பொய்யையும் ஏமாற்று வித்தையையும் முதலீடாகக் கொண்டு செயற்படப் பழக்கப்பட்டுக் கொள்ளுகிறார்கள். இப்படிச் செய்வது தான் மாக்கற்றிங் உத்தி என்று விற்பனையைப் பற்றிய விளக்கத்தினைப் பிழையாக விளங்கிக் கொண்டு தவ றான வழிகளிலே அவர்கள் தமது வாழ்க்கையைத் தொடர்வார்க ளேயானால் அவர்கள் எதிர்காலம் மட்டுமல்ல. அவர்கள் பிரதிநித்துவப் படுத்துகின்ற சமூகத்தின் பண்பாட்டு வரையறைகளும் கேள்விக்குறியாகிவிடும். இது பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

அது மட்டுமல்ல மக்களை ஏமாற்று வதால் கிடைக்கின்ற பணத்தை விற்பனைக் கமிஷன் என்ற பெயரில் கைநிறையக் கொடுக்கிறார்கள். அதைவிட அவர்களுக்கு எந்தவித கட்டுப்பாடும் இல்லை. அவர்கள் சுய ஒழுக்கம் பற்றி அவர்கள் தொழில் தருநர் சிந்திப்பதுவும் இல்லை. கொண்டு போகிற 2-3 பொருட்களை விற்றால் போதும். தினமும் 750-1000 ரூபாவை அவர்கள் கமிஷனாகப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். இரு பெண்களுக்கு ஒரு ஆண். அல்லது இரு ஆண்களுக்கு ஒரு பெண் என்ற விகிதத்திலேயே அவர்கள் குழுக்களாக அனுப்பப்படுகிறார்கள். இள வயதுப் பிள்ளைகள். கிராமங்களிலிருந்து வேலைக்கு வந்தவர்கள். பெரும்பாலும் சாதாரண தரத்தைத் தாண்டாதவர்கள். எதுவித வாழ்க்கை முன் அனுபவமும் இல்லாதவர்கள். தென்னிந்திய சினி மாவையும், ரீவி சீரியல்களையும் பார்த்து வாழ்க்கையின் அர்த்தத்தைத் தவறாகப் புரிந்து கொண்டவர்கள். கைநிறையக் காசு வரும்போது என்ன செய்வார்கள்?

தாராளமாகப் புகை பிடிக்கிறார்கள். ஆடம்பரமான உணவு உடை தொலை பேசி போன்றவற்றிற்கு அதிக செலவு களைச் செய்கிறார்கள். இவை நடுவே தம்மோடு வருபவர்களைத் தற்காலிக மாகக் காதலர்களாக ஏற்றுக் கொண்டு செயற்படுபவர்களும் உண்டு. இதற்கிடையில் இவர்களின் தொழில் தருநர் இவர்கள் எல்லோருக்கும் அவ்வப்போது களியாட்டம் மிகுந்த பொழுது போக்குச் சந்திப்புகளை நடத்தி ஆட விடுவதும், பாட விடுவதும் வேறு நடப்பதாக அறிகின்றோம்.

இதில் மிகவும் வருந்தத்தக்க விடயம் என்ன வெனில் கிராம மட்டங்களிலிருந்து வரும் இவர்கள் பெற்றோர்களுக்கு உண்மை யிலேயே இவர்கள் என்ன மாதிரியான தொழிலில் ஈடுபடுகிறார்கள் என்று தெரியாது. பொருட்கள் விற்பனை செய்கின்ற ஒரு கம்பெனியில் வேலை என்று மட்டும் தெரிந்து வைத்திருக்கிறார் கள். அவர்கள் போய்த் தங்களைப் போன்றவர் களை ஏமாற்றுகிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியாது.

எனவே இப்படியான தொழில்களில் இது போன்ற கண்ணியம் குறைந்த கம்பெனிகளில் மாட்டிக் கொண்டு அவர்களுக்குத் தெரியாமலே அவர்கள் வாழ்வைச் சிதைக்கின்ற இளம் சமூகத்தை எப்படிப் பாதுகாக்கப் போகிறோம். இதற்காக அவர்களுக்கு மாற்றீடு ஒன்று தேவைப்படலாம். அதை எப்படிச் சமாளிக்கப் போகிறோம்? சமூகத்தைப் பாதுகாக்கவென இருக்கின்ற அரச நிறுவனங்கள்தான் இவற்றிற்கு ஒரு தீர்வை தரவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

வளர்முக நாடுகளில் மக்கள் பாவனைக்குத் தரம் குறைந்ததெனக் காணும் பொருட்களை இறக்குமதி செய்யவோ அல்லது விற்பனை செய்யவோ தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அங்கு ஒரு தரம் குறைந்த பொருள் விற்பனை செய்யப்படுமானால் அதற்குரிய முக்கிய பொறுப்பினை அரசாங்கமே ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பார்கள் என்பது வழக்கம்.

இலங்கை போன்ற மூன்றாம் நாடுகளில் மட்டும் தரக்கட்டுப்பாடுகள் இல்லை. இருந்தாலும் அதை நுகர்வோர் பாதுகாப்புக்கருதி நியமிக்கப்பட்ட தரக் கட்டுப்பாட்டு அதிகாரிகளும் கண்டு கொள்வதில்லை. அல்லது சம்திங் வாங்கிக்கொண்டு உள்ளே வர அனுமதிக்கிறார்கள். எனவே உள்ளூர் சந்தையில் தரக் குறைவான பொருட்கள் ஏதாவது விற்பனை செய்யப்படுமாயின் அதற்குரிய பொறுப்பினை அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

உலகத்திலே உயரமான மலையின் பெயரை வைத்துக்கொண்ட ஒரு யாழ். நிறுவனம் ஆயிரம் ரூபா பெறுமதிக்குமேல் பொருட்களை வாங்கினால் ஏறத்தாழ 300 ரூபா பெறுமதியான திரவ சலவை சவர்க்காரம் ஒன்றினை இலவசமாகக் கொடுக்கின்றனர். இது எப்படி? ஒன்றில் அந்த ஆயிரத்துக்கு மேல் விற்பனை செய்யப்படும் பொருட்களுக்குள் அதன் விலை அடங்குகிறதா? இல்லாவிடில் தரக் குறைவான பொருளைத்தான் இலவசமாகக் கொடுக்கிறார்களா? ஒன்றும் புரியவில்லையே!



# அங்கதன் பதில்கள்






■ **தமிழ் அரசியல் வாதிகள் என்ன செய்கிறார்கள்?**

● என்ன செய்வதென்று அறியாது செய்ய முடியாததை தொடர்ந்தும் செய்வோம் எனச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆதவன், உடுப்பிட்டி.

■ **தமிழ் மக்களுக்கு ஒரு மாற்றுத் தலைமை என கூறப்பட்டு வருகிறதே ஏன்?**

● இருப்பவர்கலெல்லாம் ஏமாற்றும் தலைமைகளாக இருப்பதால்.



அந்தோனி, மன்னார்.

■ **சமூகத்திற்கு சேவை செய்ய ஆசையாக இருக்கிறது அரசிய லில் குதிக்கலாமா? ஆன்மீகத்தில் மூழ்கலாமா?**

● ஆன்மீக வாதிக்கும் அரசியல் வாதிக்கும் மதம் பிடித்தால் சமூகத்திற்கு மட்டுமல்ல நாட்டிற்கே கேடுதான்.

வேல்ராஜ், யாழ்ப்பாணம்.

■ **வாழ்க்கை எப்போது சிறப்பாக இருக்கும்?**

● தாரமும், பொருளாதாரமும் வலுவான ஆதாரமாக அமையும் போது.

பிரசாந்தி, அச்சுவேலி.

■ **சோதிடம் உண்மையா?**

● மனோதிடம் இல்லாதவர்களுக்கு மட்டும்.

ஜெகன், திருகோணமலை.

■ **சர்வாதிகாரம் எப்போது ஆரம்பமாகிறது?**

● அதிகாரம் அகங்காரத்துடன் கைகோர்க்கும் போது....

சிவாணி, பருத்தித்துறை.

■ **ஒரு நாடு எப்போது வளர்ச்சியையே காண முடியாத வீழ்ச்சி நிலைக்கு தள்ளப்படுகிறது?**

● ஆட்சிப்பீடங்கள் மத பீடங்களால் இயக்கப்படுகின்றது போது

சுதன், கொக்குவில்.

■ **பொது உடமைக் கொள்கையின் பிரதான எதிரி யார்?**

● உலகமயமாதல் சித்தாந்தம் மட்டுமே!

நாதன், வவுனியா.

■ **ஒரு நகைச்சுவை "மெகா சீரியல்" தயாரிக்க நினைக்கிறேன் உங்கள் ஆலோசனை என்ன?**

● தமிழ் அரசியல் வாதிகளின் செயற்பாடுகள் அனைத்துமே ஒரு முடிவற்ற நகைச்சுவை மெகா சீரியல் தானே.

ஆனந்தம், மட்டக்களப்பு.

■



**எனது மனைவி இப்பொதெல்லாம் என்னை எடுத்தெறிந்து மரியாதை இல்லாமல் பேசுகிறாள் என்ன செய்யலாம்?**

● முதலில் உங்கள் வீட்டிலிருக்கும் T.V ஐ எடுத்தெறிந்துவிடும் எல்லாம் பொங்கிவிடும்.

கனேஸ், கலட்டி.

■ **எவன் மோசமான சர்வாதிகாரி?**

● நிறைவேற்று அதிகார பலத்தில் நின்று கொண்டு ஜனநாயகம் பற்றி பேசும் சமதர்மவாதி.

கங்காமணி, சங்கானை.

■ **நாட்டில் எதற்கெடுத்தாலும் லஞ்சம் எங்கு பார்த்தாலும் ஊழல் – இந்த நாடு உருப்பட வழி இல்லையா?**

● இதெல்லாம் தேசிய மயமாகி விட்டவிடயம்



தம்பி
லஞ்சமும்
ஊழலும்
இல்லாவிட்டால் நமது அரசியல் வாதிகள் உருப்பட வழிதான் என்ன?

சர்வா, கந்தரோடை.

■



**நமது இலக்கியவாதிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?**

● குழுக்கள் குழுக்களாகக் கூடி குழப்பவாதம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

நரேன், கல்பிட்டி.

■ **குடும்ப வாழ்க்கையின் தரம் எதில் தங்கியுள்ளது?**

● அமையும் தாரத்தின் "தராதரத்தில்...."

சூட்டி, ஈச்சமோட்டை.


■ **தமிழ் திரை நகைச்சுவையில் ஆபாசம் அதிகமாகி விட்டதே?**

● மக்களும் ஆபாசத்தில் பாசம் மிக்கவர்களாக மாறிவருவதால் இருக்கலாம்.

மதிவாணன், திருகோணமலை.

■ **அன்றும்.. இன்றும்... காலம் எப்படி மாறிவிட்டது?**

● அன்று பொருட்களை வாங்க வீதி வீதியாக அலைந்தோம். இன்று பொருட்களை விற்க வீடு வீடாக அலைகிறோம்.



கஸ்த்தூரி, திருகோணமலை.

■ **இன்று நாட்டில் அநாமதேய அச்சுறுத்தல்கள் அதிகரித்து விட்டனவே!?**

● அவசரகால நிலைமை தொடர்ந்து நீடிக்க அநாமதேயர்களின் அச்சுறுத்தல்கள் தானே உதவ முடியும்.

கே.கோபி, யாழ்ப்பாணம்.

■ **ஒரு அரசியல் வாதியின் தகைமை தான் என்ன?**

● ஒரு பேரறிஞர் சொல்லியுள்ளார் ஒரு அயோக்கியனின் கடைசி புகலிடம் தான் அரசியல் என்று புரிந்து கொண்டால் சரி.

பிரணவன், வட்டுக்கோட்டை.



■ **இப்பொது உங்களுக்கு தெரிந்த சித்தர்கள் யாராவது இருக்கிறார்களா?**

● மக்களை பித்தர்களாக மாற்றும் அரசியல் சித்தர்களைத் தவிர எவருமில்லை!.

விஜிதா, யாழ்ப்பாணம்.

■ **தமிழர்களின் வாழ்வில் எப்போது விடியல் பிறக்கும்?**

● தூங்கு மூஞ்சித் தலைவர்கள் தமது சுயநல அரசியல் கதைகளில் இருந்து விழிப்படையும் போது....

காந்தரூபன், தெல்லிப்பளை.



**அங்கதனிடம்** பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கோ அல்லது இல.10, வில்வந்தெரு ஒழுங்கை கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தூமான கேள்விகளை அனுப்புவோருக்குப் 500 ரூபா பணப் பரிசில் வழங்கப்படும்.

பெயர் :.................................

முகவரி :.................................

.................................

தொலைபேசி இல. .................................



- காவலூர் ஞானம் -



# கூரைக்குள் அடக்கப்படும் விம்பிள்டன் ஆடுகளம்

## ஸ்போர்ட்ஸ் ரவுண்ட் - அப்

நினைத்த நேரம் மூடித்திறக்கும் வகையிலான ஒரு பிரமாண்டமான கூரை ஒன்றை விம்பிள்டனின் முதலாம் இலக்க ஆடுகளத்திற்கு மேல், அமைத்திருக்கிறார்கள். இதற்கான நிர்மாணச் செலவு 70 மில்லியன் பவுண்ட்ஸ்! (ஒரு பவுண்ட்ஸ்224ரூபா). இந்த ஆடுகள பார்வையாளர்களுக்கான இருக்கைகளும் இப்பொழுது 12,345ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன. . மழை காரணமாக அடிக்கடி விளையாட்டுகள் பின்போடப்படுவதைத் தவிர்க்கவே , இப்படியான கூரைகள் பொருத்தப்படுகின்றன. இந்தக் கூரையின் திறப்புவிழா நிகழ்வையொட்டி, முன்னாள் டென்னிஸ் ஜாம்பவான்களான மக்கின்றோ, ஜமி மரே, கொரான் இவானிசெவிச் போன்றோருடன் வீனஸ் வில்லியம்ஸ்ும் "கண்காட்சி மோதல்களில்" பங்குபற்றி இருக்கிறார்கள். மூன்று தடவைகள் விம்பிள்டன் சாம்பியனாக ஜொலித்த அமெரிக்கரான மக்கின்றோ (வயது60) "இது 40 வருடங்களுக்கு முன்பு செய்திருக்க வேண்டியது" என்று ஜோக்கடித்துள்ளார். இங்குள்ள இன்னொரு களமான சென்ரர் கோர்ட்டில், 10 வருடங்களுக்கு முன்பு, கூரை போடப்பட்டு விட்டது. புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கூரை, முற்றாக மூடுப்பட, 10 நிமிடங்கள் எடுக்கும் என்று சொல்லப்படுகின்றது.(சென்டர் கோர்ட் கூரை மூடப்பட 20 நிமிடங்கள் எடுக்கும்) இதனை நிர்மாணிக்க 3 வருட காலம் தேவைப்பட்டுள்ளது.

### பரிசுப் பணம் 10 மில்லியன் டொலர்கள்

1992இல் இயன் பொத்தம், கிரகாம் கூச் போன்ற கிரிக்கெட் பிரபல்யங்கள் அணிந்து ஆடிய உடைகளை ஒத்த முறையில், இந்த வருடத்திற்கான இங்கிலாந்து அணியின் "கிரிக்கெட் சீருடை" வடிவமைக்கப்பட்டுள்ளது. மேக நீல நிறம் கொண்ட இந்த சீருடையை அணிந்தபடி பட்லர், றூட், ஆர்ச்சர் ஆகியோரின் போட்டோக்கள் பிரசுர மாகி இருக்கின்றன. 24 வயதான அதிவேக பந்து வீச்சரளர் ஆர்ச்சர், உலக வெற்றிக் கிண்ண குழுவில் ஒருவராகத் தேர்வாகி இருப்பதையிட்டு, மகிழ்ச்சியில் மிதக்கின்றார். இவரது சிறப்பான விளையாட்டுத் திறமை, இந்தக் கோடை யில் ஆரம்பிக்கவுள்ள அவுஸ்திரேலிய-இங்கிலாந்து டெஸ்ட் தொடரிலும் வாய்ப்பை அளிக்கலாம் என்று பலரும் நம்புகிறார்கள்.

இதற்கிடையில், உலக வெற்றிக் கிண்ண போட்டியாளர்களுக்கான பரிசுத் தொகை 10 மில்லியன் டொலர்கள் என்று அறிவித்துள்ளார்கள். முதலாவது இடத்தைப் பெறும் அணி 4 மில்லியன் டொலர் தொகையை அள்ளிச் செல்லும், "ரன்னர்அப்" ஸ்தானத்தில் வரும் அணிக்கு கிடைப்பது 2 மில்லியன் டொலர்கள். இந்தத் தடவை 10 அணிகள் களத்தில் மோதுகின்றன. இறுதியாக நடந்த மோதல்கள் 2015இல், 14 அணிகளுக்கு இடையே இடம்பெற்றிருந்தன. (இதே பரிசுத் தொகை) முதலாவது மோதல் மே30 அன்று இங்கிலாந்திற்கும், தெ.ஆபிரிக்க அணிக்குமிடையில் ஓவல் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. 2015 இல் இறுதி மோதலில், அவுஸ்திரேலிய அணி, நியூசிலாந்து அணியைத் தோற்கடித்திருந்தது.




### அடிபாடுகள் இடையே காதல் ஜோடியொன்று!

காலத்திற்கு காலம் புதுப்புது எதிரிகளை சிருஷ்டித்து, களத்தில் இறக்குவதுதான், இந்த மல்யுத்த அமைப்பின் (WWE ) தலையாய பணி. தற்பொழுது ஷேன் மக்மஹனுக்கும் "மிஸ்'ஸ்"க்கும் இடை-யிலான முறுகல் நிலை உச்சத்திற்கு வந்துள்ளது. சமீபத்தில் அடைப்பட்ட கூட்டிற்குள் இருவரும் அடிபட்டார்கள். ஷேன் எதிராளி யால் "துவைக்கப்பட்டார்" என்றே சொல்ல வேண்டும். என்றாலும் இறுதியில் துணிகரமாக, கூட்டின் உச்சியிலிருந்து குதித்து, தன்னை "வெற்றியாளராக்கிக்" கொண்டார். மீண்டும் இந்த வாரமும் இருவரும் மோதியிருக்கிறார்கள். தனக்கு ஒரு கூட்டாளியாக மக்கின்ரயரைச் சேர்த்துக் கொண்டு, "மிஸ்" மிக மோசமான இறுதித் தாக்குதலுக்கு தயாராக, ரோமன் ரெயின்ஸ் களத்தில் மீட்பராகக் குதித்துள்ளார். இந்த நான்கு பேரும், இரண்டு புது ஜோடிகளாகி விட்டதால், அடுத்து தொடரும் மோதல் இவர்களுக்கு இடையில்தான் இருக்கும். இனிவரும் சுப்பர் ஷோ என்ற நிகழ்வில் ஷேன்-றோமன் றெயின்ஸ் ஆகிய இருவரும் மோதுவதைக் காண முடியும். இரண்டு பெல்டுகளை வைத்து கொண்டு வலம் வந்த "ஆண் மகள்" பெக்கி லிஞ்சின் ஒரு பெல்ட் "இராணியால்" பறிக்கப்பட்டு விட்டது. ஒற்றை பெல்டோடு திரிபவரை அடிக்கடி சீண்டி வம்புக்கு இழுத்து வருகிறார் "தொப்பி அழகி ரேசி" இவான்ஸ். படு முரடனான சமாவோ ஜோ மின்னல் வேகத்தில் - அதாவது இரண்டு நிமிடங்களில் தன் பெல்டை ரே மிஸ்டீரியோவிடம் இழந்துவிட்டதில் கொதித்துப் போயிருக்கிறார். முகத்தில் குருதி வழிந்தோட நின்றவரது ஆட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது அநியாயத் தீர்ப்பு என்று வெடிக்கிறார் இந்த வீரர். தன்னை ஆண் மகன் என்று சொல்லி பெருமைப்படும் பெக்கி லிஞ் காதல் வலையில் வீழந்திருக்கிறார். செத் றொலின்ஸை இவர் "துரத்தி துரத்தி" காதலிப்பதான செய்திகள் இந்தத் தடவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

### இலண்டன் மாநகரமும் மரதனும்

1981இல் ஆரம்பித்த இலண்டன் மாநகர மரதன் ஓட்டப்போட்டிகள் இந்த வருடமும் ஏப்ரல் மாதத்தில் சிறப்பாக இடம்பெற்று முடிந்துள்ளன. உலகப் பிரபல்யமான கில்லெட் நிறுவனத்தின் அனுசரணையுடன், மார்ச்29, 1981இல், 6747 போட்டியாளர்கள் பங்குபற்றிய நிகழ்வை, அன்று பீபீசி நேரடி யாக ஒளிபரப்பியிருந்தது. 2016 இல் கென்யாவின் Eliud Kipchoge என்பவர் 2:03:05. என்ற நேரகாலத்தில் ஓடி முடித்து புதிய சாதனையைப் படைத்தார். போலா ரட்கிளிப் என்ற பிரித்தானியர் ஓடி முடித்த நேரம் (2:15:25 ) இன்றுவரை எவரும் முறியடிக்காத 15வருட கால காதனையாக இருந்து வருகின்றது. இந்த வருடம் 42,000 பேர் பங்குபற்றியுள்ளார்கள். Eliud Kipchoge இந்த வருடம் சாம்பியனாகி இருக்கிறார். கடந்த வருடம் பேர்லினில் இடம்பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் 2:01:39 நேர காலத்துள், ஓடி முடித்து உலக சாதனை படைத்திருந்தார். இந்தத் தடவை இலண்டனில் இவர் வென்றது நான்காவது தடவையாகும். எடுத்த நேரம் 2மணி 2நிமி.38 வினாடிகள். பலரும் எதிர்பார்த்த பிரித்தானியரான மோ பாரா ஐந்தாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளர்.

முதலாவது பரிசாக 39,000 பவுண்ட்ஸ் பரிசுத் தொகை கொடுத்துள்ளார்கள். இரண்டாவது இடம் பெற்றவருக்கு 22,000 பவுண்ட்ஸ் தொகையும், மூன்றாவது ஆளாக வருபவருக்கு 16,000 பவுண்ட்ஸ் தொகையும் வழங்கியுள்ளார்கள். இதைவிட பல மேலதிக சிறப்பு பணப் பரிசில்களும் பலருக்கு வழங்கப்பட்டுள்ளன.















இந்தப் பத்திரிகை இல.10,வில்வம் தெரு, கொழும்புத்துறை முகவரியிலுள்ள
நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தால் 02.06.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.